128

வசந்தம்



சர்வசித், வைகாசி
மே, 1947

N47, 6-2
197253

நியூ இந்தியா

அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

அறிவிப்பு.

(தலைமை ஆபீஸ்: பம்பாய்)

புதிய ஆயுள் இன்ஷூரன்ஸ் செய்திருப்பதில் 1945-ம் வருஷத்தில் ரூ. 8,38,37,700 பூர்த்தி செய்யப்பட்டிருப்பதற்கு மேலாக 1946-ம் வருஷத்தில் ரூ. 12,39,71,856 பூர்த்தியாக்கப் பட்டிருக்கிறது. இவ்வாறு சற்றேறக் குறைய 50 சதவிகிதம் உயர்வு காணப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

நடை முதல் வருஷத்தில் தொழில் வளர்ச்சி யடையாத நகரங்களிலும், ஜில்லாக்களிலும் இன்னும் தீவிரமான ஆபீஸ்கள், அமைப்பதற்குக் கம்பெனி திட்டமிட்டிருக்கிறது.

தொழில் அனுபவமும், திறமையுமுடையவர்களின் விண்ணப்பங்கள் முதன்மையாகக் கவனிக்கப்படும்.

கீழ்க் காணும் விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும்:

மதுரைஸ் கிளை ஆபீஸ்,

4 & 5, 1-வது லேன் பீச்.

கே. கணபதி,

பிராஞ் மானேஜர்.

நம் நாட்டுத்தொழிலை ஆதரியுங்கள்
மேனேஜிங் ஏஜண்ட்ஸ் & செக்ரடரீஸ்:
R. K. ஷண்முகம் செட்டி அண்டு பிரதர்ஸ்.
நூற்றல்:
20 நெ. முதல் 44 நெ. வரை ஒத்தை, முறுக்கு, காரம் சலவை நூல் தயாரிக்கிறோம்.
எல்லா விதமான ஜவுளி ரகங்களும்:
வேஷ்டிகள், லாங்கிளாத், டவல், சர்ட்டிங், மல், சதர்,
தயாரிக்கிறோம்.
எங்களுடைய வி. 116 நெ. லாங்கிளாத் மார்க்கட்டில் பெயர் பெற்றது.
600 நெ. காடா தயாரிக்கும் உரிமை எங்களுடையதே.
வசந்தா மில்ஸ் லிமிடெட்
ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்: சிங்காநல்லூர்.
தந்தி: "வசந்தா" கோயமுத்தூர்: போன்: நெ. 25.

சிலப்பதிகாரம்

(புகார்க்காண்டம்)

சர். ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்கள்
எழுதிய எளிய, இனிய உரையுடன் வெளிவந்திருக்கிறது.

தமிழ் அறிஞர்களான திரு. எஸ். வையாபுரிப் பிள்ளை அவர்களும், திரு. ராமச்சந்திர தீக்ஷிதர் அவர்களும் முறையே சிறப்பான முன்னுரை, மதிப்புரை தந்து, நூலின் சுவையை அனுபவிக்கச் செய்திருக்கிறார்கள்.

விலை ரூ. 5—0—0

—: விவரங்களுக்கு :—

புதுமலர் நிலையம்

திருச்சி ரோடு, : : கோயமுத்தூர்.

இந்தியன் பாங்கு லிமிடெட்

தலைமை ஆபீஸ்: 'இந்தியன் பாங்கு பில்டிங்ஸ்'

நார்த் பீச் ரோடு : : மதராஸ்

சென்னை ஆபீஸ்கள் :

எஸ்பிளனேட்	திருவல்லிக்கேணி
மயிலாப்பூர்	தியாகராயநகர்
புரசவாக்கம்	மவுண்டுரோடு

எக்மோர்

தென்னிந்தியாவில் எல்லா முக்கியமான இடங்களிலும் பம்பாயிலும் பிராஞ்சுகளும் சப் ஆபிஸ்களுமுள்ளன.

வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம்	ரூ.	72,00,000
செலுத்தப்பட்ட	,,	,, 53,00,000
ரிஸர்வ் நிதி		,, 59,00,000

டிபாஸிட்டுகள் ரூ. 17 கோடிக்கு அதிகம்

எல்லாவிதமான பாங்க் அலுவல்களும் ஏற்றுக்கொண்டு நடத்தப்பெறும்

பூரா விபரங்களுக்கும் பாங்கியின் எந்த ஆபிஸிற்காவது விண்ணப்பித்துத் தெரிந்து கொள்ளலாம்.

N. கோபால அய்யர், செக்ரடரி

I B N 101

வசந்தம் சந்தா

வருஷ சந்தா	ரூ.	6—0—0
ஆறுமாத சந்தா	ரூ.	3—0—0
தனிப்பிரதி	ரூ.	0—8—0

ஆறு மாதத்திற்குக் குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப் படமாட்டாது.

மானேஜர்:—

'வசந்தம்' காரியாலயம்,
திருச்சிரோட், கோயமுத்தூர்.

உண்மையான நல்ல பட்டை உணருங்கள்.

உண்மையான நல்ல பட்டு எப்படி உணர்ச்சிக்கு இருக்கும் என்பதை அறிய ஆடம்பரமும் மனோகரமுமான மைசூர் சில்க் அணிவதன்மூலம் தெரிந்து கொள்ளலாம். அது சாதாரண பட்டுக்களைவிட அதிக நாள் உழைக்கும்.

மைசூர்
கவர்ன்மென்ட்
தயாரிப்பு.

கவர்ன்மென்ட் சில்க் வீவிங் பாக்டரி, மைசூர்.

MSK-1076

தி சென்டரல் பேங் ஆப் இந்தியா, லிமிடெட்.

(இந்தியாவிலேயே மிகப் பெரிய இந்தியன் ஜாயின்ட் ஸ்டாக் பேங்)

(ஸ்தாபிதம்: டிசம்பர் 1911)

அதிகாரம் பெற்ற மூலதனம்	ரூ. 5,25,00,000
வாக்களிக்கப் பட்ட மூலதனம்	ரூ. 5,04,39,600
செலுத்தப் பட்ட மூலதனம்	ரூ. 2,51,02,200
ரிசர்வும் மற்ற நிதிகளும்	ரூ. 2,54,72,000
டிபாசிட்டுகள் 31–12–1944ல் இருந்தபடி ...	ரூ. 94,48,67,000

தலைமை ஆபீசு:

மகாத்மா காந்தி ரோடு, போர்ட், பம்பாய்.

இந்தியா முழுவதிலும் 180க்கு மேற்பட்ட கிளை ஸ்தாபனங்களும், வளங்கும் ஸ்தாபனங்களும் பெற்றது.

மானேஜிங் டைரக்டர்:- Mr. H. C. கேப்டன், J. P.

டைரக்டர்கள்:-

Sir. H. P. மோடி K. B, E. (தலைவர்)
ஹரிதாஸ் மாதவதாஸ்
ஆர்டிஷ B. துபாஷ்
டின்ஷா D. ரோமர்
நூர்முகமத் M. சினய்
பாபுஜி தாதாபாய் லாம்
தரம்ஷே முல்ராஜ் காட்டாவ்
ஹார்மஜி பிரேம்ஜி கனிஷாரியட்
விதல் தாஸ் கான்ஜி

லண்டன் ஏஜண்டுகள் :- மெஸ்ர்ஸ், பார்க்லேஸ்பேங் லிமி மிட்லண்ட்பேங் லிமி.,

நியூயார்க் ஏஜண்டுகள்:- தி காரன்டி டிரஸ்ட் கம்பனி ஆப் நியூயார்க்

எல்லாவிதமான பாங்கி அலுவல்களும் கவனிக்கப்படும். விண்ணப்பம் செய்து விவரங்களை ஊர்ஜிதம் செய்து கொள்ளலாம்.

தென் இந்தியாவின் கிளை ஸ்தாபனங்கள்:—

அடோனி, ஆலப்பிளை, ஈரோடு, பங்களூர், பெஜவாடா, கள்ளிக் கோட்டை, கொச்சி, கோயமுத்தூர், கடப்பை, தோணி, எர்ணாகுளம், குண்டக்கல், கோவில்பட்டி, கர்நூல், மதராஸ், மதுரை, நந்தியால், பொள்ளாச்சி, சேலம், திருப்பூர், திருச்சூர், தூத்துக்குடி, திருநெல்வேலி, உடுமலைப்பேட்டை, விருதுநகர்.

ஆடை அணிவகுப்பில் இப்பொழுது அதிகம் அடிபடுவது

காலத்துக்கு தகுந்த பாஷனாக எல்லா நெம்பர் நூல், நிறம், பாட்டர்ன், அதிக நேர்த்தியாய் நெசவு செய்த துணிகள் கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சங்கத்தாரால் மதராஸ் மாகாணம் பூராவும் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

ஜாஸ்தி சக்தியால் ஓட்டப்படும் யந்திரங்களைக் கொண்டு, பெருவாரியாக உண்டாக்கும் மில் துணிகளைவிட, கைத்றி சரக்குகளுக்கு பலம் நீடித்த உழைப்பு அழகு நேர்த்தி, உபயோகம் மென்மை மிகவும் அதிகம்.

மதராஸ் கூட்டுறவு கைத்துணிகள், சங்கத்தின், மதராஸ் மற்ற ஊர்களிலிருந்து நேராக குறிப்பிட்ட கரார் விலையில் விற்பனை செய்யப்படுவதால், நடுவிலிருக்கும் வியாபாரிகளின் லாபத்தை அகற்ற சாத்தியமாகிறது. ஆகவே, எங்களிடம் சாமான்கள் வாங்குவதால், உங்கள் பணம் மீதமடையும், கஷ்டமுமில்லை

வேஷ்டிகள், புடவைகள், சட்டைகள், டவல்கள், பிரின்ட்ஸ், சிங்கம்ஸ், சின்ட்ஸ், வீடு அலங்கரிக்கத் துணிகள், மேஜைத் துணிகள், படுக்கை விரிப்புகள், கைக்குட்டைகள், லுங்கிகள், அங்கவஸ்திரங்கள், கொசுவலைகள், க்வில்ட்ஸ், தலையணிகள்.

மதராஸ் கோவாபரேடிவ்
கைத்தறி ஜவுளிகள்

கட்டுப்பாடு விலைகளில் புதிய சரக்குகள்

மதராஸ் ஹான்லூம் வீவர்ஸ் புரோவின்ஷியல் கோவாபரேடிவ் ஸோஸைடி லிட்., 6-A உட்ஸ் ரோடு, மௌண்ட் ரோடு, மதராஸ்.

மிகச்சிறந்த ஆயுர்வேத ஔஷதங்களும் சிகிச்சைகளும்!

ஒரு முறை விஜயம் செய்யுங்கள்

★

ஆர்யவைத்தியர்

பி. வி. ராமவாரியர்

ஆர்யவைத்ய பார்மசி

திருச்சி ரோடு :: கோயமுத்தூர்

★

கேட்லாக் இலவசமாக அனுப்பிவைக்கப்படும்.

THE VASANTHA DYEING WORKS,

181 Oppanakara Street
Coimbatore.

Phone No. 155. **Estd., 1921.**

Proprietor
C. M. Subramanya Chettiar
CONTRACTOR
To
THE VASANTHA MILLS, LIMITED.
SINGANALLUR.

For all kinds of dyeing border yarn and tie yarn etc., undertakes any variety of colour dyeing at reasonably cheap rates for dyeing all counts of yarn, cloth and sarees of 100 and 80 counts, wholesale orders received our due and special attention. A trial order will convince you the good quality of our work. Fastness and durability of colour guaranteed.

The Fashionable Furnishing Fabrics
DRESS TEXTILES
Ladies', Gents', Children's, Underwear, Sport Shirts etc.,
S. BEEMIAH CHETTY,
"WHITE SHOP" Coimbatore.

Telegrams :- "UMAYAL". Telephone :- 56 A.

UMAYAL WEAVING ESTT., LTD.,
Cannanore, N. Malabar.

Manufacturers of:- BEST "UMAYAL" HANDLOOM FABRICS.

BEDSPREADS
TABLE LINEN
FURNISHING FABRICS AND CURTAIN CLOTHS
DRESS MATERIALS FOR LADIES AND GENTS IN UP-TO-DATE DESIGNS AND CHARMING COLOURS
TURKISH TOWELS
BATH GLOVES
BATH MATS
MUFFLERS ETC.

ENQUIRIES EARNESTLY SOLICITED.

ENCOURAGE HANDLOOM INDUSTRY.

"UMAYAL" FABRICS
AN ASSET TO EVERY HOME
EVERYTHING MADE TO ORDERS
POPULAR FABRICS
THROUGHOUT INDIA AND CEYLON.

Distributors for Mysore State :-
SRI UMAYAL STORES,
363, Avenue Road,
BANGALORE CITY.

சந்தாதாரர்களுக்கு

'வசந்த'த்திற்கு அனுப்பும் செக்குகள், மணியார்டர், போஸ்டல் ஆர்டர் முதலியவைகளில் 'மானேஜர், வசந்தம்' என்று குறிப்பிடவேண்டும்.

மானேஜர் :
வசந்தம், 4/12A திருச்சி ரோடு, கோயமுத்தூர்.

இந்தியாவின் மிகப் பிரபல ஔஷதம்



வலியை விரைவில் போக்கடிப்பது

நரம்பு நோய், கீல் வாயு, வாயுப் பிடிப்புகள், பல்வலி, சுளுக்கு, அல்லது தலைவலி நீங்க

மிகச் சிறந்ததான ஔஷதத்தை வாங்குங்கள்.
ஆனால் அதிகப்படி செலவில்லை.

DJK 19

துணி உற்பத்தியாளர் கவனிக்க

நீங்கள் உற்பத்தி செய்யும் சட்டைத் துணிகள் கோட்டுத் துணிகள், சேலைகள், வேஷ்டிகள், முதலிய சகலவிதத் துணிகளிலும், பளபளப்பும் கண் கவர்வனப்பும் உண்டாக்க 'காலண்டர்' செய்யுங்கள்.

குறைந்த சார்ஜில் நிறைந்த அழகுடன் 'காலண்டர்' செய்து தரப்படும்.

வெளியூரிலிருந்து வரும் துணிகள் உடனே கவனித்து 'காலண்டர்' செய்து அனுப்பப்படும்.

விபரத்திற்கு அடியிற்கண்ட விலாசத்துக்கு எழுதுங்கள்.

TRINITY WEAVING ESTABLISHMENT Ltd.,

(Calendering Department)

CANNANORE : : NORTH MALABAR.

வசந்தம்

பொருளடக்கம்

மலர் 6 சர்வஜித்து ௵ வைகாசி ௴ இதழ் 2

மலர் மணம் 1

அல்டுஸ் அக்ஸ்லி
"வில்லன்" 2

சபையில் இசை
"ரத்தன பானு" 5

கலைக் கடிதம்
டி. சி. ராமசாமி 15

உவமையிலாள்
கே. டி. தேவர் 17

பை நாகரிகம்
"சுகி" 18

மல்லிகை மொக்கு
தா. நாகலிங்கம் 21

பிரார்த்தனை
கோமதி சுவாமிநாதன் 26

எப்போ வருவாரோ ?
சரஸ்வதி ராமனுத் 29

வைராகி
அ. சிங்காரவேலு 34

ரஷ்யாவும், குழந்தைகளும்
கே. சி. எஸ். அருணசலம் 46

பெற்றோருக்கு
ப. தனுஷ்கோடி 51

அன்புப் பரிசு
கே. ஸ்ரீனிவாசன் 58

நல்ல சேதி
கு. ப. சேது அம்மாள் 59

புது நிலா
இ. நரசிம்மன் 65

மந்திரக் கல்
"தேவிகா" 73

காலப் பறவை
இரா. காந்திதாசன் 75

கலை வாழ்க்கை
அரு. பாபநாசம் 80

கதையும் காரணமும்
"துளசி" 85

★

அரவிந்த்

வஸ்திரங்கள் கம்பீரமான ஆடைகளுக்கு

இந்தியாவின் அதி பிரபலமான வஸ்திரங்கள்:

நூல் புடவை, வேஷ்டி, ஷர்டிங், டுவில், கிரேப், பாப்ளீன், நயின்ஸுக், லான், மல், டோரியா, வாயில் முதலிய தினுசுகள் உள்ளன.

நீங்கள் வாங்கும் துணிகளின் மேல் இக் குறியை பார்க்கவும்

அரவிந்த் மில்ஸ் லிமிடெட், அஹமதாபாத்

எங்கும் விற்பனையாளர்கள் உள்ளனர்.

★

வசந்தம்

கௌரவ ஆசிரியர்கள்:
டி.கே. சிதம்பரநாத முதலியார் : சர். ஆர். கே. சண்முகம் செட்டியார்

நீண்ட தமிழால் உலகை
நேமியின் அளந்தான் — கம்பர்

மலர் மணம்

'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்' என்று பாடினார் அமரகவி பாரதியார். அத்தகைய வந்தனையை ஏற்கப் பூரண தகுதியுள்ள அழகிய உழவுக் காட்சியொன்று இம்மாத வசந்தம் முகப்பை அலங்கரிக்கிறது.

இளம் எழுத்தாளர் காந்திதாசனின் சிருஷ்டி 'காலப் பறவை' இந்த இதழில் ஒரு சிறந்த கட்டுரை. சிந்தனைக்கு நிறைய இடம்தந்து, இடையிடையே சில இயற்கைக்காட்சிகளையும் நல்ல முறையில் எழுத்தோவியமாகத் தீட்டுகிறார் இந்த இளைஞர்.

'சபையில் இசை' சுவைத்துப் படிக்கக்கூடிய இனிய நாடகம். போலி ரசிகத் தன்மையை மட்டம் தட்டி, உண்மைக் கலைத்திறனை அரியணை ஏற்றுகிறார் 'ரத்ன பானு' இந்த நாடகத்தில்.

உலக இலக்கிய எழுத்தாளப் பிரமுகர்களில் ஒருவரான 'அல்டூஸ் அக்ஸ்லி'யைப் பற்றியும் அவரது வாழ்க்கை வரலாறு பற்றியும் 'வில்லன்' இந்த இதழில் எழுதியிருக்கிறார். இந்த வரிசையில் 'வில்லன்' அவர்களின் கட்டுரைகளை வாசகர்கள் தொடர்ந்து எதிர்பார்க்கலாம்.

சிந்தனையைத் தூண்டும் சிறந்த கட்டுரை கதைகள் இந்த இதழில் இடம் பெற்றிருப்பதைப் படித்து சுவைக்கலாம்.

— ஆசிரியர்.

அல்டூஸ் அக்ஸ்லி

19.7.253

'வில்லன்'

பிரபல பிரிட்டிஷ் எழுத்தாளரான அல்டூஸ் அக்ஸ்லி, சிறப்பு வாய்ந்த அறிஞர் மரபில் உதித்தவர். தகப்பனார் 'கார்ன்ஹில் மாக்சின்' என்னும் பிரபல பத்திரிகையின் ஆசிரியர். தகப்பனாரைப் பெற்ற பாட்டன் பிரபல விஞ்ஞானியும், சிந்தனையாளருமான தாமஸ் என்ரி அக்ஸ்லி. தாயார் வழியில் கவிமாத்யூ ஆர்னல்டுக்கும், நாவலாசிரியை திருமதி அம்ப்ரி வார்டுக்கும் உறவினர். ஜனரஞ்சிதமான விஞ்ஞானியும், எழுத்தாளரும் கவியுமாக இன்று விளங்கிவரும் ஆசிரியர் ஜூலியன் அக்ஸ்லி இவருடைய சாக்ஷாத் தமையனர்.

பிரமிக்கத்தக்க இம்மரபின் சூழ்வில் இவர் தலை தூக்கி நிற்க முடியாமல் சாமானியராக இருந்திருக்க முடியும். ஆனல், அல்டூஸ் அப்படி இருந்துவிடக் கூடியவர் அல்லர். குடும்ப வழி பெற்ற விஞ்ஞான மனப்பான்மையைக் கலை, தத்துவம் ஆகிய விஷயங்களில் பிரயோகித்தார். ரண வைத்திய விஞ்ஞானி நுண்ணிய, கூரிய ஆயுதங்களைக் கொண்டு உடலைக் கீறி ஆராய்வதைப்போல இவர் இக்கால சமூகத்தை இக்குழப்ப நிலைக்குக் கொண்டுவந்து விட்ட ஊசல் ஊழல்களையெல்லாம் துருவித் துருவி ஆராய்ந்து வெட்ட வெளிச்சமாக்கிப் பரிகசித்தார்.

இவருடைய எழுத்துக்கள் யாவற்றிலுமே ரண வைத்திய சாலைக்குரிய வாடை அடித்தது. வாழ்க்கையுடன் தொடர்புகொள்ளுமுன்பே, அதை நோயுற்றதெனக் கொண்டு, ரண வைத்தியன் தன் வேலையைத் தொடங்குமுன் என்னென்ன முஸ்தீப்புகளையெல்லாம் செய்து கொள்வானே அவ்விதமாகவே தாமும் செய்து கொண்டார். பின்னரே ஆராயத் தொடங்கினர். சுருங்கக்கூறின் இவர் வாழ்க்கையை ஒரு வகைப் புகைக்கண்ணாடியின் மூலம் பார்த்தார் எனக் கூறலாம். அதனல் அப்பார்வை கோணியிருக்கலாம். இல்லாததை உண்டெனக் கற்பனை செய்து கொண்டு அதைத் தாக்க ஆரம்பித்திருக்கலாம்.

ஆனல், அல்டூஸ் அக்ஸ்லி நல்ல உள்ளம் படைத்தவர்; கூறிய அக விழியுடையவர். அவர் சமூகத்தை உள்ளும் புறமுமாகத் துருவித் துருவி ஆராய்ந்தார். இருண்ட உள்ளங்களைப் படம் பிடித்தார். மக்களின் மிருகப் பிராயமான வெறிகளை வெட்ட வெளிச்சமாக்கினர். சமூகத் தலைவரெனப் படுவோரிடம் காணும் குறைகளை நன்ருகத் தாக்கினர். பேராசை பிடித்தவர், இச்சகம் பாடுவோர், தற்பெருமை வீணர், பகட்டான உபாத்திமார், மூளையில்லாத பணமூட்டைகள் முதலியோர் அவரது பேனமுனையில் அகப்பட்டுக் கொண்டனர். ஆயினும் அவர் கேலி செய்ததோடு நின்றுவிடவில்லை. உண்மையும் நாடினர். மானிட தர்மத்தையே குலைத்த சடநாகரிகத்தில் அவ்வுண்மையைக் காணவில்லை. விஞ்ஞானத்திலும் அதைக் காண முடியவில்லை. இறுதியில்

தம் லட்சியத்திற்குரிய அடிப்படையை வேதாந்தத்தில் கண்டார். சென்ற 27 வருஷகாலமாக அவர் எழுதிவரும் சிறப்பு வாய்ந்த நூல்களில் வாழ்க்கையை பற்றிய அவருடைய விமர்சனங்களையும், தம் மனத்தில் படிப்படியாக ஏற்பட்டுள்ள பரிணமங்களையும் பரக்கக் காணலாம்.

அல்டுஸ் அக்ஸ்லி, நாவல், நாடகம், ஜீவிய வரலாறு, பிரயாண புத்தகம், விமர்சனம் முதலிய பல துறைகளிலும் நூல்கள் எழுதியுள்ளார். அவர் எந்நூல் எழுதினும் சரி, கருத்துக்களின் மீது அவரது கவனம் யாவும் உள்ளது. உலகின் குழப்ப நிலையைக் கண்டுவரும் அவர், அக்குழப்பங்களுக்குரிய யாவற்றையும் உண்மையாக ஆராய்ந்து தருமோபதேசம் செய்கிறார். அல்டுஸ் தமாஷுக்காகவோ பொழுது போக்குக்காகவோ எழுதுகிறவரல்லர். இக்கால எழுத்தாளருள் அவர் கண்டிப்பான சிந்தனையாளர்.

அவர் 1894-ம் ஆண்டில் பிறந்தார். சிறப்பு வாய்ந்த ஈட்டனிலும் ஆக்ஸ்போர்டிலும் கல்வி பயின்றார். முதல் மகா யுத்தம் முடிந்ததும் பல்கலைக்கழகத்தினின்று வெளியே வந்தார். இடையே மூன்று நான்கு வருடங்கள் பார்வையிழந்திருந்தார். அதிருஷ்ட வசமாக 20-ம் வயதில் அப்பார்வையை மீண்டும் பெற்றார். 1920—21-ல் 'அதினேயம்' என்னும் இலக்கிய, கலாவிமர்சனப் பத்திரிகையில் ஓர் ஆசிரியராக விருந்தார். சில கவிதைகளும் 'லிம்போ' என்ற தலைப் பெயரில் சிறுகதைத் தொகுதியொன்றும் எழுதி வெளியிட்டார். 1921ல் 'குரோம் எல்லோ' என்ற அவரது முதல் நாவல் வெளிவந்தது. அது முதல் அவரது தீவிர இலக்கிய வாழ்க்கை ஆரம்பித்தது. ஒன்றன் பின் ஒன்றாக நாவல்களும், விமர்சன நூல்களும் வெளி வரலாயின.

அல்டுஸ் அக்ஸ்லியின் இலக்கிய வாழ்க்கை படிப்படியாக பரிணமமடைந்து வந்திருக்கிறது. அப்பரிணமம் மூன்று பருவங்களுள் அடங்கும்.

முதற் பருவத்தில் அவர் தாம் 1920 முதல் 1928 வரையில் எழுதிய நூல்களில் சமூகத்தையும் சமூகப் பிரமுகர்களையும் நிந்தனையும் கேலியும் செய்தார். முதல் மகா யுத்தத்திற்குப் பின் சமூகம் அடியோடு சீர்கெட்டுக் கிடந்தது. மக்கள் விழுமிய நலன்களில் அடியோடு நம்பிக்கையிழந்திருந்தனர். விஞ்ஞானம் மிக வேகமாகவும் அளவு கடந்தும் அபிவிருத்தியடைந்தது. அவ்வபிவிருத்தியின் பயனாக மக்களின் வாழ்க்கையில் பல மாறுதல்கள் ஏற்பட்டன. ஆனால் விஞ்ஞான அபிவிருத்திக்கு ஏற்ப மக்களின் ஒழுக்க நெறி முன்னேறவில்லை. அதனால், விஞ்ஞான அபிவிருத்தியின் பயனாக ஏற்பட்ட மாறுதல்கள் சமூகத்தின் உயர் நலன்களுடன் பொருந்த அமைக்கப்படாது போயின. அபிவிருத்தியென்றால், மோட்டார் பெருக்கு, செல்வப் பெருக்கு, சௌகரியப் பெருக்கு, விளம்பரப் பெருக்கு, ஆடம்பர வாழ்க்கைப் பெருக்கு — இவைகளே. உண்மையான மானிட தருமமும், ஆத்மார்த்த நலனும் புறக்கணிக்கப் பட்டன. வேதம் சமயம் யாவும் பித்தலாட்டமும் ஆஷாடபூதித்தனமும் நிறைந்திருந்தன. எங்கும் குழப்பம், மதி மயக்கம், மன இருள். சந்துஷ்டி இல்லை, அமைதியில்லை, உள்ளொளி

யில்லை. உலகமே பைத்தியக்காரர் ஆஸ்பத்திரி மாதிரி தோன்றியது ஆசிரியருக்கு. அவர் இந்த நிலையைத் தம் வாள் போன்ற பேனாவின் முனையில் பரிகசித்தார். அவரது முதல் நாவல் 'குரோம் எல்லோ' இந்த நிலையில் தமக்கிருந்த அதிருப்தியையும் — ஏன்? அக்காலத்தில் சில அறிவாளிகளின் அதிருப்தியையுங்கூட, வெளிப்படுத்துகிறது. 'குரோம் எல்லோ' வுக்குப் பின் 'ஆண்டிக் ஹே' (1923), பாரன் லீவ்ஸ்' (1925)' ஜெஸ்டிங் பைலேட் (1926), 'பாயிண்ட், கௌண்ட்டர் பாயிண்ட்' (1928), ஆகியன வெளிவந்தன. இவற்றிலெல்லாம் பெரிய இடத்து வாழ்க்கையின் ஊழல்களை அம்பலப் படுத்துகிறார். ஆசிரியர் சமூகத்திலிருந்து விலகி நிற்கிறார்.

சமூக நிலையில் யாதொரு நலனுங் காணாமல் யாவற்றையும் துவேஷித்த அல்டுஸ், இரண்டாம் பருவத்தில் விஞ்ஞானத்தினால் ஏதேனும் நற்பயனேற்படுமாவென ஆராய்ந்தார். 1932-ல் எழுதிய "தீர நவ உலகம்" என்னும் நாவலில் புது விஞ்ஞான மனோராச்சிய மொன்றைச் சிருஷ்டித்தார். விஞ்ஞானத்திலும் அவருக்கு நம்பிக்கை விழவில்லை. இறுதியில் தம் லட்சியத்திற்கு விஞ்ஞானம் ஆதாரமாயிருக்க முடியாதென முடிவு செய்தார்.

1936-ல் 'காஜாவில் கண்ணில்லாதோர்' என்னும் நூல் வெளி வந்தது. அத்துடன் மூன்றாவது பருவம் ஆரம்பமாயிற்று. 'லட்சியமும் சாதனமும்' (1937), 'பல நடுவேனில்களுக்குப் பின்' (1939) 'மேன்மை தங்கிய சாமியார்' (1942), நித்திய தத்துவ ஞானம்' (1945) முதலிய புத்தகங்கள் தொடர்ந்து வந்தன. இக்காலத்தில்தான் வெறும் அதிருப்தியும் அவநம்பிக்கையும் நின்று அவருள்ளத்தில் மானிட தருமத்தின் புத்தொளி உதயமாயிற்று. அல்டுஸ் வேதாந்தியானார். முதற் பருவத்தில் உலகப் பிரயாணத்தின்போது இந்தியாவுக்கு விஜயம் செய்திட, அதன் கலைப்பண்புகளில் திருப்தியடையாத அல்டுஸ், இப்போது இந்தியாவின் ஆத்மாவை உணர்ந்தார். அவன் தன் களங்கங்களைக் களைந்து தூய்மை எய்தி சுவானுபூதியடைய ஆயத்தமாகவேண்டும். இத்தகைய தனி மனிதர்கள் சிலரையேனும் கொண்ட சமுதாயமே புனருத்தாரணமடையும். செயல் செயல் என்று வெறி பிடித்து அலைவதில் பயனில்லை. செயலுக்கு நல்ல கருத்து அல்லது லட்சியம் இருக்க வேண்டும். அது தன்னலமற்றதாக இருத்தல் வேண்டும். செயலின் லட்சியத்தைப் போலவே அதன் சாதனமும் நியாயமுடையதாயிருக்க வேண்டும். மேலே குறித்த நூல்களில் இவையெல்லாம் விளக்கம் பெறுகின்றன.

மக்களின் அறிவீனமும், தன்னல வெறியும், பலாத்காரமும் அவருக்கு அதீத வெறுப்பை யுண்டாக்கின. மக்களை இழிமை செய்த இவற்றினின்று தப்ப வழி தேடுகையில், இறுதியில் வேதாந்தமே அவருக்கு அமைதியளித்தது. மக்கள் உய்யும் வழியும் இதுவேயெனக் கொண்டார். பாரத நாட்டு மாமுனிவர்கள் தேடிக் கண்டுபிடித்த இவ்வழி நம்மனோர்க்கும் பழக்கப்பட்டதே யாயினும், ஏனைய ஐரோப்பியர் இன்னும் இதை ஏற்கவில்லை. தன்னல வெறியும், அகந்தையும் மறைந்தால் உலக வாழ்க்கையே மறைந்துவிடுமென அவர்கள் அஞ்சுகின்றனர்.

சபையில் இசை

'ரத்னபானு'

பாத்திரங்கள் :

ராஜு : புல்லாங்குழல் வித்வான்; வெறும்புகழில் நம்பிக்கை யற்றவன்.

ராமு : அவன் நண்பன், தன் நண்பனின் திறமையை உலகம் பாராட்ட வேண்டுமென்று துடிப்பவன்.

மங்களம் : ராஜுவின் மனைவி, தன் கணவனின் புகழ் பரவு வதில் எல்லையற்ற ஆர்வம் கொண்டவள்.

[மற்றும் சபைக்கு வரும் கனவான்கள், சீமாட்டி கள், சங்கீத 'க்ரிடிக்' குகள் முதலியோர்.]

1

[ராஜு மெய்மறந்து குழலில் ஆனந்தபைரவி ராகஆலாபனை செய்து கொண்டிருக்கிறான். அவன் நண்பன் ராமு ஓசைப் படாமல் பின்புறம் வந்து சற்று நின்று அதை ரசிக்கிறான்.]

ராமு : ராஜு... ராஜு...

[புல்லாங்குழலின் இனிய கானம் தடைபடவில்லை]

ராமு : ராஜு...... நான் வந்திருக்கி றேன்......

ராஜு : (தூங்கி விழித்தது போல) என்ன...... நீ வந்திருக்கிறாயா? நீதானே வந்திருக்கிறாய்......... சரி.........

[மீண்டும் குழலூதுகிறான்]

மங்களம் : உம்...... எப்பொழுது பார்த்தாலும் ஓயாத உழைப்பு. அசுரசாதகம்.

ராமு : ம்... யாருக்குப் பிரயோஜ னம்...... கானிலே காய்ந்த நிலவு... இந்தச் சிறு கிராமத் தில் இவ்வளவு உயர்ந்த முறை யில் வாசிக்கக் கூடிய ஒருவன் இருக்கிறான் என்று இந்தப் பரந்த உலகில் யாருக்குத் தெரி யும்?

மங் : நானும் என்னாலியன்ற வரை எவ்வளவோ சொல்லிப் பார்த்து விட்டேன்... அவருக் குப் புகழ் வேண்டாமாம்...... கீர்த்தி வேண்டாமாம்...... தன் ஆத்ம திருப்திக்காக வாசிக்கிறா ராம்.

ராமு: ம்... கலைஞனுக்கு இருக்கும் அலக்ஷிய பாவம் அவன் விருத்திக்கே தடையாக இருக்கிறதே.

ரா: (வாசிப்பதை சட்டென்று நிறுத்தி) என்ன ராமு, நீயும் அர்த்தமில்லாமல் பேச ஆரம்பித்து விட்டாய்?

ராமு: இதோ பார் ராஜு... நான் உன்னை இனி சும்மா இருக்க விடப் போவதில்லை.

ரா: நீ பேசுவதைப் பார்த்தால் எனக்கு உன் மேல் இரக்கந்தான் உண்டாகிறது.

ராமு: கொடியில் மலர்கள் குலுங்குவதால்தான் அவை ஜன்மப் பயனை அடைகின்றன இல்லையா?

ரா: உண்மை. ஆனல் மலரும் பூக்களை புழுக்கள் அரித்து விடுவதைக் காட்டிலும் அவை உண்டாகாமலே இருப்பதில் என்ன கெடுதி?

ராமு: நீ எது வேண்டுமானலும் சொல்லு. அடுத்த சபைக் கச்சேரியில் நீ வாசிக்க வேண்டும்.

ரா: சபையில் என் இசையா? (சிரிக்கிறன்) வாழ்க்கை, யோசிப்பவனுக்கு இன்ப நாடகமாக இருக்கலாம்... உணர்பவனுக்குத் துன்ப நாடகம் அது.

ராமு: ராஜு, இதையெல்லாம் கேட்டுக் கொண்டு இனியும் நான் மௌனமாக இருக்கப் போவதில்லை... நீ பொதுக் கச்சேரியில் வாசிக்கத்தான் வேண்டும்... உன்னுடைய அபாரத் திறமை வெளியுலகிற்குத் தெரியத்தான் வேண்டும்.

ரா: ஆனல், ராமு, "தெரியாது" என்று உணர்வது அறிவு அடைவதற்குப் பெரிய வழி... நீ சரியாக உணரவில்லை. அறிவை விலைக்கு வாங்க முடியும்...... கலாரசனை, அந்த மயங்கிய உணர்ச்சி, அந்தத் துல்லிய அன்பு, ஒரு நாளும் சந்தைக்கு வருவதில்லை.

ராமு: அப்படியானல் சங்கீத ரஸனை யுள்ளவர்களே இல்லை என்கிருயா?

ரா: கச்சேரிக்கு வருபவர்கள் பலரும் அப்படியில்லை என்றுதான் சொல்லுகிறேன்.

ராமு: இருக்கட்டுமே...... ரோஜா மலர் முள்ளின்றி மலர்வதில்லை.

ரா: அதற்காக?... ம்... நீ சொல்லுவதும் நிஜமே...... நகரத்திற்குள்ள வழி என்று... கண்களை மூடிக் கொண்டே போகலாம்.

ராமு: (கண்டித்து) ராஜு!

ரா: (சிரித்து) என்ன ராமு?

ராமு: நீ விகாரமான முசுக்கட்டைப் பூச்சியல்ல. துல்லியமான இழைகளைக் கொடுக்கும் பட்டுப் பூச்சி. என் நண்பனை நான் இப்படியே, எப்பொழுதும், அந்தகாரத்தில் வைத்திருக்க முடியாது.

ரா: ஒளியில் நிற்கும் போது உண்டாகும் நிழலே அவன் வாழ்வில் அதிக இருள் உடையதாக இருக்கிறது?

ராமு: இல்லை... முடியாது...... நீ ஒரு இணையற்ற கலைஞன், கலா சேவகன்...! உன் திறமை உலகத்துக்குத் தெரிய வேண்டும்... உன் உண்மையான வாசிப்பில் மாந்தர்கள் மயங்கித் திளைக்க வேண்டும்... உன்னுடைய நாத வெள்ளத்தில் எல்லோரும் தங்கள் கவலையை மறக்க வேண்டும். நதியின் முகத்துவாரத்தில்

அணை கட்டி அதைச் சமுத்திரத்திலிருந்து பிரித்து வைக்க யாராலும் முடியாது.

ரா: ராமு...... பதட்டப்படாதே. பாவம் செய்பவன் மனிதன். பாவத்துக்காக வருந்துபவன் ஞானி......... பாவத்துக்காகப் பெருமை கொள்பவன் சைத்தான்.

ராமு: உலக மக்களின் ஆத்ம திருப்திக்காக உனக்களிக்கப்பட்டிருக்கும் அதி அற்புதமான வாசிப்பை நீ ஒளித்து வைப்பது பாவமில்லையா?...... அதைப் பெருமையாக எடுத்துச் சொல்லுகிறாயே, நீ சைத்தானா?

ரா: ஆனால் கலாகூடம் ஒரு தேவாலயம். நாட்டிய அரங்கமல்ல.

ராமு: நீ எது வேண்டுமானாலும் சொல்லு... உன்னுடைய ஒரு கச்சேரிக்கு நான் ஏற்பாடு செய்தே உன்னை வந்து காண்கிறேன்.

ரா: ஹூம்...... உண்மை கசப்பாகத்தான் இருக்கும். போலி செளந்தர்யம், போக்கிரித்தனத்தையும் பாசாங்கையும் அநுசரிக்கும் வரை சத்தியம் கசப்பாகத்தான் இருக்கும்.

[புல்லாங்குழல் எடுத்து மற்றொரு ராகத்தை வாசிக்கிறான். ராமு, தான் படபடவெனப் பேசியதற்குப் பச்சாதாபப் படுகிறான்]

ராமு: ராஜூ!... நான் உணர்ச்சி மிகுதியால் ஆங்காரமாகப் பேசியதற்கு மன்னித்துக் கொள். கண்டிக்க அறியாதவன் கருணை காட்ட முடியாது.

ரா: கோபமா...... (சிரிக்கிறான்) உன் அறியாமைக்குத்தான் பரிதாபப் படுகிறேன். இமய மலை உச்சியிலுள்ள பனிக்கட்டிக்கு, உச்சி மீது இருக்கும் வரைதான் தன் அழகைப்பற்றி கர்வம். அது கரைந்தால், கடலில் விழ வேண்டிய நீர்தானே?

ராமு: தாழ்ந்த லக்ஷியத்தில் ஜயம் பெறுவதை விட, உயர்ந்த லக்ஷியத்தில் தோல்வியுறுவது சிலாக்கியமல்லவா?

ரா: ராமு!...... இதை மாத்திரம் மற்றொரு முறை சொல்லாதே. என் லக்ஷியமா இழிவானது?

ராமு: அதாவது மிகவும் தன்னலமுள்ளது என்று சொல்லுகிறேன். பகிர்ந்து கொடுக்கவே நீ விரும்பவில்லையே...... இன்னும் இரண்டு நாளில் நல்ல சபைக் கச்சேரியுடன் நான் வருகிறேன்.

ரா: சபையில் இசை... ஹூம்... தனிமையில் இனிமையில் கட்டற்று ஜனிக்கும் சங்கீதம் எங்கே... சபையின் ஆரவாரத்தில் பலவந்தமாகப் பிழியப்படும் இசை எங்கே... ஐயோ... ஆண்டவனே... இந்த உயர்ந்த லக்ஷியம்... இசையின் மகிமை, அடியோடு மாறி, வியாபாரமாக மாறி வருகிறது?...

[மிகவும் துரித காலத்தில் வாசிக்கிறான் – அவன் மனக் குழப்பத்திற்கு இசையில் உருக் கொடுக்கிறவன் போல]

2

மங்: இன்று நீங்கள் சபையில் வாசிக்க வேண்டுமல்லவா?...

ரா: ஓஹோ... இருக்கலாம்.

மங்: தாங்கள் அசிரத்தையாக இருக்கிறீர்களே...... அவர்கள்

எவ்வளவு விளம்பரப் படுத்தி யிருக்கிறார்கள்...

ரா: அப்படியா......

மங்: உங்களுக்கு, ஒரு பெரிய தொகை சன்மானமாகக் கொடுப்பதாகவும் ஏற்பாடாகி யிருக்கும் போது...

ரா: நான் அவர்களிடம் சன் மானம் கேட்கவில்லையே......

மங்: இப்படியே இருந்தால் என்ன ஆவது?...... நம் வாழ்க் கைக்கு வேண்டிய பொருள் கூட நம்மிடம் இல்லை என்பதை நீங்கள் அறியாமல்...



ரா: பைத்தியமே......... அறிவின் முதல் பாடம் என்ன...... ஐஸ்வர்ய வெறுப்பு.

மங்: இதை மறைக்கிறீர்களே — அன்பின் முதல் பாடம், ஐஸ்வர்யத்தை அனைவருக்குமாகச் செய்வதில்லையா?

ரா: மங்களம், உன் அறிவு கூட மழுங்கி வருகிறதா?...... மலர்களைவிட அழகான பொருள் உலகில் உண்டா?

மங்: ஏன்?... பழம்?... வெறும் அழகுக்காகப் புஷ்பங்களை உபயோகிக்க முடியுமேயன்றி......

ரா: உன்னைச் சொல்லி என்ன பயன்?......

மங்: (கொஞ்சம் வெறுப்பாக) இல்லையென்றால் மகிழம்பூக்களை விட வேறு ஒரு பூவையும் விரும்பாத, உங்களிடம் சொல்லித்தான் என்ன பயன்?

ரா: மகிழம்பூக்கள் ஒரு நாளிலா உலர்ந்து போகின்றன? ஆனால், அறிவற்ற மாந்தர்கள் மிகவும் அகங்காரத்துடன் உபயோகிக்கும் ரோஜாப் பூவின் கதி என்னவாகிறது? சில மணி நேரத்தில் மண்......... அப்படி மகிழம்பூ உலர்ந்தே போகட்டும், அதன் நறுமணம் போகிறதா?

மங்: உங்களோடு பேச எனக்கு வராது... பார்ப்பதற்கே அசுத்தமாகத் தோன்றும் அந்த மகிழம்பூவை .....

ரா: அவை அசுத்தமாகத் தோற்றமளிக்கின்றன என்பதால்தானே அவைகளை நான் வரவேற்கிறேன்......... தூய்மை பற்றி நீங்கள் எல்லாம் பேசுவதைப் பார்க்க எனக்கு ஆத்திரமாக வருகிறது... தூய்மை...... தூய்மை எங்கிருக்கிறது? உலகில் தெய்வீகம் பொருந்திய இசையிலும் கூட மாசு ஏற்பட்டு வருகிறதே......

[நண்பன் ராமு வருகிறான்]

ராமு: ராஜு... ராஜு... புறப்படுவோமா......

ரா: ம்... இப்போது என் திறமையைச் சோதனை போட விரும்புகிறார்களே, அந்த சபைக்காரர்களிடம் நீ தூய்மையை எதிர்பார்க்கிறாயே... அவர்கள் மனம் நிஜ சங்கீதத்தை அநுபவிப்பதற்காக ஸ்புடப் செய்யப்பட்டிருக்கிறதா?...... உன்னதமான சங்கீதத்தை அநுபவிக்க வேண்டுமென்று அவர்கள் வருகிறார்கள்? மனச் சாக்ஷியைச் தொட்டுச் சொல்லட்டும்.

ராமு: ராஜு!...... இன்றைய கச்சேரிக்கு வருபவர்கள் எல்லோரும் சிறந்த கலா விற்பனர்கள். உன் பொருட்டு நான் எங்கெல்லாம் அலைந்து, எத்தகைய வைரங்கள் மாணிக்கங்கள் போன்ற ரஸிகர்களைக்கொண்டு வந்திருக்கிறேனென நினைக்கிறாய்?

ரா: வைரம், மாணிக்கம்... ம்... பசி வேளைக்கு இந்தக் கற்களால் ஒன்றும் பிரயோஜனப்படப் போவதில்லை......

ராமு: சரி... உன்னோடு தர்க்கமோ தத்துவமோ பேச இப்போது அவகாசமில்லை. உம் சீக்கிரம் கிளம்பு...... சாயந்திரமாகப் போகிறது.

ரா: அந்தி வேளைக்குப் பின்னால் கன்னங் கரிய இரவு ஒளிந்திருப்பதை நீ எண்ணிப் பார்க்க

வில்லை போலும் ... ம்... இதோ உன்னிஷ்டம் போல வருகிறேன்... ஆனால் எனக்கு என்னமோ ஒன்று நிச்சயம்...... நிஜ சங்கீதத்தை அநுபவிக்க அங்கு வந்தவர்களில் ஒருவரிருந்தால் அது என்னுடைய அதிர்ஷ்டம்.

ராழ : என்ன......

ரா : தங்களைத்தானே விளம்பரப் படுத்திக் கொள்ள, படாடோபம் நிறைந்து வருபவர்கள் எத்தனையோ...... நாளைக்கு ஒரு பெரிய மனுஷர் கேட்பார். அதற்கு ஒரு வேளை பதில் சொல்ல வேண்டி இருக்கும். அதற்காகச் சிலர், தன்னுடைய சங்கீத ஞானத்தை மற்றவர் அறிய வேண்டாமா – இதற்காக ஒரு கோஷ்டி.

ராழ : ராஜு... நீ அநாவசியமாக அர்த்தமற்ற யோசனை செய்து மனதைப் புண்படுத்திக் கொள்ளுகிறாய்.

ரா : இதோ கிளம்பி விட்டேன்... தண்ணீரில் வாழ ஒப்புக் கொண்டு மீனோடு விரோதம் செய்து கொள்ள முடியுமா?... (பெரு மூச்சு) மருந்து பல சமயம் பலிக்காமலிருக்கலாம்.. ஆனால் விஷம்?

ராழ : நேரமாகிவிட்டது, கிளம்பு.

3

[கும்பல் ஆரவாரம் குறைந்து கச்சேரி ஆரம்பமாகிறது – ராஜு மிக நன்றாக வாசிக்கிறான்.]

ராழ : ராஜு... இன்று நீ அற்புதமாக வாசிக்கிறாயே ஜனங்கள் எவ்வளவு உற்சாகமாக ரஸிக்கிறார்கள் பார்... வாசி... இன்னும் நன்றாக வாசி...

ரா : (வாசிப்பதை சற்று நிறுத்தி) எரிந்து சாம்பலாகப் போன குவியலில் எரியும் தணல் எது?

[கச்சேரி தொடர்கிறது – ராகமாலிகை வாசிக்கிறான்.]

கனவான் 1 : வாங்க... வாங்க...... எங்கே காணவே காணோம்... சுகமா?

கன 2 : அம்பீ... சாருக்கு மொதல் ஸீட்லே எப்படியாவது கொஞ்சம் காலி செஞ்சு தரமுடியுமா?

கன 3 : மன்னிக்கணும்... நெருப்புப் பெட்டி இருக்கு... கொஞ்சம் சிகரெட்...

கன 1 : என்ன ஆத்துலே நம்ப பெண்...

சீமாட்டி : ஹூம்... கிரகச்சாரம்... என்ன செய்யறது... தும்மல்.

கன 2 : இந்தா... கண்ணம்மா... இங்கே அழாதே.

கன 1 : அந்த சங்கீத வித்வான் அழற மாதிரி.

சீமா : நெனச்சா... (விக்கல்)

கன 3 : இதேதடா வம்பாப் போச்சு.

[ராகமாலிகையில் ராஜு மோஹனம் வாசிக்கிறான்]

கன 1 : சார்... எனக்கென்னமோ இந்தக் கச்சேரியிலேயே ஒண்ணும் சரிப்படலை...... காபியை இப்படியா வாசிக்கிறது?

கன 2 : குடிக்கிறதைப் போல, ஸ்பெஷல் டிக்ரியா இல்லை போல இருக்கு.

கன 3 : இது காபியா? ப்ரமரகு சுகம் இல்லே... ஏதோ சிம்ஹேந்திரமத்யம் ஜன்யமாமே...

[மோஹனம் ஆனதும் செஞ் சுருட்டி முடிகிறது.]

கன 2 : உம்! செஞ்சுருட்டி ஒண்ணு அப்படியே நடக்கட் டுமே...

[ராஜு டக்கென்று நிறுத்து கிருன்.]

ராமு : (தாமதம்) ராஜு...ராஜு... என்ன இது?...ஏன்?

ரா : மன்னிக்கணும்... இனி என் ஞலே வாசிக்க முடியாது.

ராமு : ஏன்... என்ன... என்ன சமாச்சாரம்...

ரா : ஒன்றுமில்லே...... இனி இந்த ரஸிக சிகாமணிகளுக்கு என் ஞல் வாசிக்க முடியாது. துண்டித்துப் போன என் நரம் புகளின் எதிரொலி இது.

சீமா : என்ன! வித்வான் எழுந்து போயிட்டாரே!

கன 2 : போயிட்டாரா நான் கவ னிக்கவே இல்லே —

கன 1 : சார் – கை தட்டிப்புடு வோமா.

கன 3 : கண்டிப்பா!

[கை தட்டல் – எல்லோரும் சேர்கிருர்கள் – கூட்டம் கலே கிறது.]

சீமா : ரொம்ப அபாரமா வாசிச் சார்... ஆஹா... அற்புதம்.

கன 3 : பாடின மாதிரி கூட இருந் துன்னே சொல்லலாம்.

கன 2 : எல்லாம் அவர் வாத்திய மகிமை! எவ்வளவு கஷ்டப் பட்டு......

கன 1 : எவ்வளவு இருந்தா என்ன கச்சேரி ஏ...... ஒன்ஞு இருந் துச்சு... அந்த மனோரஞ்சித ராகம் ஒண்ணுக்கே காசு...

சீமா : வாங்க போகலாம்.

[கூட்டம் கலேகிறது.]

4

[ராஜு அநாவசியமாக வாசித்துக் கொண்டிருக்கிருன்.]

ராமு : ராஜு...

ரா : ராமுவா... வா...

ராமு : உண்மையை உணர்ந்து கொள்ளாமல் இவ்வளவு கேவ லமாக ரஸிகர்களே மதித்து இருந் தாயே... இப்பொழுது என்ன சொல்லுகிருய்?

ரா : போதும்... என்னேத் துரத்திய ரஸிகத் தன்மையைத் தானே...?

ராமு : ராஜு... உன்னே என்ன சொல்வதென்றே தெரியவில்லே. இதோ பார் பத்திரிகை விமரிச னங்களே. இந்த நூற்ருண்டின் மிக உயர்ந்த புல்லாங்குழல் வித்வான்.

ரா : ராமு அவைகளே நான் தெரி ந்து கொள்ள விரும்பவில்லே.

ராமு : 'எதிர்பாராத மேதை...... பிரமாதமான வாசிப்பு... அவர் பூர்வகல்யாணியை வாசிக்கும் போது ஸந்தியா தேவியின் பூரண ஜெலிப்பை நம் முன் கொண்டு வந்து நிறுத்துகிருர்... அந்த வசீகரத்தில் மெய் மறந்து நிற்கும் போது மற்ருெரு பேர ழகி காக்ஷியளிக்கிருள்... யார்? உஷா தேவியா!... இல்லே ரேவ குப்தி ஆலாபனே செய்கிருரா? இல்லே உஷைதான்!! பறவை கள் கலகல வென்று ஒலித்துக் கிளம்பும் இனிய ஓசையை நாமறியாமலேயே கேட்கி

றேம் !!! காலைத் தூக்கம் மதுரக் கனவுகளோடு கலையும் விடியும் நிலைமையில் இருக்கிறேம் !!! என்ன ராஜு, காதுகளை மூடிக் கொண்டாய்?

ரா: ராமு, எனக்கு இவையெல்லாம் வேண்டாம்.

ராமு: இதோ பார்...... எவ்வளவு புகழுரைகள்... பாராட்டுகள்... உன்னைப் போற்றித் துதிக்கும் இவர்களெல்லாம் முட்டாள்கள் என்ற எண்ணமா உனக்கு?

ரா: ம்... ஏதோ அவர்களில் ஒரு ரஸிகரிருக்கலாம்...... மற்றவர் பின்னே ஓடி அர்த்தமில்லாமல் தாவிக் குதிக்கும் செம்மறியாடுகள்தான் என்பது என் தாழ்மையான அபிப்பிராயம்.

ராமு: உன்னை வாயாரத் திட்டாமல் விட்டார்களே அவர்கள் நிஜமான மடையர்கள்தான்.

ரா: ம்... இவர்களுடைய இந்த விமர்சனத்துக்கும் சமுத்திரக் கரையிலுள்ள சிப்பிக் கோழிகளுக்கும் என்ன வித்தியாசம்? எவ்வளவு வேண்டுமானுலும் கிடைக்கும். குவித்துத் தள்ளலாம்...... பார்வைக்கு ரம்மியமாகவும் காக்ஷியளிக்கும்...... ஆனுல் அவைகளின் மதிப்பு — செல்லாக்காசுக்குப் போகுமா?

[வாசிப்பு வேகம் மெதுவாகத் தணிகிறது.]

5

[பல வருஷங்கள் கழிகின்றன - பல கச்சேரிகள் - எங்கும் ராஜுவின் புகழ் - பலருக்கு அவனைக் காணத் துடிப்பு - பேச ஆவல் - பழக ஆசை.]

மங்: உங்களைக் காண இவர்கள் எத்தனை நாட்களாக அலைகிருர்கள்.

ரா: என்னைப் பேட்டி காண இவர்களை யார் அலையச் சொன்னது?

மங்: நீங்கள் செய்வது உங்களுக்கே நன்ருக இருந்தால் சரி. ஏதோ ஒரு நிமிஷத்துக்கு முன்னுல் சபைக் கச்சேரிக்குப் போகிறீர்கள்... அதுவும் உங்கள் நண்பரின் தொந்திரவைப் பொருட்படுத்த முடியாமல்... முடிந்ததோ இல்லையோ பறந்து வந்து விடுகிறீர்கள்...... இந்த ஐந்து வருஷங்களாக இவ்வளவு அருமையாக வாசிக்கும் சிறந்த வித்வானைப் பற்றித் தெரிந்து கொள்ள ரஸிகர்களுக்கு ஆர்வம் இருக்காதா?

ரா: இந்த ரஸிகர்களைக் கண்டே எனக்கு அஜீரணமாகி விட்டது.

ராமு: ராஜு போதும்... என்னை வெளியில் தலை காட்டாமல் அடித்து விடுவாய் போலிருக்கிறது... நான் எல்லோரையும் உள்ளே அழைத்து வந்து விட்டேன். இதோ பின்னுல் வருகிருர்கள். நீ அவர்களுடன் பேசியே ஆகவேண்டும்.

ரா: ம்... என்னிஷ்டப்படி என்ன நடந்து வருகிறது.

[சங்கீத 'க்ரிடிக்'கள் நம்பர் 1, நம்பர் 2, நம்பர் 3 – மூவர் வருகின்றனர்.]

1, 2, 3: (உற்சாகமாக) நமஸ்காரம்...

ரா: நமஸ்காரம்...

1: உங்களை பேட்டி காண இன்று சந்தர்ப்பம் கிடைத்தது, நாங்கள் செய்த பாக்கியம்.

2: உங்களைப் போன்ற ஒரு சிறந்த வித்வானுடன் அளவளாவ எங்களுக்கு நேர்ந்ததில் எங்கள் மனம் எவ்வளவோ பூரிக்கிறது!

3: வேட்கை யுற்ற மரங்களுக்கு சேற்றிலிருந்து அவசியம் வேண்டிய தண்ணீர் கிடைக்குமென்று எங்களுக்கு நம்பிக்கை இருந்தது.

ரா: அங்கிருந்துதான் அவற்றின் மீது இடியும் விழுகிறது என்பதை மறந்து விட்டீர்கள்.

2, 7: என்ன...

ரா: ம்... நீங்கள் எதற்காக இங்கு வந்தீர்கள் என்று தயவு செய்து சொல்ல முடியுமா?

3: சங்கீதக் கச்சேரியைப் பற்றித் தங்கள் அபிப்பிராயங்களை......

2: பொதுமக்களின் சங்கீத ரஸனை சென்ற இரு ஆண்டுகளாக மிக உயர்ந்து விட்டது என்பது எங்களபிப்பிராயம்.

1: எல்லாம் தங்களால்தான் என்றால் அது மிகையில்லை.

ரா: அவர்களில் பெரும்பான்மையோருக்கு உண்மையான சங்கீதத்தை அநுபவித்து ரஸிக்கும் ஞானம் கிடையாது என்று எனக்குத் தெரியும். என் ஆற்றலை அறிந்து நீங்கள் என்னை மதிக்கவில்லை. எனக்கு எப்படியோ பெயர் கிடைத்து விட்டது. எல்லோரும் வானளாவப் பேசுகிறார்கள். நீங்களும் கும்பலில் சேரப் பார்க்கிறீர்கள்.

2: இது பொய்... இதை நாங்கள் கட்டாயம் எதிர்க்கிறோம்.

3: ஒரு பெரிய கலா சேவகனிடமிருந்து இத்தகைய முரட்டுப் பேச்சுக்களை நாங்கள் எதிர்பார்க்கவே இல்லை.

1: நான் இத்துடன் விடத் தயாராக இல்லை... நாங்கள் ரஸிகத் தன்மையற்ற கசடர்கள் என்று சொன்ன உங்கள் அர்த்தமற்ற பேச்சை நிரூபித்துக் காட்டத்தான் வேண்டும்.

ரா: நான் அவசியம் செய்வேன். இன்னும் சில நாட்களில் உங்களையே நான் நேரில் வந்து காண்கிறேன்...... அப்போது தெளிவாக உணர்வீர்கள் — ரஸிகத் தன்மையைவிட காலத்துடன் ஒத்துப் போகும் இயற்கை மடமை உங்களில் எவ்வளவு இருக்கிறதென்று.

3: (முணுமுணுத்துக் கொண்டு) எவ்வளவு சிறந்தவனானால் என்ன?

2: (முணுமுணுத்துக் கொண்டு) மரியாதை கெட்ட மனுஷன்!

1: (முணுமுணுத்துக் கொண்டு உரக்க) நாங்கள் வருகிறோம்... உங்கள் வார்த்தையை ஞாபகத்தில் வைத்து, அதை மறக்காமல் நிரூபித்து, மறுகாரியம் பார்க்க வேண்டும்

ரா: எந்தப் பொய்யும் தன் வாழ்நாள் முழுவதும் வாழ்ந்தது கிடையாது.

6

[ராஜுவின் இன்பமான வாசிப்பு ஒரு தெருவின் கோடியில் – இவன் ஏழையைப் போல மாறு வேஷமிட்டிருக்கிறான் — ஒருவரும் சீந்த வில்லை.]

ராமு : ராஜு... உன் பண்பட்ட உள்ளத்துக்கும்; சூன்யமான என் ஆர்வத்துக்கும் இடையே எவ்வளவு ஆழமான பாதாளம்.

ரா : குருடன் மற்ருெரு குருடனுக்கு எப்படி வழி காட்ட முடியும்?

[இன்னும் வாசிக்கிருன்.]

ரா : இந்தப் பொது இடத்தில் இதுவரை எவ்வளவு நேரம் வாசித்திருப்பேன். எத்தனை பேர் ஒரு நிமிஷமாவது வந்து நின்று கேட்டார்கள் (சிரித்தவாறு) எவ்வளவு காலணுக்கள் கிடைத்திருக்கின்றன...

ராமு : காலணுக்களாக 10, 12 செப்புக் காசுகள்...

ரா : பெருந் தொகைகள் கொடுத்து முன்னிடத்தில் சங்கீதம் கேட்க விரும்பும் ரஸிகர்கள் இப்போது எங்கே போய் விட்டார்கள்?

ராமு : ராஜு... என்னை மன்னித்து விடு...

ரா : மனிதன் என்ருலே இப்படித்தானே. பறவையின் துடிதுடிப்பைக் கண்டபின்தான் அதைக் கல்லால் அடித்து விட்டோமே என்ற பச்சாதாபம் ஏற்படுகிறது.

[இன்னும் நன்ருக வாசிக்கிருன். வழியில் யாரோ இரு 'ரஸிகர்'கள்.]

குரல் 1 : அப்பா...... பார்த்தால் பிச்சைக்காரன் போலிருக்கிருய், உன்னிடம் கொஞ்சம் வாசிப்பிருக்கிறது....... சங்கீதம் தெரிந்தவனிடம் சாதகம் செய்து நன்றகக் கற்றுக் கொண்டால் கூடிய சீக்கிரம் நீ முன்னுக்கு வரலாம்...

குரல் 2 : பிச்சைக்காரனிடம் திறமையைக் கண்டு விட்டான்... ம்... சீக்கிரம் வா கச்சேரிக்குப் போக வேண்டாமா?

ரா : (தாமதம்) ம்... ராமு... இப்பொழுது கண்டு கொண்டாயா உண்மையை என் சபைக் கச்சேரிக்காக டிக்கெட் கிடைக்க சண்டை போடும் இந்த ரஸிகர்களுக்கு ஏழ்மையில் சங்கீதம் தெரியவில்லையா...... சபையின் இசைக்கு மதிப்பு—ஏழையின் வாசிப்புக்கு, சாதகம்... விளக்கு எங்கே? சூரியன் எங்கே......

(இருவரும் வீடு நோக்கித் திரும்புகிருர்கள்.)

கலைக்கடிதம்

(டி. சி. ராமசாமி)

ஆருயிர் நண்பா,

எல்லோரிடத்தும் நம்முடைய ரகசியங்களைச் சொல்லி விடுகிறோமா? இல்லவே யில்லை. நமது இதயத்தோடு ஒன்றிப் போனவர்களிடம்தான் சொல்கிறோம். இதயத்தோடு ஒன்றிப் போனவர்கள் யாராயிருக்க முடியும்? அத்தியந்த நண்பர்களாகத் தானிருக்க வேண்டும். மனைவியாக இருக்கவே முடியாது. பெண்களிடம் 'ரகசியத்'தைச் சொன்னால் அம்பலத்துக்கு வந்தே தீரும்!

உலகிற்கு நாம் இருவரும் அத்தியந்த நண்பர்கள் என்று தெரியாதிருக்கலாம். ஆனால் நமக்கு...? அடடா, இத்தகைய நட்பு மட்டும் இல்லாதிருந்தால் வாழ்க்கை என்னவா யிருக்கும்? கற்பனை செய்யக்கூடப் பயமாயிருக்கிறது! அவ்வளவு கஷ்டமாயிருக்கும்! இது நிற்க.

சென்ற வாரம் நடந்த ஒரு சம்பவத்தைப் பற்றி உன்னிடம் சொல்ல வேண்டும் என்று நினைத்தேன். அந்தச் சம்பவத்தைச் சொல்லாமல் என்னமோ பீடிகை போட்டுக் கொண்டிருக்கிறேன்! மனசின் போக்கே இப்படித் தானே?

ஓய்வு நேரத்தில் பத்திரிகைகளுக்குக் கதை, கட்டுரை எழுதி வருவது உனக்குத் தெரியும். எங்கள் வீட்டுக்கு எதிரில் ஒரு பெரியம்மாவும் ஒரு யுவதியும் ஒரு சிறு பையனும் குடியிருக்கிறார்கள். சென்ற மாதம் இங்கு நீ வந்திருந்த பொழுது அவர்களைப் பார்த்திருக்கலாம். அந்தக் குடும்பத்தைப் பற்றி இரண்டொரு வார்த்தைகள். பெரியம்மாவின் மருமகள்தான் அந்த யுவதி; அழகும் அடக்கமும் நிறைந்தவள். அவளுடைய கணவனுக்குச் க்ஷய ரோகம். ஆஸ்பத்திரியில் படுத்திருக்கிறான். தனது குழந்தைக்கும் மாமியாளுக்கும் பணிவிடை செய்வதுடன், கணவனை அடிக்கடி பார்த்துவிட்டு வருவது அவள் வேலை. ஓய்வு நேரத்தில் என் மனைவியுடன் ஏதாவது பேசிக் கொண்டிருப்பாள்.

மனைவியும் அவளும் குதூகலமாகப் பேசிக் கொண்டிருக்கட்டும் என்று வெளி முற்றத்தில் உட்கார்ந்துகொள்வேன். அல்லது வெளியே எங்காவது போய் விடுவேன். நாளடைவில் நானும் அவர்களுடைய சம்பாஷணையில் கலந்து கொள்வதுண்டு.

ஒரு நாள் அவள் பேசினாள்: "நீங்கள் எழுதிய 'விபரீதம்' என்ற கதையின் முடிவு விபரீதமாயிருக்கிறது! வாழ்க்கையில் இந்த மாதிரி நடக்கவே நடக்காது. சே, என்ன கதை!"

நான் ஸ்தம்பித்துப் போய் விட்டேன்.

"கதை, கட்டுரை எழுதுவது உனக்கு எப்படித் தெரியும்?" என்று முன் யோசனையின்றி ஒரு அசட்டுக் கேள்வி கேட்டேன்.

"உங்கள் மனைவியின் மூலம் தான்" என்று பதில் அளித்தாள்.

"சரி. வாழ்க்கையில் நடக்கிற மாதிரியே எழுதிவிட்டால் அது சோபிக்குமா? எதிர்பாராத முடிவுகளேத் தானே வாசகர்கள் எதிர்பார்க்கிருர்கள்" என்றேன்.

"வாழ்க்கையில் நடப்பதை எழுதுகிற முறையில் எழுதினல் ஏன் சோபிக்காது?" என்று ஒரு குறுக்குக் கேள்வி போட்டாள்.

என்ன பதில் சொல்வது? அப்பொழுது ஒன்றும் சொல்லவில்லே. அவளிடம் நல்ல இலக்கிய ரசனே இருக்கிறது என்று தெரிந்து கொண்டேன். அவளுடைய அபிப்ராயங்கள் எனது முன்னேற்றத்துக்கு அடிகோலும் என்று ஒரு நம்பிக்கை பிறந்தது. அடிக்கடி அவள் என்னுடன் இலக்கியத்தைப் பற்றி விவாதம் செய்து கொண்டிருப்பாள். இந்த மாதிரி நாங்கள் இலக்கிய உலகத்தில் சஞ்சரித்துக் கொண்டிருக்கும் பொழுது, வெளியுலகம் எங்களேப் பற்றி என்ன நினேத்துக் கொண்டிருக்கிறது என்று சிந்திக்கவேயில்லே!

ஒரு நாள் பக்கத்து வீட்டில் பின் வருமாறு சம்பாஷணே நடந்ததைக் கேட்டதும் என் மனதில் ஏற்பட்ட கொதிப்பைச் சொல்ல இயலாது:

"டேய், இந்த எதிர் வீட்டுப் பெண் அடிக்கடி பக்கத்து வீட்டுக்கு வருகிருள். பக்கத்து வீட்டு ஆசாமி பலே ஆசாமியாயிருக்காண்டா. கட்டின பெண்டாட்டியின் முன்னிலேயிலேயே அவளோடு பேசிக் கொண்டிருக்கிருன். என்னமோப்பா, பார்க்கறதுக்கு முணுக்கு முணுக்குன்னு இருக்கான். எப்படியோ பொம்பளேகளே 'வசியம்' பண்ணிப் போடருன். அந்தப் பெரியம்மா இதைக் கவனிப்பதில்லே! ஒருக்கால் அவளும் உடந்தையாயிருக்காளோ என்னவோ?"

முன்பின் யோசனே செய்யாமல் வார்த்தைகளேக் கொட்டி அபாண்டமான பழியைச் சுமத்தப் பார்க்கிருர்களே! அடே இவர்கள்தான் இப்படி யென்ருல், இரண்டு நாட்களுக்கு முன்பு சற்று பரிச்சயமுள்ள ஒருவனும் இப்படியே கேட்டான். என்ன துணிவு! அதேயிடத்தில் அவனுக்கு சூடாக பதில் கொடுத்தேன். அதிலிருந்து அவன் இதைப் பற்றிப் பேசுவதேயில்லே!

ஏன் இந்த மாதிரி தப்பான அபிப்ராயம் கொள்கிருர்கள்? இது அவர்களுடைய பிறவிக் குணமா? அல்லது பொருமையால் ஏற்படுவதா? அல்லது நமது சமூகத்தில் ஆண்–பெண் உறவு கெட்டுக் கிடக்கிறதா? என்னவென்றே தெரியவில்லே.

பிறர் இந்த மாதிரியெல்லாம் நினேக்கிருர்கள் என்று எப்படி அவளிடம் சொல்வது? சொல்வதால் நான் கோழை யென்று எண்ணுவாளே! அல்லது அவள் மனசு என்ன பாடு படும்? மனசிலேயே 'அமுக்கி' வைத்துக் கொள்ள வேண்டியதுதான். ஆனல், அப்படி 'அமுக்கி' வைக்க முடியவில்லே. யாரிடமாவது சொல்லித்தான் தீர வேண்டும் போலிருக்கிறது. யாரிடம் சொல்ல முடியும்?

மனேவியிடமா? என்னேயே சந்தேகிக்க ஆரம்பித்து விடுவாள்! வேண்டவே வேண்டாம்!!

இப்படிக்கு,

....

உவமையிலாள்

(கே. டி. தேவர்)

பொன்வளை குலுங்க மின்வாள் போர்செயும்
நயனம் சாய,
தன்வழி உள்ளம் ஓட சண்பக
மென்பூக் கைகள்,
இன்புற யாழில் மீட்ட இருசெவி
வாயில் சேர்ந்து,
அன்பெனும் கீதம் தோய ஆயிழை
வண்ணம் தொட்டான்.

வண்ணமே சொல்வான் என்னே!
வைகிடும் அமரர் தங்கள்,
பெண்ணுல கெல்லாம் வெட்கும்
பெற்றவோர் மகளோ; காதல்
எண்ணமே அறியாப் பேதை
ஏழையர் இன்ப சாரம்
உண்ணவோ மண்ணில் வந்த
ஓர் பெரும் புதையல் என்பான்.

புதையலோ என்றால் இல்லை
பொய்யது, மண்ணுள் தானே
விதையென மறைவில் காணும்
விந்தையே திவளுக் கென்பான்?
எது பொருள் உவமை வைத்தால்
ஏற்றதென் றென்பான் அந்தோ!
இதுவரை கண்டான் இல்லை
ஏங்குவான் இளைஞன் மாதோ.

ஏங்கியே பன்னாள் செல்ல
எண்ணமொன் றோடிச் சொல்லும்
பூங்குழல் மாதிற் கிந்தப்
பூவிலோர் உவமை காண
யாங்கணும் முடியா தென்ன
ஆம் என ஆமோ தித்து
தீஞ்சுவைப் பாவைக் கந்த
செல்வியே உவமை என்றான்.

பை நாகரிகம்

"சுகி"

கடலுக்கடியில் எத்தனையோ வித விதமான செல்வங்கள் கிடப்பதாகச் சொல்லுகிறார்கள். என் குழந்தையின் பையைக் கவிழ்த்தால், முனிசிபால்டி குப்பைத் தொட்டிக்குள் கிடக்கிறவைகளை விட அபூர்வமான அற்புதமான வஸ்துக்கள் அகப்படும். குப்பையிலே குன்றுமணிகள் கிடைக்கும் என்பது பைகள் விஷயத்திலே உண்மை.

நம்மில் யார் வீட்டில்தான் பைகள் இல்லை. பையும் கையுமாகப் போகாதவர்கள் எவர்? விரலை விரிக்கட்டும். (விரலுக்குள் இருக்கும் பை ஜாக்கிறதை)

எங்கள் வீட்டிலே பைகள் எத்தனை இருக்கின்றன என்ற கணக்கு, ஜனத்தொகை கணக்கு எடுக்கிற மாதிரி. அதாவது உண்மையான புள்ளி விவரம் எடுக்க முடியாது. காய்கறிப் பை என்ற ரகமாக ஒரு சில. ஆபீஸ் பைகள் என்பதாக ஒரு குவியல். பள்ளிக்கூடத்துக்குப் பைகள் என்பதாக ஒரு கட்டு. பிரயாணத்திற்கு பிரயாணத்திற்கு என்று பெரிய பைகள் வேறு. உபயோகத்தின் தன்மையைப் போலவே, பைகள் உருவத்திலும் நெசவு முறையிலும் வித்தியாசம் உள்ளவை. துணிப் பை, ரெட்டுப் பை, சமுக்காளப் பை, கதர்ப் பை, தோல்ப் பை, சாக்குப் பை, இப்படி ரகரகமாய் பைகள். இந்தப் பைகளிலே வித விதமான படங்கள், விதவிதமான வர்ண ஜாலங்கள், சுருங்கச் சொன்னால் தேசத் தலைவர்கள் என் கைக்குள் அடக்கம்.

சில சமயங்களில் அ, ஆ, இ பையை நான் எடுத்துக்கொண்டு ஆபீஸ் போகிறது போலவே, 'அன்பே சிவம்' 'சுகந்த வாசனைத் திரவியங்கள்' பொறிக்கப்பட்ட பையை ராஜம் பள்ளிக்கூடம் எடுத்துச் செல்வாள். இந்த யுகத்தை அணுக் குண்டு யுகம் என்று விஞ்ஞானி சாஸ்திரி சொன்னாலும் பைகள் யுகம் என நாகரிக சாஸ்திரி சொல்லுவார்.

நான், கண்கவரும் புஸ்தகங்களிலிருந்து அறிந்த விஷயங்களை விட, கடுகு மிளகு சுற்றிவரும் பைகளிலிருந்து அருமை அருமையான விஷயங்களைப் படித்திருக்கிறேன். நான் அறிந்த சிறந்த ஹாஸ்யத் துணுக்கு ஒன்றை மிளகாய் வற்றல் கொண்டு வந்த பையிலிருந்து படித்தேன். விகடத் துணுக்குகள் மட்டுமா? எவ்வளவோ பெருமை வாய்ந்த அரசியல் அறிஞர்களின் சிந்தனைகள், உலகத்தின் பல பிரச்னைகளை, அவை பைகளாக ஒட்டி வந்த பின்பே நான் பார்க்கிறது!

பைக்குள்ளாக இருக்கிற வஸ்துவை விட பையிலே பொறிக்கப்படும் வாசகங்கள் ரொம்பவும் ரஸமானவை.

சுருங்கக் கூறினால், சாம்பார் சாதங்களே இதற்கு எடுத்துக்காட்டு. பைகளின் கவர்ச்சி சாதத்தில் இல்லை யென்பது தெரியும். அதே சாம்பார் சாதப் பைகளில், அருமை அருமையான விளம்பரங்கள்! நடிகர்கள், தேசத் தலைவர்கள், சினிமா ராணி

கள் முதலானப் பேர்வழிகள் பைகளிலே இருப்பார்கள். மீன், மான், முயல், அங்கு இருக்கும். சாம்பார் சாதம் வயிற்றுக் கோளாறு செய்தால், எந்த வைத்தியரைப் பார்க்கிறது? வயிற்றுக் கடுப்புக்கு என்ன மருந்து சாப்பிடுகிறது என்றும் சாம்பார் சாதப் பையிலேயே தெரிவிக்கிறார்கள்!

பைகள் நாகரீக உலகத்தின் அசுரன். போதாக் குறைக்கு, அவை விளம்பரத்தின் பகாசூரனாகவும் வந்து விட்டன. ஏதோ ஒரு மாயா சக்தி மூலம் பைகள் உலகத்தை விட்டு இந்த விநாடி மறைந்து விட்டால், பலசரக்குக் கடை படுத்து விடும். ரயில் ஏன் ஓடுகிறது? கிளப்புகளில் 'பார்சல்' இருக்காது. டிபன் கொண்டு போக முடியாமல், ஆபீசுகள், பாங்குகள் மூடப்படும். யாரும் எங்கும் கிளம்ப மாட்டார்கள்.

பொதுவான சமூகக் கஷ்டம் இருக்கட்டும். தனித் தனியாக நாம் படுகிற தொல்லைகள் எவ்வளவு மகத்தானவை!

குழந்தைகள் தமக்குத் தேவையுள்ள பொருள்களையே தமது இரு பைகளில் நிரப்புகின்றன. நாம் நமக்குப் பிடிக்காத பொருள்கள் — இன்சூரென்ஸ் பாலிஸி நோட்டீஸ், வருமானவரி நோட்டீஸ், பிறர் கடிதங்கள், மளிகை பில், ஜவுளிக்கடை நோட்டீஸ் — முதலான பொருள்களை நிரப்புகிறோம். வேண்டாதவை நிறைய இருக்கும். ஆபீஸ் சாவி, வீட்டுச் சாவி, பீரோ சாவி என்று எத்தனை விதவிதமான தொல்லைகள். கை பித்தான், கழுத்துப் பித்தான். மார்புப் பித்தான் சைகளில் போகும் போது, போடுகிற கிளிப்புகள் இத்தியாதிகள்! அழுக்குப் பட்ட உருப்படிகளிலிருந்து வெளுத்த உருப்படிகளுக்குள் இத்தனை பொருள்களும் தஞ்சமடைய வேண்டும்!

இம்மாதிரி வெளுப்படைந்த பைகளுக்குள் சாமான்களைப் புதைக்காவிட்டால், எது எது எங்கே வைத்தோமென்று தடுமாற்றம். ரயில்வே பாஸ் புக் எனது சட்டைப் பைக்குள் இல்லாவிட்டால், அதை நான் எங்கெங்கு தேட வேண்டும்? குழந்தையின் பால்புட்டி வைத்திருக்கும் அலமாரி, வாசற்படி, மேஜை அடுக்களைப் பிராந்தியம், புஸ்தக அலமாரி, (உள்ள அத்தனை புஸ்தகங்களையும் கவிழ்க்க வேண்டும்) விளையாட்டுச் சாமான் வைத்துள்ள மரப்பெட்டி, வீட்டிலுள்ள காய்கறிப் பை, துணிப்பை, இப்படி ஒரே அல்லோல கல்லோலம்.

பைகள், நமக்கு வாழ்க்கையின் ஓட்டத்திற்கு சுமுகமான ஓர் ரப்பர் வண்டி மாதிரி. சமையல்காரன் பெருங்காயத்தின் தத்துவத்தை அறிந்த மாதிரி ஆண்கள், பையின் தத்துவத்தை அறிவோம். பெண்கள் ஆடம்பரமான 'வானிட்டி பாக்' (அலங்காரப் பை) கொண்டு போகிறார்கள். அவர்களுக்குப் பையின் மகத்துவம் புரியாது. உடம்போடு ஒட்டிக்கொண்டு அங்கங்கே பந்தோபஸ்து அறைகள் போல நமது ஆடைகளில் உள்ள பைகளில் பைகளின் சௌகரியத்தை பெண்கள் அறியாதவர்கள். அதிலுள்ள பொருள்கள் தவறுவதும் கிடையாது. எப்போதாவது சட்டை, கோட்டு கழற்றியதை, கழற்றிய படி போட்டு விட்டால் பைகளில் உள்ள வஸ்துக்கள் நம்மை வந்து அடையா. பெண் தனது ஒரே அலங்காரப் பையை மறந்து

போய் விட்டால், அத்தனை பொருள்களும் போச்சு. நாம் ஏதோ ஒரு சில பொருள்களை இழக்கிறோம்.

இது நாள் வரை, நாம் இழந்து வந்துள்ள நமது 'குதிரைகளை' இந்தப் பைகள் மூலம் பத்திரப் படுத்தும் விதத்தை அறிந்தேன். நண்பர்களிடமிருந்து நல்ல பழக்கங்கள் பல என்னைத் தொத்திக் கொண்டன. பிரசங்கியாக நான் போயிருந்த காலத்தில், என் நினைப்பெல்லாம் பந்துலுக்கு வெளியே விட்டு வந்துள்ள என் மிதியடி மீதே இருந்தது. தலைமை வகித்த என் நண்பர், சதா தமது கையில் ஒரு பை வைத்திருந்தார். அதைப் பலர் எடுத்துக் கீழே வைக்க முயன்றும் அவர் கொடுக்க வில்லை. நான் விடாப்பிடியாக சோதனை போட்டதில் அதற்குள்ளே அவர் குதிரைகள்; பையை லாயமாக மாற்றி யிருந்தார்.

பையிலே செருப்புகளைப் பத்திரப்படுத்துவது இப்பொழுது சர்வ சாதாரணமாகி விட்டது. ஆனல் பைகளாலேயே தன் ஜீவியத்தை நடத்துபவன் மாஜிக் நிபுணன்.

தொப்பிக் குள்ளிருந்து கோழி முட்டை, மிட்டாய் தினுசுகள் வரவில்லை. கோட்டு, சட்டை, கால்சட்டை, இவைகளுக்குள்ளே யுள்ள பைகளிலே அத்தனை சாமான்களும், சமுத்திரத்தில் போட்ட கல் மாதிரி முங்கிப் போகும். வேண்டியவை வெளி வரும்.

இனி எப்போதாவது வேடிக்கை பார்க்க நேர்ந்தால் நீங்கள் அவன் கைகளைப் பார்க்காதீர்கள்; அவனது பைகளைக் கவனியுங்கள். எந்த வித்தைக்காரனுவது சாதாரண சட்டை வேஷ்டிகளைக்கட்டிக் கொண்டு மந்திரம் ஜபிக்கட்டும்; தந்திரங்கள் ஒன்றும் நடவா. அவன் கையிலுள்ள மந்திரக் கோலில் ஒன்றுமில்லை. பைகளிலே எத்தனை விதங்கள். காணுமல் போக்கடிக்கிறனே, பெரிய பெரிய சாமான்கள் அவ்வளவும் கோட்டுப் பைகள், சட்டைப் பைகள், அல்லது கால் சட்டைப் பைகளில் போய்ச் சேருகின்றன. நம் கண் முன்னே காட்டுகிறதாகச் சொல்லுகிற சாமான்கள் இன்னுஞ் சில பைகளில் கிடக்கும். இப்படி அமைந்துள்ள பைகள் பல. இப்படி அமைந்துள்ள பைகள் இருக்குமிடங்கள் தெரியாது. கை இயல்பாகத் தொங்கப் போடுகிற இடத்திலே, பை, பையாக கால்ச் சட்டைக்கும் வைத்திருப்பான்.

மந்திரவாதி தன் வாழ்க்கைக்குப் பைகள் வைத்திருப்பது போலவே நாமும் சௌக்ரியத்திற்குப் பல வைத்திருக்கிறோம். ஆடையில்லாதவன் அரை மனிதன் என்ற பழமொழி நாகரிகமடைந்தவர்கள் ஒப்புக்கொள்ள மாட்டார்கள்.

பையில்லாதவன் அரைப் பைத்தியம் என்ருல் யாரும் ஒப்புக் கொள்வார்கள், பெண்கள் தவிர!

★

தொடர் கதை:

மல்லிகைமொக்கு

தா. நாகலிங்கம்

அத்தியாயம் பன்னிரண்டு

அகல விரிந்த கண்களால் கையி லிருந்த கடிதத்தை இரண்டு மூன்று முறை படித்தான் முத்து சாமி. அப்படி யொன்றும் பிரமாதமான பெரிய கடிதம் அல்ல அது. ஒரு துண்டுக் கடிதம்; அதில் நான்கே நான்கு வரிகள்:

'மைத்துனர் முத்துசாமி அவர் களுக்கு, வணக்கம். தாயாருக்கு நான்கு நாட்களாக ஜுரம். புவனு இச்சமயத்தில் இங்கு இருந் தால் மிகவும் உதவியாகஇருக்கும். உங்களுக்கு வர வசதிப் படா விட் டாலும் வேறு யாரையாவது துணை பிடித்தாவது புவனுவை அனுப்பினல் நலம். அன்புள்ள, சந்திர சேகரன்!'

இவ்வளவுதான் இருந்தது அக் கடிதத்தில். கடிதத்தொடர்புடைய விஷயத்தில் அவன் சிந்தனை தீவிர மாக இறங்கி விட்டது. முத்து சாமி குடும்ப விவகாரங்களைப் பொறுத்த வரையில் ஒரு பற்றற்ற துறவிபோல் எதையும் காதில் போட்டுக் கொள்ளாமலும் எந்த விவகாரத்திலும் தலையிடா மலும் இருந்து வந்தான், இதுநாள் வரை. இதற்கு அவன் அடிக்கடி வெளியூர்களுக்குப் போய்வந்த தும், குடும்ப விவகாரங்களைக் கேட்க அவனுக்கு நேரமில்லாத தும் முக்கிய காரணங்கள். ஆனால் இப்போது விஷயம் நேரடியாக வந்துவிட்டது! விருப்பம் இருந் தாலும் இல்லா விட்டாலும் அவன் தலையிட்டுத் தீரவேண்டிய அவசியம் இப்பொழுது ஏற்பட்டு விட்டது.

ஒருகாலை மேஜையின் காலுக்கு முட்டுக் கொடுத்துக் கொண்டு நாற்காலியில் சாய்ந்தபடி கண்ணை பாதி மூடியும் மூடாமலும் வைத் துக்கொண்டு யோசிக்க ஆரம்பித் தான்.

அங்குவந்து ஏறக்குறைய மூன்று மாதங்களுக்கு மேலாகி யும் கூட புவனு ஒருமுறை கூட மாமியார் வீட்டுக்குப் போய் வந்ததாகவோ அல்லது தன் அத் தான் சந்திர சேகரன் அங்கு வந்ததாகவோ முத்துசாமி கேள் விப்பட வில்லை. இப்போதுகூட அத்தான் நேரில் வராமல் தன் னுடன் புவனுவை அழைத்துவரும் படி கடிதம் போட்டிருந்தது, 'இருவருக்கும் ஏதாவது சில்லரை மனஸ்தாபம் ஏற்பட்டிருக்கும்; அதன் விளைவுதான் இது' என்று நினைக்கவைத்தது. 'சரி அம்மாளுக் குத்தகவல் சொல்லி விட்டு ஆட்ட கால சட்டம்போல் நடந்து கொள்ளலாம்' என்ற முடிவுக்கு வந்தவனுய் கையிலிருந்த கடி

தத்தை மேஜைமேல் வைத்துவிட்டு நிமிர்ந்துஉட்கார்ந்து மற்ற கடிதங்களையும் ஒவ்வொன்ருகப் பார்க்க ஆரம்பித்தான்! கடிதங்கள் ஒரு வழியாய்ப் பார்த்து முடிந்ததும் அவற்றில் பதில் எழுத வேண்டியவைகளுக்கு எழுதிவிட்டு சேகரன் போட்ட கடிதத்தையும் கையில் எடுத்துக்கொண்டு உள்ளே சென்ருன்.

உக்கிராண அறையின் பூட்டை ஒருதரம் இழுத்துப் பார்த்துக் கொண்டு, "வேலாயுதம், தம்பிக்குக் காப்பி கொண்டுபோய்க் கொடுத்தியா?" என்று கேட்டுக் கொண்டே முன் ஹாலுக்குப் போகப் புறப்பட்டவள் எதிரில் முத்துசாமி கடிதத்துடன் வருவதைப் பார்த்து அங்கேயே சற்று நின்ருள் காமாக்ஷியம்மாள்.

"என்ன முத்து அது, கையில் காகிதம்?" என்று கேட்டவளுக்கு, "ஒம் மருமகப் பிள்ளை தான் போட்டிருக்கிருர். அத்தையம்மாளுக்கு ஜுரமாம்! புவனுவை அனுப்பி வைக்கச் சொல்லி எழுதியிருக்கிருர்" என்ருன்.

"ஒனக்கு வேறே காகிதம் வந்திருக்கா? நேத்து புவனுவுக்கு ஒண்ணு வந்திருந்தது, மாமியாருக்கு ஜுரம்ணு. அதுசரி நாளைக்குக் காலையிலே நானும் புவனுவும் மதுரைக்குப் பொறப்படரோம்! நீ துணைக்கு வருகிருயா என்ன?" என்று திடுதிப்பென்று ஒரு கேள்வியைத் தூக்கிப் போட்டாள்.

முத்துசாமி உண்மையில் கொஞ்சம் அசந்துதான் போய்விட்டான். மதுரைக்குப் புறப்படுவது பற்றி இனிமேல்தான் கலந்து யோசித்து முடிவு செய்யவேண்டும் என்று நினைத்துக் கொண்டிருந்தவனுக்கு ஏற்கனவே காமாக்ஷியம்மாளும் புவனுவும் செய்திருந்த திடீர்ப் பிரயாண முடிவு எதிர்பாராததாய் இருந்தது.

"சரிதான், பிர்யாணம் நிச்சயமாகி விட்டது! ஆமாம், அப்பாவை இதுபற்றிக் கேட்டாகி விட்டதா?" என்று சாவதானமாகக் கேட்டான்.

"ஆஹா, எல்லாம் கேட்டாகி விட்டது. உத்திரவு கொடுக்க வேண்டியது ஒன்றுதான் பாக்கி! உடனே ஆசீர்வாதம் செய்து வேண்டியதையெல்லாம் வாங்கிக் கொடுத்து ரயிலேற்றி அனுப்பி விட்டுத்தான் மறுவேலை" என்ருள் காமாக்ஷியம்மாள், வெறுப்புடன். அவள் முகத்தில் ஆத்திரமும் வேதனையும் பிரதிபலித்தது.

காமாக்ஷியம்மாளின் முகத்திலிருந்தும் பேச்சிலிருந்தும் விஷயங்களை ஒருவாறு யூகித்துக் கொண்டான் முத்துசாமி. அற்ப விஷயங்களையெல்லாம் பிரமாதமாக எடுத்துக்கொண்டு கண்மண் தெரியாமல் கோபித்துக் கொள்பவர் தன் தகப்பனர் என்பது அவனுக்கு நன்கு தெரியும். ஆகையால் விஷயத்தை ஒருமுடிவுக்குக் கொண்டுவரும் நோக்கத்துடன், "அப்படியானல் மதுரைக்குப் போகும் பயணம் உண்டா இல்லையா?" என்ருன்.

"என்ன ஆனலும் சரி. இதனல் என்ன பழிபாவம் வந்தாலும் சரி. போவது போவதுதான்! நீ கூட வருகிருயா? இல்லையா? அதற்கு முதலில் பதில் சொல்!" என்ருள் காமாக்ஷியம்மாள். அவள் பேச்சில் துணிவும், உறுதியும் பூரணமாக நிறைந்திருந்தன.

முத்துசாமி வேறொன்றும் சொல்லாமல், "சரி நாளை காலை ஏழரை மணிக்கு வண்டி; அதற்குத் தயாராய் இருந்தால் சரி. புவனுவிடமும் சொல்லிவிடு இதைப்பற்றி" என்று சொல்லிவிட்டு வெளியே சென்றான். புவனுவிடம் விஷயத்தைச் சொல்லுவதற்காக காமாக்ஷியம்மாள் மாடியை நோக்கிச் சென்றாள்.

மறுநாள் காலை ஏழுமணியிருக்கும். தாசில்தார் சதாசிவம்பிள்ளை டிரைவர், காமாக்ஷியம்மாள், புவனு, முத்துசாமி ஆகிய எல்லோரையும் திட்டிக்கொண்டிருந்தார். அவர் முன்னால் தென்பட்டவர்களுக்கெல்லாம் அன்று திட்டுக் கிடைத்தது. சமையற்கார வேலாயுதத்தின் பாடு அன்று ரொம்ப நெருக்கடியாகி விட்டது. வாய் பேசாமல் அந்த நெருக்கடியைச் சுலபமாகச் சமாளித்துக் கொண்டான், சதாசிவம் பிள்ளையின் குணத்தை நன்கு அறிந்தவனான வேலாயுதம். அன்று காலையில் சதாசிவம் பிள்ளைக்கு ஒரு முக்கியமான வேலை இருந்தது. ஏழுமணிக்கு அதைக் கவனிக்க நிச்சயித்திருந்தார். அதுபற்றி முதல் நாளே டிரைவரிடம் சொல்ல எண்ணியவர் ஏதோ வேலைத் தொல்லையில் அதைப்பற்றிச் சொல்ல மறந்து விட்டார். அது இவ்வளவு விபரீதத்தை உண்டாக்கி விடும் என்று அவர் எதிர்பார்க்க வில்லை. தவிர, தான் புவனு மதுரை போகும் விஷயத்தைத் துளிகூட ஆதரிக்காதபோது தன் பேச்சை அசட்டை செய்து விட்டு தன்னிடம் சொல்லாமல் கூட ஒன்றுக்கு மூன்று பேராக மதுரைக்குப் புறப்பட்டு விட்டது, அவருக்கு அவமானமாகப் பட்டது. அவர்கள்ஊரிலிருந்து திரும்பியதும் இதற்கு வட்டிக்கு வட்டி வாங்கவேண்டும் என்று தனக்குள் தீர்மானித்துக் கொண்டார்.

பூனைபோல் அவர் இருந்த ஆபீஸ் அறைக்குள் புகுந்து அவர் எதிரில் அடக்க ஒடுக்கமாக நின்று "கார் வந்து விட்டதுங்கோ" என்றான் வேலாயுதம்.

காலில் ஸ்லிப்பரை மாட்டிக் கொண்டு வெளி வராண்டாவிற்கு வந்தார் பிள்ளை. காரின் அருகில் நின்றுகொண்டிருந்த டிரைவர் பின்சீட்டின் கதவை ஒரு கையில் திறந்து பிடித்தபடி நின்றான். காரின் அருகில் சென்றதும் டிரைவரை ஒரு பார்வை பார்த்தார் பிள்ளை. அந்தப் பார்வையால் டிரைவரின் சர்வநாடியும் அடங்கி விட்டது. ஒன்றும் பதில் பேசாமல் தலை கவிழ்ந்து நின்றான்.

"உனக்கு யார்ரா எஜமானன்? யாரைக் கேட்டுடா ஸ்டேஷனுக்குப் போனே?" என்றார் பிள்ளை. புகழ்பெற்ற சப் இன்ஸ்பெக்டரின் முன் நிற்கும் புதுத் திருடன்போல் திருதிருவென்று விழித்தான் டிரைவர். ஐயாவின் சுருதி இன்று ரொம்பவும் ஏறிவிட்டது என்பதை அவர் பேச்சிலிருந்து தெரிந்து கொண்டான் அவன்.

"அம்மாதான்...சொன்னாங்க.." என்று பேச்சைமென்று விழுங்கினான்.

"அம்மாவாவது, ஆட்டுக் குட்டியாவது? அப்படித்தான் அம்மா சொன்னாலும் எங்கிட்ட ஏன் ஒரு பேச்சுக் கேட்டுட்டுப் போகக்கூடாது? அம்மா சொன்னாளாம், இவன் காரை எடுத்துட்டுப் போனானம்!" என்று கறுவிக் கொண்டே காரில் உட்கார்ந்தார் பிள்ளை.

"எங்கே போகட்டுங்கோ?" என்று கேட்டான் டிரைவர் கம்மிய குரலில்.

"எங்கேயாவது போய்த் தொலையேன்" என்று அடித் தொண்டையில் கத்தியவர் ஒரு விநாடிகழித்து "காஞ்சிபுரம் போ" என்றார்.

புகையையும், புழுதியையும் கக்கிக் கொண்டு கார் காஞ்சிபுரத்தை நோக்கிக் கிளம்பியது.

அத்தியாயம் பதின்மூன்று

சுமதியும் சுந்தரேசனும் சேகரன் வீட்டைக் கண்டு பிடிப்பதற்கு அதிகமாகச் சிரமப் படவில்லை. சுமதி கண்ணனை இடுப்பில் எடுத்துக் கொண்டு பின் தொடர, கையில் சாத்துக்குடி ஆரஞ்சுப்பழங்கள் அடங்கிய வலைப்பையுடன் சுந்தரேசன் சேகரன் வீட்டிற்குள் நுழைந்தபோது மணி நாலு அடித்தது.

சமையலறையை ஒட்டிய கூடத்தின் ஒரு ஓரத்தில் ஒரு கயிற்றுக் கட்டிலின் மேல் முனகியபடி ராஜம்மாள் படுத்துக்கொண்டிருந்தாள். கட்டிலுக்குக் கீழே சில மருந்துபாட்டில்கள் சில பொட்டலங்கள் ஒரு கண்ணாடி டம்ளர் முதலியவை இருந்தன. ராஜம்மாளின் நெற்றியில் ஒரு வெள்ளைத் துணி தோலோடுதோலாக ஒட்டிப் போயிருந்தது. கட்டிலின் அருகில் கையுக்கு எட்டக்கூடிய தூரத்தில் ஒரு சிறிய பெஞ்சு கிடந்தது. அதில் கோழையைத் துப்புவதற்கு ஒரு சிறிய தகர டப்பா. அதற்கு சற்று தூரத்தில் ஒரு நீண்ட பெஞ்சு போடப் பட்டிருந்தது.

எல்லாவற்றையும் ஒருதரம் பார்த்தான் சுந்தரேசன். இந்த மாதிரி நிலைமையில் அருகில்கூட ஒருவரும் இருக்காமல் போய் விட்டார்களே என்று அவனுக்கு ஆத்திரம் வந்தது. சுமதியும் அங்கலாய்த்துக் கொண்டாள் கட்டிலின் அருகில் சென்று ராஜம்மாளின் நெற்றியில் கை வைத்துப் பார்த்தாள் ஜுரம் தகித்துக் கொண்டிருந்தது. முகமெல்லாம் கருத்து சுருக்கம் விழுந்திருந்தாலும் அதிலும் ஒரு சோர்வுபடர்ந்த களை இருக்கத்தான் செய்தது. சரியான ஆகாரம் வேளா வேளைக்குக் கொடுக்கக் கூட அருகில் ஆள் இல்லாமலிருந்தது அவளுக்கு ரொம்பவும் பரிதாபமாய் இருந்தது.

நெற்றியில் கை பட்டதாலோ என்னவோ ராஜம்மாள் மெல்லக் கண்களைத் திறந்து சுற்றிலும் ஒரு முறை பார்த்தாள். யாரோ அருகில் நிற்பது தெரிந்ததே தவிர இன்னார்தான் என்று நிச்சயமாய்ச் சொல்ல முடியாதபடி அவள் கண் பார்வை மங்கலாய் இருந்தது. சோர்வினால் மீண்டும் கண்களை மூடிக் கொண்டாள்.

சற்றுநேரம் அவளையே பார்த்துக்கொண்டிருந்து விட்டு, "அந்த சாத்துக்குடியில் ஒன்றை உரியுங்களேன். சாறு பிழிந்து கொடுக்கலாம். சற்று களைப்பாவது மாறும்" என்றாள் சுமதி. அவள் பேச்சுக்குப் பதில் பேசாமல் ஒரு சாத்துக்குடியை எடுத்து உரிக்க ஆரம்பித்தான் சுந்தரேசன்.

இடுப்பிலிருந்த கண்ணனைக் கீழே சற்று தூரத்தில் இறக்கி

விட்டு அவன் முன்னே இரண்டு ஆரஞ்சுப் பழங்களை வைத்தாள். அவன் கவனம் அதில் பூரணமாய் விழுந்தது. அதன் தோலைத் தன் சிறுபற்களால் கடித்து உரிக்க உட்கார்ந்து விட்டான் கண்ணன்.

கட்டிலின் கீழே இருந்த கண்ணாடி டம்ளரைக் கையில் எடுத்துக் கொண்டு பின்புறக் கிணற்றுக்குச் சென்றாள் சுமதி. செடி கொடிகள் தண்ணீர் இன்றி வாடி வதங்கிக் காட்சியளித்தன. ஜாதி மல்லிகைச் செடியில் அரும்பியிருந்த சில மல்லிகை மொக்குகள் செடியிலேயே கருகிக்கிடந்தன. விரிந்து உதிர்ந்தபூக்கள் சில தரையில் வெம்பிக்கிடந்தன. பவழ மல்லிகை மலர்கள் காய்ந்து வரண்டு கிடந்தவை அடுப்பெரிக்க பூரண லாயக்குள்ளவையாக இரண்டு மூன்று கூடை ஆகும் போலிருந்தது. எல்லாவற்றையும் சற்றுநேரம் பார்த்துக்கொண்டிருந்த சுமதி தான் வந்த காரியத்தை நினைத்துக் கொண்டு அவசர அவசரமாய் வாளியில் தண்ணீர் இறைத்து டம்ளரை அலம்பிக் கொண்டு உள்ளே சென்றாள். சாற்றை வடிகட்ட ஒரு வெள்ளைத் துணி தேவையாக இருந்தது. பெரிய பெஞ்சின்மேல் டம்ளரை வைத்துவிட்டு நாதாங்கி போட்டிருந்த சமையலறைக்கதவைத் திறந்தாள். வீட்டில் பெண் பிள்ளை இல்லை என்பது நிதரிசனமாகத் தெரிந்தது.

சமையலறை முழுதும் அரை அங்குல உயரம் குப்பையும், தூசியும், தும்பும் நிறைந்திருந்தது. சில பாத்திர பண்டங்கள் பாசம் பிடித்திருந்தன. சாமான்கள் எல்லாம் தாறுமாறாகக் கிடந்தன. எப்படியோ சகித்துக் கொண்டு தூசியில் கால் பதிய நடந்து சென்று ஒருசிறு கயிற்றில் காயப் போட்டிருந்த ஒரு வெள்ளைத்துணியை எடுத்துக் கொண்டுவந்தாள். துணி எப்போது காயப் போட்டதோ என்னவோ கறுத்து விரைப்பாய் இருந்தது. அதையும் தண்ணீரில் நன்றாய்க் கசக்கிப் பிழிந்து விட்டுக் கொண்டு வந்தாள். சாறு எடுக்கும் பாத்திரம் இல்லாததால் கண்ணாடி டம்ளரின் மேல் துணியைப் போட்டு வாயைக்கட்டி சுந்தரேசன் உரித்த பழச் சுளைகளை ஒவ்வொன்றாய்க் கையால் பிழிய ஆரம்பித்தாள்.

இரண்டு பழங்கள் பிழிந்ததில் அந்தக் கண்ணாடி டம்ளரில் பாதிக்குமேல் வந்தது சாறு. 'இப்போதைக்கு இதுபோதும்' என்று எண்ணியவளாய் வாய்மூடியை எடுத்து ஒருபுறம் வைத்துவிட்டு ராஜம்மாளின் தோளின்மேல் மெல்லக் கைவைத்து "அத்தே, அத்தே" என்று எழுப்பினாள்.

யாரோ தன்னைத் தட்டி எழுப்புவதை உணர்ந்த ராஜம்மாள் கனவிலிருந்து விழிப்பதுபோல் விழித்து தனது மங்கிய கண்களால் யார் என்று பார்த்தாள். அப்போதும் அவளுக்கு அது யாரென்று தெரியவில்லை. ஈனஸ்வரத்தில் "யார்...புவனாவா" என்று கேட்டாள். அந்த ஈனஸ்வரத்தில் கூட புவனாவின்மேல் அவளுக்கு இருந்த அன்பும் ஆசையும் எதிரொலிக்கத்தான் செய்தது. சுமதி வாய் பேசாமல் கண்ணாடி டம்ளரிலிருந்த ரசத்தை சிறிது சிறிதாக அவள் வாயில் ஊற்றி ஏறக்குறைய பிழிந்த சாற்றை எல்லாம் உள்ளே தள்ளிவிட்டாள் சுந்தரேசனும் கட்டிலின் அருகே நின்றபடி மௌனமாக எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டிருந்தான்.

(தொடரும்)

பிரார்த்தனை

[கோமதி சுவாமிநாதன்]

[மாலை வேளை. அஸ்தமிக்கும் சமயம். காமாக்ஷிப் பாட்டி காலை நீட்டிக் கொண்டு கூடத்தில் உட்கார்ந்திருக்கிறாள். அவள் பேரன் சுமார் நான்கு வயதான சுந்தரம் அவளிடம் வருகிறான்.]

சுந்தரம்: பாட்டி! பாட்டி! ஒரு நல்ல கதை சொல்லு பாட்டி.

காமாக்ஷி: ஏண்டாப்பா! இப்படி மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்க ஓடிவரே! உடம்பெல்லாம் வேர்த்துக் கொட்டுதே!

சுந்: இல்லே பாட்டி! குழாய்க்குப் பக்கத்திலே விளையாடிட்டு இருந்தேன். அம்மா அடிக்க வந்தா அதுதான் ஓடிவந்தேன்.

காமா: அடபோக்கிரி! தலையெல்லாம் நனைஞ்சுபோச்சா! இங்கே வா பார்ப்போம்.

[தலையைத் தடவிப் பார்க்கிறாள். அவள் முகத்தில் ஆச்சர்யக் குறிகள் தோன்றுகின்றன]

பகவான் ஒருவர் இல்லாமலா போயிட்டார்! அடி அலமேலு! இங்கே வா.

அலமேலு: (சமையலறையிலிருந்து வந்து கொண்டே) என்ன கொள்ளை போர அவசரம்! அந்த தடியனுக்கு மடியிலே வைத்துக் கொண்டு என்ன சீராட்டம் வேண்டியிருக்கிறது. நீங்கள் செல்லம் கொடுத்துக் கொடுத்துதான் அவன் குட்டிச்சுவராகப் போகிறான்.

காமா: என்னாலே ஒருவரும் குட்டிச்சுவராய்ப் போய்விட மாட்டார்கள். உன் பிரசங்கத்தைக் கேட்க இப்போது கூப்பிடவில்லை. அந்தப் பழனி ஆண்டவன் மகிமையைப் பார்ப்பதற்குத்தான் கூப்பிட்டேன். குழந்தை தலையிலே சடை விழுந்திருக்கு பாரு!

அல: (ஆச்சர்யத்துடன்) என்ன சடையா? நிஜமாகவா?

காமா: நிஜமாகத்தான். ஸ்வாமியாவது பூதமாவது என்று இத்தனை நாட்களாக தட்டிக் கழித்து, குழந்தையைக் கூட்டிக்கொண்டு போய் முடியிறக்கமாட்டேன் என்று சண்டித்தனம் பண்ணினீர்களே! இப்போது அந்தப் பழனி ஆண்டவன் அடையாளம் காண்பித்திருக்கிறான்!

அல: பகவான் இல்லை யென்று யார் சொன்னார்கள்? ஆனால் முதலிலே முடியிறக்க திருப்ப

திக்குப் போகவேண்டும். எப்பவோ ஒருசமயம் எங்கஅம்மா, வேண்டிக் கொண்டு இருக்கிருள் என்பது இப்போது தான் ஞாபகத்திற்கு வருகிறது.

(சுந்தரம் எழுந்து விளையாடப் போகிருன்.)

காமா: ரொம்ப நல்லா இருக்கு! எங்கள் குலதெய்வம் பழனி ஆண்டவன் தான். முதலில் பழனியில் பிரார்த்தனை செலுத்திவிட்டுத்தான் மற்ற இடங்களுக்கு செலுத்த வேண்டும்.

அல: (புடவைத் தலைப்பினல் கண்ணைத் துடைத்துக் கொண்டு) உங்கள் வீட்டிற்கு வந்து அடிமையாய் உழைக்கிறது போதாதா? ஸ்வாமி வேண்டுதலை விஷயத்திலே கூட உங்களுக்கு அடிமையாய் இருக்க வேண்டுமா? முதலில் எங்கம்மா வேண்டுதலையைத்தான் செய்ய வேண்டும்.

காமா: (முகத்தை தோள்பட்டையில் இடித்துக்கொண்டு) நீ சொல்ரது ரொம்ப அழகுதான். அந்தச் சடையைப் பார்க்கிற போதே, அது பழனி ஆண்டவன் ஆக்ஞை என்று தெரிகிறதே! சின்னப்பெண்ணு லக்ஷணமா இதற்கெல்லாம் தலையிடாமல் பெரியவர்கள் சொல்வதைக் கேளேன்.

அல: நீங்கதான் பெரியவாளா, அழகா, இதிலெல்லாம் தலையிடாமல் சிறிசுகள் இஷ்டப்படி விட்டு ஒதுங்கி நில்லுங்களேன்!

[சுப்புசாமி அய்யர் மாடியிலிருந்து இரங்கி வருகிருர்.]

சுப்புசாமி அய்யர்: என்னடி அது அலமேலு! மூன்ருவது உலக யுத்தம் ஆரம்ப மாயிடுச்சா? ஒரே ஆர்ப்பாட்ட மாயிருக்கே!

காமா: இந்தாடாப்பா சுப்புசாமி! உன்பாடு உம் பொண்டாட்டி பாடு. ராத்திரி ரயிலிலே என்னை ஏற்றி விட்டுவிடு. நான் சாரதா வீட்டுக்குப் போய் ஒருமாதம் இருக்கப்போகிறேன்.

அல: நீங்கஏன் போறீங்க? நானே போயிடரேன். உங்கபாடு உங்க அம்மாபாடு. நான் இண்ணைக்கே எங்க அம்மா வீட்டிற்குப் போகிறேன்.

சுப்பு: பேஷ். உங்கள்பாடு எவ்வளவோ தேவலையே! நினைத்தவுடன் எந்த நிமிஷத்திலேயும், எந்த ஊருக்கும் புறப்பட்டு விடலாம். அது என்னுலே முடியுமா? கல்யாணத்திற்கு லீவு கேட்டால் சஷ்டியப்த பூர்த்தி சமயத்திலாவது லீவு கொடுப்பான் எங்க ஆபீசிலே.

காமா: இதோபாரு சுப்புசாமி! குழந்தை சுந்தரத்தின் தலையிலே சடை விழுந்திருக்கு. கூடிய சீக்கிரம் பழனி ஆண்டவன் கிட்டேபோய் முடி எடுக்க ஏற்பாடு செய்யறையா என்ன?

அல: எங்க அம்மா திருப்பதிக்கு வருகிறேனென்று வேண்டிக் கொண்டிருக்கிருள். அங்கே தான் போகவேண்டும் சொல்லி விட்டேன்.

சுப்பு: அடடா! இதற்குத்தானு இவ்வளவு வாதப்பிரதிவாதங்கள் பழனியிலே பாதியும், திருப்பதியிலே பாதியும் நிறைவேற்றி விட்டால் போச்சு!

அல: அப்படியானல் முதலில் திருப்பதிக்குத்தான் போக வேண்டும்.

சுப்: அது இருக்கட்டும். அதற்கு முன்னலே உன் செல்லப்பிள்ளை தலையிலே நாலு குட்டுக் குட்ட

வேண்டும். ஒரு கவர் ஒட்டுவதற்காக கோந்து பாட்டிலைப் பார்த்தேன். அந்த பாட்டிலைப் பூராவும் மேஜைமீது கவிழ்த்து விட்டு வந்திருக்கிறான்.

[சுந்தரம் சுப்புசாமி அய்யர் கூடத்தில் நிற்பதைக் கவனியாமல் குழாயடியிலிருந்து வருகிறான்.]

சுப்பு: டேய்! இங்கேவாடா தடிப்பயலே! எப்போடா மேஜைமீதுள்ள கோந்து பாட்டிலைக் கவிழ்த்தாய்?

[சுந்திரத்தின் கைகளைப் பிடித்துக்கொள்கிறார்]

சுந்: நான் கொட்டவில்லை அப்பா! பந்தை விட்டு எறிந்தேன். அது பாட்டில்மேலே பட்டுட்டது. இன்னம்மே அப்படி விஷமம் பண்ணுமலிருக்கேன் அப்பா!

சுப்பு: என்னுடை ஆபீஸ் ரூமிலே வந்து விளையாடாதே என்று எத்தனைநாள் சொல்லி யிருக்கேன். அந்த பாட்டிலிலே, பசை ஒட்டுவதற்காக ஒரு சின்ன பிரஷ் போட்டிருந்தேனே! அது எங்கே.

சுந்: எனக்குத் தெரியாதப்பா! (திறுதிறுவென்று முழிக்கிறான்)

சுப்பு: தெரியாதா? (கோபத்துடன் இரண்டு குட்டுக்குட்டுகிறார். அவர் முகத்தில் ஆச்சர்யக் குறிகள் தோன்றுகின்றன) அம்மா! அப்புறம் எந்த ஊர்லே போய் முதலில் பிரார்த்தனை செலுத்தவேண்டும் என்ற முடிவிற்கு வந்தீர்கள்?

காமா: உன்னுடை விதண்டாவாதத்திற்கு யார் பதில் சொல்லுவார்கள்

சுப்பு: இல்லைஅம்மா! இப்போது சுந்தரத்திற்கு வேண்டுதலை இல்லை. கோந்து பாட்டில் பிரஷிற்குத்தான் பிரார்த்தனை செலுத்தவேண்டும்.

காமா, அல: (ஆச்சர்யத்துடன்) என்ன!

சுப்பு: உன் செல்லக் குழந்தை, அழகு சுந்தரம் கோந்து பாட்டில் பிரஷை எடுத்து தலையில் சொருகிக் கொண்டிருக்கிறான். அதைப் பார்த்துட்டு சடை போட்டிருக்கு என்று நீங்கள் சண்டை போட ஆரம்பித்து விட்டீர்கள். இப்போ அந்த பாட்டில் பிரஷை பழனிக்கு அனுப்பவா? திருப்பதிக்கு அனுப்பவா?

காமா: அலமேலுவோட அம்மா வேண்டுதலை. திருப்பதிக்கே முதலில் போகட்டும்.

அல: இல்லை. இல்லை. உங்க குல தெய்வம் பழனிக்கே முதலில் போகட்டும்.

சுப்பு: எனக்கு சாப்பிட நேரமாச்சு. இலையைப்போடு, முதலில் அந்த பிரஷ் பாட்டிலுக்குப் போய்ச் சேரட்டும்.

(போகிறார்கள்)

★

எப்போ வருவாரோ?

(சரஸ்வதி ராம்னுத்)

தற்சமயம் சிம்மாசலத்திற்கு, பஸ் போக்கு வரத்து வசதி இருக்கிறது; ஆனால் 20 வருஷங்களுக்கு முன்பு ஒரு வசதியும் கிடையாது. ஒரே காடு; நடமாட்டமே அதிகமிராது. சிம்மாசலக்கோவில் சந்தனக் காப்பு, தேர்விழா முதலிய சமயங்களில் தான் ஜனங்கள் கூடுவார்கள். ஜே, ஜே என்று ஒரே அமர்களப் படும்; ஜனநடமாட்டமும் அப்பொழுதுதான். சாதாரண சமயங்களில் அதிகப் பேர் வர மாட்டார்கள். மலையில் இருந்த மலசர்கள் ஒத்தையடிப்பாதை வழியே கீழே ஊருக்குள் வந்து வியாபாரமோ, விற்பனையோ செய்து போவார்கள்.

யார் அங்கே போகா விட்டாலும், பாரஸ்ட் ஆபீசர்களான நாங்கள் அங்கே போகத்தானே வேண்டும்? எனக்கோ, ஊர் புதிது. பாஷையும் புதிது. அறைகுறைத் தெலுங்கு தெரிந்துகொண்டேன். ஆனால் மனதிற்குப் பிடிக்கவே இல்லை. கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டாற்போல் இருந்தது.

அன்று மற்றொரு காட்டிற்கு இன்ஸ்பெக்ஷனுக்குப் புறப்பட்டேன். சுற்றிலும் ஒரே காடு. பாதை வழியே, ஏதோ சிந்தனையில் ஈடுபட்டவனாய் மனம்போன வாறு நடந்து போய் கொண்டிருந்தேன். பின்னால் வந்த சேவகர்கள் என்னைப் பற்றி என்ன நினைப்பார்கள் என்றுகூட எனக்குத் தோன்றவில்லை.

மலை வழியில் பாதையோரத்தில் உட்கார்ந்திருந்த ஒரு மலைஜாதி யுவதியின் தோற்றம் என் கவனத்தைக் கவர்ந்தது. காட்டில் அபரிமிதமாகக் கிடைக்கும் முந்திரி பழக் குவியலுக்கு எதிரே உட்கார்ந்து அதை விலைக்கு பிரித்து வைத்துக் கொண்டிருந்தாள் யுவதி.

நான் வருவதைப் பார்த்த மலைஜாதி ஸ்திரி முகம் மலர்ந்தது. நான் அவளை நெருங்குவதற்கு முன்பே தெலுங்கில் "நீங்கள் மதருஸியா" என்றாள்.

என் நடை உடை பாவனைகள் நான் மதருஸி என்பதை அவளுக்கு அறிவித்து விட்டன போலும் காட்டில் இருக்கும் இந்த மலைஜாதி ஸ்திரி என்னை எப்படி அறிவாள்?

ஆச்சரியத்துடன் "ஆம்" என்று தலை அசைத்தேன்.

ஆர்வத்துடன் "உங்களுக்கு பரசுராமைத் தெரியுங்களா" என்றாள்.

"பரசுராமா? எந்த பரசுராம்?"

அவள் முகம் வாடிற்று மெதுவான குரலில் "பரசுராம் பிள்ளைங்க"

"எந்தப் பரசுராம் பிள்ளை?" என்றேன் மறுபடியும்.

எதிரே இருந்த பெரிய பாலத்தைச் சுட்டிக் காட்டியவாறே "அதைக் கட்டின போது வந்த மேஸ்திரி தானுங்க" என்றாள்.

"எனக்குத் தெரியாதே" என்றேன்.

"நீங்க, பட்டணம் தானுங்க, அவரோட ஊர் அது தான், தெரியாதுங்க?" அவளுடைய குரலில் வண்ணம் சிறிது யோசித்தாள். பிறகு "எந்தத் தெருவா? தெரியாதே, ஊர்தானுங்க தெரியும்,

தொனிக்கும் ஏக்கத்தை அறிந்து "எந்தத்தெருவு தெரியுமா?" என்றேன்.

கைகளை முகத்தில் ஊன்றிய உங்க ஊர் தானுங்களே, உங்களுக்குத் தெரியாதுங்களா?" என்ருள் மறுபடியும்.

அந்த ஸ்திரியின் அறியாமையை

கண்ட எனக்குச் சிரிப்பு வந்தது. ஆனால் அவளுடைய வேதனை நிரம்பிய தோற்றத்தைக் கண்டதும் என்னால் சிரிக்க முடியவில்லை. மதராஸ் பெரிய ஊர், சரியான விலாசமில்லாமல் கண்டு பிடிக்க முடியாது. ஆயிரக் கணக்கான ஜனங்களில் அவன் யாரோ என்றெல்லாம் சொல்லி அவளுக்கு விளங்க வைக்க முயற்சித்தேன்.

பலனில்லை. அவளுக்கு நான் சொல்வதே புரியவில்லை. என் பதிலைக்கேட்ட அவள் கண்களின் பிரகாசம் குன்றி விட்டது. தனக்குள்ளேயே ஏதோ முனகலானாள்.

நானும் பழங்களை பொறுக்கலானேன். எனக்கு அவை தேவை இல்லாவிடினும் ஏனோ அவைகளை வாங்கலானேன். பழங்களைப் பொறுக்கியவாறே "உனக்கு என்ன உறவுதானே?" என்றேன்.

ஆழ்ந்த பெருமூச்சுடன் "அவருங்களா, இங்கே பாலம் கட்டற மேஸ்திரியா வந்தாங்க. போறபோது, போகாதே; இங்கே இருந்துடு என்றேன். கேக்கலீங்க. போய்வந்துடறேன் என்றாரு. வரவில்லை. இங்கிருந்து பட்டணம் ரொம்ப தூரமா சாமி?"

"ஆமாம்"

அவள் கண்களில் நீர் துளிர்த்தது "கடவுளுக்குத்தான் தெரியும்?"

"ஏன் அவர் வரவில்லையோ" என்றேன்.

"5 வருஷம் ஆச்சு! என்னிக்கு வருவாரோ" என்றாள்.

சிறிது நேரம் அவள் பேசவில்லை.

மறுபடியும் "நாள் பூரா வழி பாக்கிறேன், வரவில்லை. வேலை எல்லாம் விட்டுட்டு அதுக்குத்தான் இங்கே உட்கார்ந்து பழம் விற்கிறேன். எத்தனையோ பேர்

வராங்க, போறாங்க; ஆனா......"

இதற்குள் 4, 5 வயதுடைய ஒரு சிறுமி ஓடி வந்து அவள் மடியில் அமர்ந்தது.

"இது உன் மகளா?" என்றேன்.

குழந்தையின் தலையைக் கோதிய வண்ணம் "ஆமாம் சாமி, இதுக்கு 5 வயது ஆச்சு. இன்னும் அப்பனைப் பாக்கலே; பாத்தா தெரியுங்களா?"

எனக்கு நேரமாகி விட்டதால் நான் புறப்படலானேன். நான் என்ன சொல்லியும் அவள் பணம் வாங்க மறுத்து விட்டாள்.

வழி பூராவும் என்மனதில் அநேக எண்ணங்கள் தோன்றலாயின. முன் பின் அறியாத அந்த மலே ஜாதி ஸ்திரியிடம் எனக்கு ஓர் பரிவு ஏற்பட்டது. அவளுடைய ஏக்கம் நிரம்பிய விழிகளும், வருத்தம் தோய்ந்த வழி பார்க்கும் உருவமும் என் மனதை அலட்டியது.

கவிகள் சொல்லுகிறார்கள், வர்ணிக்கிறார்கள், காதலே பற்றி "விரகம் காதலின் வாழ்க்கை. சாரம், சந்திப்பு அதன் முடிவு" என்கிறார்கள், இவள் காதல் எத்தன்மையது? இவளுடைய தாபம் ஸ்திரமானதா? இவள் விரும்புவது எது? காதலின் முடிவையா? இவள் காதலில் நிரப்பி இருப்பது, தியாகமா? தபஸா? விரகமா?

டிராவர்ஸ்பங்களா வராந்தாவில் உட்கார்ந்து யோசிக்கலானேன். என் மனத்திரையில் அந்த மலே ஜாதி ஸ்திரி வழி பார்த்தவாறே பாதை ஓரத்திலே காத்திருக்கும் தோற்றமே தென்படலாயிற்று. அவள் தன் மீதி வாழ்நாட்களேயும் இப்படியே கழிப்பாளோ? என் மனம் குழப்பமடைந்தது.

மறு நாள் காலே வேலே முடிந்ததும், சிப்பந்திகளேயும் சாமான்களேயும் முன்னே அனுப்பி விட்டு நான் நடந்தே வருவதாகக் கூறி வண்டியையும் அனுப்பி விட்டேன்; என் மனம் போனவாறு காட்டுப் பாதையூடே நடக்கலானேன். இளம் சூரியனின் பொற்கிரணங்களால் வயல்களில் நெற்கதிர்கள் மினு மினுத்தன. மலே ஜாதிப்பூக்களின் வாசனேயும், குளிர்ந்த காற்றில் காட்டு மல்லிகையின் மணமும் கலந்து ஜில் என்று வீசியது. மலேயும் அதன் தோற்றமும், உயரமான கோபுரமும், வயல்களில் வேலே செய்யும் மலசர்களின் கட்டு மஸ்தான தேகமும் ஏதோ ஒரு தெய்வீகத் தோற்றம்போல் காட்சியளித்தன.

அதோ அந்த வயலில் அவளும் களேபிடுங்கிக்கொண்டிருக்கிறாள்! ஆனால் கவனம் முழுவதும் பாதையிலே இருந்ததால் நான் வருவதை அவள் அறிந்தாள் போலும்.

வேதனேயாலும், பிரிவினுலும் துளேக்கப் பட்டிருந்த அவள் உடலில் நம்பிக்கை என்னும் ஜீவநாடி ஓடிக் கொண்டிருந்ததா? இந்த அணேயாச் சுடரின் நம்பிக்கை என்னும் திரி, "பரசுராம் திரும்புவான்" என்னும் நம்பிக்கை தானே?

என்னேக் கண்டதும் அவள் முகத்தில் முறுவல் படர்ந்தது. கையிலிருக்கும் அறுவாளே வைத்துவிட்டு, பாதைக்கு ஓடி வந்தாள்.

"என் சாமி எப்ப பட்டணம் போறீங்க? இப்பவா!"

"இல்லே அம்மா வேலே முடிஞ்சுது, கீழே போகிறேன்" என்று கூறியவாறே மரத்தடியில் உட்கார்ந்தேன், நடந்து வந்த களேப்பாலும், அவள் பூர்வோத்தரங்களே அறிய எனக்கிருந்த ஆவலாலும்.

"ஆமாம் பரசுராம் இங்கே எவ்வளவு நாள் இருந்தான்?"

"நாலு வருஷம் இருந்தாரு; எங் கபாஷை எல்லாம் கத்து கிட்டாரு ....குழந்தைகூட வளர்ந் துட்டா......"

"நீயும் அவன்கூட போறது தானே?"

"என்னமோ சாமி, போகல்லே. அவருகூட கூப்பிட்டாரு; வந்துடு போகலாம்ண்ணு! எப்படி போ றது சாமி, பொறந்த ஊரு, நிலம் நீச்சு எல்லாத்தையும் விட்டு விட்டு இதோ பாருங்க, இந்தத் தோப்பு நிலம், வீடு, எல்லாம் இருக்கு. அங்கே இப்படி மலையா! ஓடற நதியா; தெம்பா இருக்குமா சாமி பட்டணம்? அவருகூட பட்ட ணம் நல்லா இல்லே என்பாரே" என்றுள்.

"ஆமாம், உனக்கு கல்யாணம் ஆகிவிட்டதா?

வெட்கம் கலந்த முறுவலுடன் "அதையேன் கேக்குறீங்க சாமி! கல்யாணம் எல்லாம் ஆச்சு, அவன்கூட மூணு வருஷம் கழிச்சு செத்துப் போயிட்டானுங்க. இங் கே வீடு, வாசல் எல்லாம் இப்பத் தான். இவரு வந்தாரு. அஞ்சு வருஷமும் ஓடி போச்சு சாமி, சாப்பாட்டுக் கவலையில்லே."

நேரம் ஆகி விட்டதால் நான் கிளம்பி விட்டேன்.

நாலு நாட்களுக்குப் பிறகு மறுபடியும் அந்த வழியாகவே போக நேரிட்டது.

பாதையோரத்திலே அதே இட த்தில் பழக் குவியலுக்கு எதிரே தலை குனிந்தவாறு உட்கார்ந்து மெதுவான குரலில் ஏதோ பாடிக் கொண்டிருந்தாள்.

ஒரு நிமிடம் பேசாது அவள் எதிரே நின்றேன்.

அவள் த்யானத்தைக் கலைக்க விரும்பவில்லை.

தலை நிமிர்ந்த அவள் என்னைப் பார்த்து திடுக்கிட்டு எழுந்தாள்.

"நான் நாளைக்குப் பட்டணம் போறேன்" என்றேன்.

"பட்டணத்துக்குங்களா?" என்றுள் குதூகலத்துடன்.

"ஆமாம் மாற்றி விட்டார்கள்" என்றேன்.

"சாமி, நிச்சயமாய் சொல்லு றீங்களா? பரசுராம் கிட்ட கட் டாயம் சொல்லுங்க.........தினம் வழி பாக்கிறு......நீ வருவான்னு ஏங்குறு.........5 வருஷம் ஆச்சு, குழந்தை உன்னைக் கூப்பிடுது சீக் கிரம் வரச் சொன்னுன்னு சொல் லிரீங்களா சாமி" என்றுள் அவள்

அவளுடைய கபடமற்ற முகத் தில், ஆசை, நிராசை மின்னல் போன்று தோன்றி மறைந்தன.

"ஆகட்டும் கட்டாயம் சொல் கிறேன்" என்று கூறியவாறே ஒரு பத்து ரூபாய் நோட்டை அவள் பழத்தின்மேல் போட்டு விட்டு திரும்பிப் பாராமல் நடக்க லானேன் — என்னல் திரும்பிப் பார்க்க முடியவில்லை. பெண்மை யின் ஏக்கம், ஏமாற்றம் என்னை உலுக்கியது. ஏங்கும் விழிகளு டன் நம்பிக்கையால் உயிரோடு இருக்கும் ஒரு ஜீவனின் துடிப்பை அறிந்த என் உள்ளத்தில் நிம்மதி அற்ற எண்ண அலைகள் குமுறி வீசின. அக்கணத்தில் என்னுள் ளத்தேதோன்றிய உணர்ச்சிகளில் எனக்குப் பரசுராம் மேல் கோ பமா? அல்லது இந்த மலை நாட்டு ஸ்திரியின் பேரில் கருணையா, பரிவா என்றே எனக்குப் புரிய வில்லை.

அதோ! அதே உருவமும் அந்த மலைப் பாதையும் இன்னும் என் உள்ளத் திரையை விட்டு அழி யவே இல்லையே!

பிரஞ்சுக் கதை:

வைராகி

[அ. சிங்காரவேலு]

ஒரு இளைஞனுக்கு அவன் கனவை நினைவாக்கும் சக்தி இருக்கும்போது, அவன் உலகத்தையே வென்று விட்டான். அந்த வெற்றிக்குறி அவன் முன் காலடியில் நிற்கக்கூடும். ஆனால் இருபத்திரண்டிலிருந்து இருபத்தெட்டு வயதுக்குள்பட்ட இளைஞன் நினைத்துத் தயங்குவானாயினும், அல்லது தாமதிப்பானாயினும் அது முடியாத விஷயந்தான். வெற்றி துடிக்குப் பலத்தை பொறுத்தது.

அதிலும் இளைஞர்களில் இரு சாரார், கற்பனையாளர்கள்; காரியவாதிகள். இந்த இரண்டுமே ஒருவனுக்கு இருக்கக் கூடுமானால், நம்மிடம் ஒரு ஸீஸர், நியூடன் அல்லது நெப்போலியன் இருப்பார்கள்.

ஒரு நாள், கடலோரத்தில் நின்று கொண்டு மனித முன்னேற்றத்திற்கு எவ்வளவு காலம் பிடித்தது என்றும், என் வருங்காலத்தைப் பற்றியும், வெறுங்காகிதத்தில் பிளான் வரைகிற என்ஜினியர் போன்று நான் மனதில் அளந்து கொண்டிருந்தேன். நான் ஸ்நானம் செய்து, உடை யுடுத்திக் கொண்டு, மடுவில் ஸ்நானம் செய்து கொண்டிருக்கும் பாலினுக்காக காத்துக் கொண்டிருந்தேன். அந்த இடம் கடல் மோஹினிகளுக்காக அமைக்கப்பட்டதைப் போன்று அவ்வளவு இயற்கை எழிலுடன் அமைந்திருந்தது.

ஏகாந்தமும், அமைதியுமான அந்த இடத்திலே கடலின் ஓய்வற்ற அலைகளின் ஆரவார சத்தத்தையும் மீறிக்கொண்டு என்னைக் கூப்பிடுவது போன்ற ஓர் ஸ்திரீயின் குரல் என் காதில் விழுந்த போது, சில நிமிஷங்கள் வரை அதே எண்ணங்களில் மூழ்கிப் போய் விட்டேன். அது ஏதோ தேவ கன்னிகையின் குரலைப் போன்றிருந்தது. நான் கீழே சென்றேன்.

அதற்குள் பாலின் உல்லாசமான குரலில் "நீ என்ன பார்த்துக் கொண்டிருக்கிறாய்?" என்றாள்.

அவள் எப்பொழுதுமே என் சுக துக்கங்களை உணர்ந்து, பொறுப்புடன் யோசனைகள் எனக்கு சொல்லி வருவதால்தான் ஒவ்வோர் மாறுதல்களும். அன்று மாலை, நாங்கள் என்றுமில்லாத அளவு அவ்வளவு ஒத்துப்போயிருந்தோம். எங்களுக்கு பேச்சுத் தேவைப் படவே இல்லை. ஒருவர் கையை ஒருவர் கோர்த்துக்கொண்டு விளையாட்டுச் சிறுவர்களைப்போல், இருவரும் சுயேச்சையுடன் சற்று ஓடினோம்.

எதிரே, கிரோய்ஸிக்கு திரும்பி வரும் ஓர் செம்படவனைக் கண்டோம். அவன் கால்களில் ஒன்றுமில்லை. அவன் கால் சட்டைகள் பீத்தலாயும், கிழிந்துபோய் தைத்தும் காணப்பட்டன. அவனது தோற்றம் எங்கள் உல்லாசத்தையே கெடுத்து விட்டது. அந்த சமயம் நாங்கள் எங்களைப் பணக்காரர்களைப்போல் நினைத்துக் கொண்டு ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டோம்.

அந்தச் செம்படவன் அற்புத நண்டொன்றை ஓர் கயிற்றில் கட்டி வைத்திருந்தான். அவன் மற்ருேர் கையில் மீன் பிடிக்கும் சாமான்கள் இருந்தன. நாங்கள் இருவரும் சேர்ந்தாற்போல் அவனைக் கேட்டோம், 'அவன் மீனில் கொஞ்சம் நாங்கள் வாங்கிக் கொள்ளலாமா என.' அத்தகைய சின்ன சம்பவங்கள் ஒன்றின் பிறகுதான், எங்கள் நினைவு கவிகளில் திரும்பியது.

ஒருவன் நினைப்பும், தோற்றமும்தான் ஓர் இடத்தை அழகாக்குவது. ஒரு மனிதன் மனதில், உதயத்தின்போதோ, அஸ்தமனத்தின்போதோ காட்சியளிக்கும் ஆல்ப்ஸ் மலைத்தொடரின் அழகிய காட்சியைக் காட்டிலும், இந்த பூமியின் ஏதேனும் ஓர் சின்ன இடம் அவனுக்குப் பிரமாதமாக இருக்கலாம்!

நான் அந்தச் செம்படவனிடம் சொன்னேன் "அங்கே உனக்கு நல்ல மீன்கள் கிடைத்திருக்கிறதாக்கும்?"

"ஆம், ஐயா" அவன் அருகில் வந்து நின்று பதில் சொன்ஞன். அவன் முகம் வெய்யில் தாக்குதலிஞல் கோரமாய்காணப்பட்டது. அவன் தன் மீன் தொழிலைப் பற்றியும், மற்ற விஷயங்களையும் எங்களிடம் சொன்ஞன். அவன் குரலில் சாந்தமும், அன்பும் கலந்து வந்தது. அவனிடம் எங்களுக்கு ஓர் பச்சாத்தாபம் உண்டாகியது. அவனுக்கு ஆசை என்பது இல்லாதிருக்குமானல், பசியால் வாடி குட்டையாயிருப்பான்.

நான் கேட்டேன் "நீ மீனை எங்கே கொண்டுபோய் விற்பாய்?"

"பட்டணத்தில்"

"அந்த நண்டுக்கு என்ன கொடுப்பார்கள்?"

"சுமார் ஏழு பென்ஸ்"

பாலின் அதற்குள் "அது எனக்கு வேண்டும். இரண்டு ஷில்லிங் கொடுக்கிறேன்" என்ருள்.

நான் "எனக்கு வேண்டும் நான் நான்கு ஷில்லிங் கொடுக்கிறேன்" என்றேன்.

"எட்டு ஷில்லிங்" என்ருள் பாலின்.

"பதினைந்து"

"இருபது"

நான் அவனை வணங்கினேன் அதைவிட இன்னும் அதிகம் கேட்பதற்கு நாங்கள் அவ்வளவு பணக்காரர்கள் அல்ல. அந்தச் செம்படவனுக்கு எங்களைப் பற்றி ஒன்றும் தெரியாது. இருந்த போதிலும் நாங்களே அவனுக்கு விளக்கமாகச் சொல்லிவிட்டோம். நாங்கள் எங்கே இருக்கிருேமென்பதையும், அந்த நண்டை எங்களுக்குக் கொடுக்கும் படிக்கும், அது எங்களுக்கு வேண்டுமென்றும். அதோடு நான் கேட்டேன் "அந்த தொழிலில்தான் சம்பாதித்துக் காலங் கழிக்கிருஞ" என்பதாக.

அவன் பதிலுக்குச் சொன்ஞன்: "ஆமாம், அது ரொம்ப கஷ்டமான வாழ்க்கையும்கூட. மீன் பிடிப்பது ரொம்ப ஆபத்தான தொழில். என்னல் வலைகளோ அல்லது படகோ ஒன்றும் வாங்க முடியாததால், கடலோரத்தில் மீன் பிடிப்பேன். நான் தூண்டிலையும், கயிற்றையுமே நம்பி வாழ வேண்டும். சில நாட்களில் ஒன்

றுமே கிடைக்காது. சில சமயங்களில் ஏதாகிலும் கிடைக்கும்''

''அப்படியானல், ஒரு நாளைக்கு நீ எவ்வளவு சம்பாதிப்பாய்?''

''சுமார் எட்டு பென்ஸ். அதைக் கொண்டுதான் காலந்தள்ள வேண்டும். அதிலும் நான் ஒண்டி மட்டுமல்ல. என் தகப்பனுரையும் வைத்துக் காப்பாற்ற வேண்டும். அவரோ கண்ணில்லாதவர்''

அவன் இந்த வார்த்தைகளை மிகவும் எளிமையாகச் சொன்னுன். பாலினும், நானும் ஒருவரையொருவர் நோக்கினேம்.

அவள் கேட்டாள் ''நீ நல்ல மனசுள்ளவன்தானே?''

அவன் எங்களைப் பார்த்தான். அவன் முகத்திலே தெரிந்த அவ்வளவு பரிதபிக்கத்தக்க தோற்றத்தைப்போன்று எந்த மனிதன் முகத்தையும், நான் என்றுமே கண்டதில்லை.

''எனக்கு பெண்ஜாதி இருக்கக் கூடுமானல், எனது ஏழைத் தகப்பனைத் திக்கில்லாதபடி நான் தவிக்கவிட வேண்டியவனுகி இருப்பேன். என்னுல் ஒரு பெண்ஜாதியையோ, பிள்ளைகளையோ வைத்து சம்ரக்ஷிக்க முடியாது''

''ஆனுல் நீ வேறு வேலை பார்க்கலாம். அதில் உனக்கு இன்னும் அதிகம் கிடைக்கும். நீ ஏன் ஓர் உப்பளத்தில் போய் வேலை பார்க்கக் கூடாது?'' என்றேன்.

''அத்தகைய வேலைக்கு எனக்கு உடம்பில் போதிய பலமில்லை. இருந்தால் நான் போயிருப்பேன். என்னுல் கொஞ்சம் சாவதானமாயும், கொஞ்சம் யோசனையோடும் கூடிய ஏதோ சில வேலையைத்தான் செய்ய முடிகிறது''

''உனக்கு என்ன வயதாகிறது?''

''முப்பத்தேழு''

பாலினும், நானும் அவனது துர்ப்பாக்கியத்தை நினைத்த பொழுது எங்கள் இதயம் படபடத்தது. நாங்கள் அந்த மனிதன் வாழ்வின் சொல்லொணுத் தியாகத்தை லேசாய் ஆழம் பார்க்க நினைக்கவில்லை. அவன் தியாகத்தின் உயரிய தன்மையைப் புகழ்ந்து பாராட்டினேம். அவனது எண்ணிப் பாராத தயாளத்துவம் எங்கள் மனதை சுரக்கச் செய்தது. அந்த ஏழை ஜீவனின் வாழ்க்கைக் கோலம் எங்கள் முன் தோன்றலாயிற்று. ஒரு நாளைய வயிற்றுப் பாட்டிற்காக அந்த 'சான்ஸை' நம்பி நிற்கும் அவனைப் பார்த்தோம். அந்தக் குடிசைக்குள் கிடந்த கண்ணில்லா அவன் தந்தையைப் பார்த்தோம். அது எங்களுக்குத் தெரியலாயிற்று. அவன் இரவில்தான் சாப்பிடுவான்; அதுவும் அவனுக்கு கடல் சகாயம் செய்தால்.

நான் அவனிடம் சொன்னேன்:

''உன்னைக்காண நாங்கள் மிகவும் சந்தோஷப் படுகிறோம். உனக்கு ஓர் ரொட்டியும், ஒரு பாட்டில் ஒயினும் அனுப்ப எங்களை அனுமதிப்பாயா?''

''நீங்கள் ரொம்ப அன்பாயிருக்கின்றீர்கள், ஐயா'' என்றுன் பதிலுக்கு.

அந்த மனிதனுக்கு இந்த உபசரணை ஒரு பிச்சைக்காரனுக்கு சக்ரவர்த்தி ஏராளமான வெகுமதிகளையளித்தால் எப்படியிருக்குமோ அதே போன்ற ஓர் பெரிய விந்தையாகத் தோன்றியிருக்கும்.

''ஒரு வேளை இப்படிச் செய்வதால், அவன் பின்னிட்டு ரொம்ப

கஷ்டமடையக்கூடும்'' என்றாள் பாலின்.

நான் "இல்லை. ஒரு நாளைப் பொழுதைய சந்தோஷம் அவனுக்கு எவ்வளவோ நன்மைகளையளிக்கும். அதைப்பற்றி அவன் பின்னிட்டே எண்ணிப் பார்ப்பான்"

நான் அவனிடம் வந்து எங்களை பாட்ஸில் சந்திக்கும்படி கூறினேன். அவன் பேராவல் கொண்டவனைப்போல் தன் சம்மதியைத் தெரிவித்து விட்டு நகருக்கு விரைந்து சென்றான்.

பாலின் சொன்னாள்: "இது ரொம்ப துக்ககரமான உலகம்; அதிலும் இந்தப் பக்கம் ரொம்ப மோசமானது. கவிகளும், நத்தைகளுந்தான் இங்கே வாழ வேண்டும்! வன் அங்கே வேறொன்றும் கிடையாது. கடலும், மணலும், ஆகாசமுந்தான் இருக்கின்றது. ஓர் மரம்கூட இல்லை.

நாங்கள் அந்த சுடு மண்ணில் இரண்டு மைல்களுக்குமேல் நடந்து விட்டோம். மணற்குன்றுகளிடையே தாழக் குனிந்து நிற்கும் பூதகணங்கள் போன்று சிறு மலைத் தொடர்கள் காணப்பட்டன.

கவலை ஏற்றத்தில் தண்ணீர் வந்து பாய்வது போன்று அலைகள் ஆர்ப்பரித்துக் கொண்டு ஓரத்தில் வந்து மோதும்; அந்தப் பொன்மணலை விட்டுத் தண்ணீர் மீண்டும் ஓடிப்போய்விடும். தூரத்தில் வானளாவிய சித்திரக் கோபுரம் போன்ற பாட்ஸ் கோபுரம், ஏதோ சிதைந்த மாபெரும் கீழ்த்திசை நகரங்களிலொன்றைப் போன்று சீரழிந்து காணப்பட்டது.

பாலின் "நாம் அதன்மேல் செல்வோம்'' என்றாள். அதன் நிழல்கள் எங்கள் காலடியில் படர்ந்து, படர்ந்து பின் யாவும் மறைந்து போயிற்று. அந்த மோனம் எவ்வளவு அழகாக இருக்கின்றது! கடலோரத்தில் அடித்து அடித்து அதனை ஆழமாக்கும் கடலின் ஒலியுந்தான்!

அந்த மணலும், காற்றும், கடலும் எவ்வளவு சந்தோஷத்தைக் கொடுக்கின்றன! அலைகள் ஏதோ பெரிய எண்ணங்கள் எண்ணிக் கொண்டு இருப்பதைப் போல்—, அதனை நாம் தெரிந்து கொள்ளக் கூடுமானால்—, நம்மை அழித்து விடும்.......நேற்று அஸ்தமனத்தின்போது, உண்மையில் என் மனதில் அத்தகைய எண்ணங்களிருந்தன ஆனால் அது என்னைப் பீடித்துவிட வில்லை. அந்த மணலில் மஞ்சள் நிறத்திலும், கடலில் பச்சை நிறத்திலும், ஆகாசத்தில் நீல நிறத்திலும் உள்ள மாறுபாடுகளைக் கண்டேன்.

"அந்த மணற்குன்றுகள் சந்யாசி மடங்களைப் போலிருக்கின்றன. அதிலிருந்து துறவியின் வாழ்க்கை எப்படியிருக்குமென்று ஒருவர் கற்பனை செய்து பார்க்கலாம்'' என்றாள் பாலின்.

"அந்தப் பாலைவனத்தைப் போன்றிருக்கிறது. நிராசை எப்படியிருக்கு மென்பதை ஒருவர்.........''

"அதில் நாலா விதங்களுண்டு'' என்றாள் பாலின்.

சட்டென்று எங்கள் பின் காலடிச் சத்தம் கேட்கவே, திரும்பினோம். அந்தச் செம்படவன் எங்களிடம் வந்து நின்றான். அவன் 'நல்ல உடை' உடுத்திக்கொண்டு

நாங்கள் முன் பார்த்ததைவிட அதிக சந்தோஷகரமாய்க் காணப் பட்டான். நாங்கள் வாய் பேசாது நடந்து சென்ளும். அரை மணி நேரத்திற்குமேல் நடந்தோம். மணல் சூடோ அல்லது நடக்கும் கஷ்டமோ இன்றி நாங்கள் குழந்தைகள் போன்று ஒருவர் கையை ஒருவர் பிடித்துக் கொண்டே போனேம். நாங்கள் இன்னும் தோளோடு தோளாக போவோமானல், எங்களால் ஓரடி கூட எடுத்து வைத்திருக்க முடியாதுதான். மத்தியானப் பொழுதாகியும், நாங்கள் பாதி தூரமே சென்ளும்.

நான், அங்கே தெரிந்த உயரமான மலைத்தொடரைக் காண்பித்து "அங்கே தங்கி இளைப்பாறலாம்; அங்கே நல்ல குகைகள் இருக்கலாம்" என்றேன்,

அந்தச் செம்படவன் நான் சுட்டிக்காட்டியதைப் பார்த்துவிட்டு என்னமோ போல் தலையையாட்டி விட்டு, "அங்கே ஒன்றிருக்கிறது! பாட்ஸ் மார்க்கெட்டுக்குப் போய் விட்டு வருபவர்கள் எப்பொழுதுமே இந்த இடத்தை விட்டு வேறு பக்கமாகத்தான் சுற்றிப் போவார்கள்" என்ளுன்.

அவன் சொன்ன குரலைப்பார்த்தால் அங்கே ஏதோ அதிசயம் இருப்பதைப்போல் எங்களுக்குத் தோன்றியது.

"அப்படியென்ருல், அங்கே அந்தப் பக்கத்தில் திருடர்கள் இருக்கக் கூடுமா?" என்றேன்.

அவன் ஒரு பெருமூச்சு விட்டானே தவிர பதிலொன்றும் சொல்லவில்லை.

"நாம் மேலும்போனல், ஏதாகிலும் தீங்கேற்படுமா?" என்றேன்.

"அதெல்லாம் இல்லை"

"நீ எங்களுடன் வருவாயா?"

"வேண்டாம், பிரபு!" என்ருன்.

"அங்கே ஒன்றும் அபாயம் ஏற்படாதென்று சொல்வாயானல் நாங்கள் தனியே போகிரும்" என்றேன்.

அவன் சட்டென்று பதில் சொன்னன் "அதை நான் சொல்ல மாட்டேன். ஆனல் அங்கே இருக்கும் ஒருவன் உங்களிடம் ஒன்றும் சொல்லவு மாட்டான்; உங்களுக்கு ஒரு தீங்கும் செய்யவு மாட்டான். அவன் இடத்தை விட்டு வெளியே நகரவு மாட்டான்!"

"அது யார்" என்றேன்.

"ஓர் மனிதன்"

"அந்த இரண்டு வார்த்தை அவ்வளவு பிராணுபத்தாக என்றுமே இருந்ததே இல்லை......"

செம்படவன் ரொம்ப கவலையுடன் எங்களைப் பின் தொடர்ந்தான். நான் ஆவலோடு நேரே நிமிர்ந்து பார்த்தபடி சென்றேன். பாலின் என் கையைப் பிடித்துக் கொண்டாள். அந்த செம்படவன் நினைத்திருக்க வேண்டும்: நாங்கள் அந்த மனிதனைப் பார்த்தவுடனேயே, அவ்விடத்தை விட்டு வந்து விட்டால் போதும் என்று ஏற்பட்டுவிடும் என்று. ஏதோ பய உணர்ச்சி எங்கள் இருவரையும் பற்றிக் கொண்டதைப்போல், எங்கள் இருவரின் ஹிருதயங்களும் வேகமாய் அடிக்கலாயின.

அந்தப் பெரிய குகைக்கும் முன்னே, ஏதோ ஓர் சூக்ஷ்ம சக்தி திடீரென்று நல்ல தூக்கத்தினின்றும் எழுப்பி விட்டு 'எலெக்ட்ரிக்

ஷாக்' அடித்ததைப்போன்று அப்படியே நின்றோம். அந்தக் குகை கடலுக்கு சுமார் நூறடி உயரத்திலிருந்தது.

அங்கே நாங்கள் ஓர் கருங்கல் பாறையின் மீது ஓர் மனிதன் உட்கார்ந்திருப்பதைக் கண்டோம். அவனும் எங்களைக் கண்டான். அவனது பார்வை பீரங்கி வெடிக்கும் பொழுது அதனின்றும் வரும் தீப்பொறி எப்படியிருக்குமோ அதே போன்று இரத்தம் தெரிக்கின்ற மாதிரி காணப்பட்டது. அவனது கண்கள் மட்டும் எங்களை மெதுவாக நோக்கின; அவன் உடல் கல்லாய் சமைந்து விட்டதைப்போன்று அசைவற்றுக் காணப்பட்டது. அவன் மீண்டும் சுற்றிப் பார்த்தான். கழுகு கண்களைச் சிமிட்டாதபடி சூரியனைப் பார்ப்பதைப் போன்று, கடலையும், சுற்றுப் புரத்தையும் ஓர் முறை வெறித்துப் பார்த்தான்.

அந்தக் காட்சியை உங்களுக்கு சொல்ல வேண்டுமானால்: 'கணுக் கணுவாயுள்ள ஓர் பிரமாண்ட கருவேலா மரம், தழைகளெல்லாம் உதிர்ந்து உலர்ந்துபோய், ரோட்டோரத்தில் இருந்து நல்ல நடுநிசியில் அது சட்டென்று ஓர் பூதம் போன்ற மாயா ரூபமாகி தலையை நிமிர்த்திப் பார்த்தால் எப்படியிருக்குமோ அதைப் போன்றிருந்தது. (இந்த மாதிரி நீங்களும் மனதில் கற்பனை செய்து பார்ப்பீர்களானால், அவன் எப்படி இருக்கக்கூடுமென்று உங்களுக்குத் தெரியும்)

அந்தக் குடிசையின் ஓர் மூலையில் ஒரே பாசி பிடித்துப்போயிருந்தது. கருங்கல் தட்டு ஒன்றைப் போல் வைத்து, அதன் மேல் ஓர் வெள்ளை ரொட்டி இருப்பதைக் கண்டேன்.

அவன் அந்தக்கால கிறிஸ்தவத் துறவியைப் போன்று, பயங்கரமாய் வயது முதிர்ந்து பயபக்தி கொண்டவனைப் போலிருந்தான். ஒரு வேளை அவன் ஏதோ தான் செய்த ஓர் மாபாதகச் செயலினால் வருந்திப் போய் அப்படி இருக்கலாம்......அவனது அந்தக் கண்களினின்றும் எப்போதேனும் நீர் வடிந்திருக்கக் கூடுமா? அவன் கைகள் எப்பொழுதேனும் அடிபட்டிருக்குமா? உண்மை பலத்தினின்றும் பிரித்துப் பார்க்க முடியாதபடி அவன் முகம் கோரமும், சாந்தமும் கலந்து காணப்பட்டது. அந்த மனிதன் மலையடிகளிலே வந்து வசிக்க எப்படி வந்தான்? அந்தக் கருங்கற் குன்று அவனை எப்படி பிரவேசிக்க விட்டது? செம்படவன் எதிர்பார்த்தபடி, நாங்கள் சத்தம் செய்யாதபடி சீக்கிரமே அவ்விடத்தை விட்டு வரலானோம்.

"அவன் பெயர் என்ன?" என்றேன்.

செம்படவன் சொன்னான் 'வைராக்கியக்கார மனிதன்' என்று அவனைச் சொல்கின்றார்கள் வெகு காலத்திற்கு முன்பு, காம்பிரிமர் (அவன் பெயர்) ஏதோ கொடிய பாபம் செய்து விட்டானாம். அதற்காக நான்டெஸ் பாதிரி அவனைக் கடுமையாக தவம் செய்யச் சொல்லி விட்டாராம்—அவன் பக்கத்திலிருந்து வருகிற காற்றை ஸ்வாசித்தால்கூட, அது அவர்களை நிர்பாக்கியமாக்கிவிட்டுவிடும். ஆகவே அந்தப் பக்கம் போகும் ஜனங்கள் சற்று நின்று காற்று எந்தப் பக்கமிருந்து அடிக்கிறது என்று பார்த்துத்தான் போவார்கள்!.........வடமேற்கிலி

ருந்து வீசினால், அவர்கள் எப்படிப்பட்ட வேலையாகப் போக வேண்டியிருந்தாலும் சரி — திரும்பி விடுவார்கள்.

யின் மகள்; அவள்தான் அவனுக்குச் சாப்பாடு கொண்டுவந்து கொடுப்பாள். அவளிடம் அவன் பிரியமாக இருக்கிறான். அவளி

“அவன் பேசுவதே இல்லை. சில சமயங்களில், அவன் தம்பி

டந்தான் சிரிக்கிறான், சூரியன் கடலின் உரைபனியின்மேல் பிர

காசிப்பதைப் போல் என்றுதான் நான் நினைத்துக் கொள்வேன்”

“ஆனால் நீ அவன் செய்த பாபம் என்னவென்பதை எங்களிடம் சொல்லவில்லை. நீ எங்கள் ஆவலைத் தட்டி யெழுப்பி விட்டு, அதனைத்

கதை. அதை நான் உங்களுக்குச் சொல்வதாயின், எனது ஒவ்வோர் ரோமமும் மயிர்க்கூச்செடுக்கும்! உங்கள் ‘லேடி’ அதனால் ஒரு வேளை பயந்தாலும் பயந்துபோய் விடுவார்கள்.”

திருப்தி செய்யாமல் இருக்கின்றீரே” என்றேன்.

“ஆமாம், அது என் தாயாரிடமிருந்து நான் கேள்விப்பட்ட

“அப்படியல்ல, நான் பயப்படமாட்டேன், நீ சொல்லு” என்றாள் பாலின்.

அவன் ஓர் க்ஷணம் தன்

ஞாபகத்திலிருந்த எல்லாம் ஒன்று கூட்டிக் கொண்டு வருபவனைப் போல் பேசாதிருந்தான். பின் அந்தக் கதையைச் சொல்லத் தொடங்கினன்:

"காம்பிரிமார்கள் எல்லோரும் செம்படவர்கள்; நீங்கள் சற்று முன் பார்த்த பயர்ரி காம்பிரி மாருக்கு சொந்தத்தில் மீன் பிடிக்கும் படகுண்டு. அவன் அந்த மீன் பிடிக்கும் தொழிலை நடத்தி வந்தான். அவன் இன்னும் பெரிய படகு வாங்கி, தொலைவில் போய், இன்னும் ரொம்ப நல்ல மீன்கலெல்லாம் பிடித்திருப்பான். ஆனல் அவனுக்கு ஓர் மனைவி யுண்டு. அவளிடம் அவன் ரொம்ப அன்பாக இருந்தான்.

அவள் இளம் மனதுள்ள பெண்; அவனிடம் அதிகப்பிரிய மாக இருந்தாள். அவன் வெளியே செல்லக்கூட அவள் இஷ்டப்படு வதில்லை.

அவன் வீடு, அங்கே கீழே இருக்கிறது. கிட்டத்தட்ட எல்லாம் மண் மூடிப்போய்......

அவர்களுக்கு ஒரே குழந்தை தான். செல்வக் குழந்தைகளைப் போல, அந்த ஒரே பிள்ளையை அவர்கள் ரொம்ப செல்வமாக வளர்த்து வந்தார்கள். எல்லா ஜனங்களும் அந்தப் பிள்ளையைக் கெடுத்து விட்டதாகக்கூட சொன்னர்கள். அவ்வளவு செல்லம் ஜேக்யூஸ் காம்பிரிமாருக்கு. அவன் இஷ்டப்படியெல்லாம் நடக்க ஆரம்பித்தான். யாரேனும் அவன் தகப்பனரிடம் போய் 'உன் மகன் என்னைக் கொன்று விடப் பார்த்தான்' என்றுசொன்னல், அதற்கு அவன் பதிலுக்கு 'அவன் எப்படிப் பட்டவனயிருப்பான் தெரியுமா?' என்பான். யாரேனும் 'என் சின்னப்பெண் கண்ணை அவன் கெடுத்து விட்டான், உனக்குத் தெரியுமா?' என்று சொன்னல், அவன் 'ஆஹா! அவன் கொஞ்ச நாளில் பெண்களுக்கேற்ற அழகிய இளைஞனக இருப்பான்' என்பான்.

ஆகவே, பதினைந்து பதினறு வயதிற்கெல்லாம் ஜேக்யூஸ் காம்பிரிமாருக்கு துஷ்டத்தனம் மிஞ்சி விட்டது. அவன் தன் தாயிடமிருந்தே திருட ஆரம்பித்து விட்டான். அவள் பயந்து கொண்டு தன் புருஷனிடம் இதைச் சொல்வதில்லை.

ஒரு நாள், பயர்ரே மீன் பிடிக்கச் சென்றிருந்த போது, மகன் வந்து வீட்டிலிருந்த எல்லா சாமான்களையும் எடுத்துக் கொண்டு போய் விற்றுவிட்டு குடித்துக் கும்மாளமடிக்க நான்டிஸுக்குப் போய்விட்டான்.

அவள் புருஷன் வரவே, அவள் நடுநடுங்கிப் போய்விட்டாள். அவன் வந்து பார்த்த பொழுது பக்கத்து வீட்டிலிருந்து இரவல் சாமான்கள் வாங்கிக்கொண்டு வந்து புழங்கிக் கொண்டிருந்தாள். அவன் கேட்கலானன்:

"இதென்ன இப்படி?"

"நம்முடையதெல்லாம் திருட்டுப் போய் விட்டன"

"ஜேக்யூஸ் எங்கே?"

"நான்டிஸுக்குப் போய் விட்டான்"

"அவன் இன்னும் அவன் தமாஷில்தான் பிரியமாக இருக்கிறன். அவனைப்போய் நான் பார்க்க வேண்டும்"

காம்பிரிமார் போய் தன் மகனைக் கண்டான். அவனிடம் ஒன்றும் கேட்டுக் கொள்ளவில்லை. வீட்டுக்கு அழைத்துக் கொண்டு வந்தான். அவனிடம் சொன்னன் "இரண்டு வருஷம் ஒழுங்காக நீ இருந்தால் போச்சு, இல்லாவிடில் பார்த்துக்கொள்' என்பதாக. ஆனல் அவன் தந்தையின் பலஹீனத்தை உணர்ந்த இளையோன், அவன் ஒன்றும் செய்துவிட மாட்டானென்ற மனோபாவத்தில், அவனை வெறித்துப்பார்த்தான். சினங்கொண்ட பயர்ரே அவன் முகத்தில் ஓங்கி அடித்து விட்டான். அதனல் இளையவன் ஆறுமாதம் படுத்த படுக்கையில் கிடக்கலானன.

ஒரு நாள் இரவு. தன் மகன் நன்ருய்த் தூங்குவான்என்ற அந்த நிம்மதியே இல்லாதவளாய், தாய் படுத்துறங்கிக் கொண்டிருந்த போது, ஏதோ சத்தங் கேட்கவே திடுக்கிட்டு எழுந்தாள். அவள் புஜத்தில் ஓர் குத்து விழுந்தது. அறைக்குள் திருடர்கள் வந்து விட்டார்கள் என்று சத்தம் போடவே, எல்லோரும் வந்து பார்த்தார்கள். அங்கே யாருமில்லை. மறுநாள் காலை ஜேக்யூஸ் வந்தவுடன் அவனைக் கேட்டதற்கு, அவன் பாட்ஸில் இருந்ததாகச் சொல்லி விட்டான்.

ஜேக்யூஸால் ஏற்பட்ட கடன்களைக் கொடுப்பதிலேயே அந்தக் குடும்பம் அநேகமாக அழியத் தலைப்பட்டது. அவர்கள் நிலைமை வர வர மோசமாகிக் கொண்டு வந்தது. காம்பிரிமாருக்கு சந்தேகமாகவே இருந்து வந்தது. ஒரு நாள் அவன் ஒளிந்துகொண்டு தானும், தன் மனைவியும் கஷ்டப்பட்டுழைத்து சம்பாதித்த கொஞ்ச பணத்தையும் அவன் மகன் திருடிக் கொண்டு போவதைப் பார்த்தான். அவனிடம் அப்போது ஒன்றும் சொல்லவில்லை. ஆனல் மறுநாள் தன் மனைவியிடம் விளக்கேற்றி வைத்து விட்டு, அறையை தாழ்ப்பாள் போட்டு விடும்படிக்கு சொன்னன். பின் தன் தம்பியைக் கூப்பிட்டு 'வீட்டுக்கு வெளிப்பக்கம் கவனித்துக் கொண்டிருக்கும்படிக்கும், கடற்கரையில் அல்லது உப்பளப் பக்கம் ஏதாகிலும் சத்தம் கேட்டால் உடனே அவனிடம் தெரிவிக்கும் படிக்கும் சொன்னன். பின் துப்பாக்கியை எடுத்து ரவை போட்டு அடைத்துக் கொண்டு, தயாராய் அதை மூலையில் புகை போக்கியண்டை வைத்துக் கொண்டான்.

இரவு நெடுநேரத்திற்குப் பின், ஜேக்யூஸ் குடித்து, சூதாடி விட்டு போதை வெறியோடு வீட்டுக்கு வரலானன். அவன் வரும் காலடி சத்தத்தை காதில் கேட்ட அவன் சித்தப்பன், அவனிடம் ஒன்றுமே பேச்சுக் கொடுக்கவில்லை. அவன் வீட்டிற்குள் நுழைந்ததும் அவன் தகப்பனர் சொன்னர்:

"அடே! நீ இப்பொழுது உன் தாய்க்கும், தந்தைக்கும் முன்னிலையில் நிற்கின்ருய். அவர்களுக்கு எதிராக நீ பாபம் செய்து விட்டாய். அவர்கள்தான் உனக்கு நீதிபதிகள்.........நீ மரம் போல், அங்கும் இங்கும் நகராமல் இருந்தால் போச்சு. இல்லாவிடில் நாயைக் கொல்வது போன்று உன்னை சுட்டுக்கொன்று விடுவேன்"

காம்பிரிமாரின் மகன் முறைத்துப் பார்த்தான். அவன் தாய் ஒன்றுமே வாய்திறக்க வில்லை.

"ஜேக்யூஸ் நீ எங்கள் பணத்தை திருடவில்லையென்று சத்தியம் செய்வாயா?"

அவன் கையை தூக்கிக்கொண்டு "நான் சத்தியம் செய்வேன்......" என்று ஆரம்பித்தான். அதற்குள் அவன் தாய் குறுக்கிட்டு "அப்படியல்ல ஜேக்யூஸ். அதல்ல...... நீ குற்றம் செய்திருந்தால், அதிலிருந்து திருந்திக் கொள்ள நேரமிருக்கிறது."

"நீதான்......நீதான் என்னைக் கெடுத்து விட்டாய்!" அவன் கத்தினன்.

பயர்ரேயின் முகம் வெளுத்தது. அவன் விரல்கள் துடித்தன. உக்ரமான குரலில் சொன்னன்: "எனக்கு லக்ஷியமில்லை. என்னைச் சொல்பவன் சந்தைகூடும் இடத்தில் தூக்கிலிடப்படுவான். ஆகவேதான் நான் முன் கூட்டியே நியாயம் வழங்க நினைக்கிறேன். உன் பாபமன்னிப்பைக் கேட்க ஒரு பாதிரி வந்து கொண்டிருக்கிருர். நீ தயாராக இரு."

காம்பிரிமாரின் மனைவி எழுந்து அறையை விட்டுப் போய் விட்டாள். அவள் போனதும் பாதிரி உள்ளே பிரவேசித்தார்.

ஆனல் ஜேக்யூஸ் எதுவும் பேச மாட்டேனென்ருன். போக்கிரித்தனமுள்ள வாலிபன். அவன் தகப்பனர் அவன் பாபமன்னிப்புப் பெறும் வரை அவனைக் கொன்றுவிட மாட்டாரென்று தெரியும்......பின் அந்த வயோதிக பியர்ரே சொன்னன்:

"அது உனக்கு ஓர் பாடம் கற்றுக் கொடுப்பதற்காக செய்யப்பட்டுள்ளது. நீ உன் வழியோடு மரியாதையாக இல்லாவிட்டால், உனக்கு ஓர் முடிவுகட்டி விடுவேன். படுக்கப்போ!"

பையன் பயத்தினல், உதட்டை விரித்தபடி அவன் சொன்ன படியே செய்தான். குற்றமுள்ள நெஞ்சு விழித்துக்கொண்டிருக்க விடாததால், குடி வெறியால் அவன் சீக்கிரமே தூங்கி விட்டான்.

திடீரென்று அவன் விழித்துப் பார்த்தபொழுது அவன் வாயும் கை, கால்களும் பலமாக இறுக்கி கட்டப் பட்டிருப்பதைக் கண்டான். உடனே முரண்டிக் கொண்டு கிளம்ப எத்தனித்தான்; தாய் தந்தையின் காலடிகளில் வீழ்ந்து சுழலலானன்......ஆனல் காம்பிரிமார் சொன்னன்:

"இவனைப் படகுக்குத் தூக்கிக் கொண்டுபோக, நீ எனக்கு உதவி செய்" என.

ஆனல் அவள் அவனுக்கு உதவி செய்யவில்லை. அவனகவே அதைச் செய்தான்..........இந்தக் குன்று, எல்லாவற்றையும்தாண்டி கடலில் எட்டிச் சென்ருன்—தன் மகன் கழுத்தில் ஒரு பெரியகல்லைக் கட்டினன்......க...டற் கரையிலிலிருந்து அவன் தாய் அழும் துயரக் குரல் வந்து கொண்டிருந்தது. அவள் நிலா ஒளியிலே தன் மகனைப் பார்த்தாள்.......அவள் இதயத்திலே நுழைந்து கொண்டிருக்கும் அவன் கடலில் எறியப்பட்டதை......

"காம்பிரிமார் திரும்ப அவளிடம் வந்தபோது அவள் பிணம் போல் கிடந்தாள்........அவளை அந்தப்படகில் வைத்து (தன்மகனை அழைத்துச் சென்ற அந்த படகில்) குரோய்ஸூக்கு கொண்டு வந்தார்கள்.

அது நடந்த ஒரு வாரத்திற்கு மேல் அவள் உயிர் வாழவில்லை. அந்தப் படகை எரித்து, அழித்து விடும்படி தன் புருஷனிடம் மன்ருடிக் கேட்டுக்கொண்டு அவள்

இறந்து போய் விட்டாள். அவன் அப்படியே செய்தான்—ரொம்ப சந்தோஷத்தோடு......

பத்து நாட்களாக அவன் எங்கேயிருக்கிருன், என்னசெய்து கொண்டிருக்கிருன் என்பது எங்களுக் கொன்றும் தெரியாது. அவன் ரஸ்தாவோடு பைத்தியங் கொண்டவனைப்போல், பிதற்றிக் கொண்டு போனதை சிலர் பார்த்ததாகச் சொல்கின்ருர்கள். அவன் பின், இங்கே இந்த மலையடிக்கு வந்து விட்டான்''

அப்படியே நாங்கள் மௌனமாகி விட்டோம். எங்களால் மேலும் நடக்க முடியாது போல் தோன்றியது. உலகத்தில் துக்கமே அதிகமாயிருக்கின்றது; சந்தோஷப்படுவதற்கு எங்களுக்கு அநேகமாய் உரிமையே கிடையாதென்று உணர்ந்தோம். பாலின் சொன்ஞள்:

''நம் இந்த நல்ல நண்பர் அவரது வெள்ளை ரொட்டிக்கும், சிகப்பு 'ஒயினு'க்கும் தயாராக இருப்பாரென்று நினைக்கிறேன். பயபீதி மேலீட்டால் எனக்கு சோர்வடைந்தாற்போலிருக்கிறது. நான் பாட்ஸுக்கு செல்ல விரும்பவில்லை''

நான் சொன்னேன்: ''நாம் பின்னிட்டு இந்தப் பக்கம் வரக்கூட நினைக்கவே மாட்டோம்!'' என்று.

(பிரபல பிரஞ்சு ஆசிரியர் பால்ஸேக் எழுதிய கதையின் தழுவல்)

★

எதிர் காலம்

கலியாணம் ஆகும் வரை எதிர்காலத்தைப் பற்றிப் பெண்கள் சிந்தனை செய்வதில்லை. கலியாணம் ஆகாதவரை எதிர்காலத்தைப் பற்றி ஆண்கள் சிந்தனை செய்வதில்லை.

★

ரஷ்யாவும் குழந்தைகளும்

[கே. சி. எஸ். அருணசலம்]

எத்தனை அருஞ் செல்வமிருந்தாலும், 'குறுகுறு' நடை நடந்து மலர்க்கரங்கள் நீட்டி, உண்ணும் உணவினை யெல்லாம் சிந்தி மனத்தை மயக்கும் மக்கட் செல்வமில்லாது போனவர்களது வாழ்வு வீணன வாழ்வே என்ற பொருளில்,

"படைப்புப் பல படைத்துப்
பலரோடு உண்ணும்
உடைப்பெருஞ் செல்வம் உடையர்
ஆயினும் இடைப்பட
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டும் தொட்டும் கவ்வியும்
துழன்றும்
நெய்யுடை அடிசில் மெய்பட
விதிர்த்தும்
மயக்குறு மக்களைப் பயவா
தோர்க்குப்
பயக்குறை இல்லைத்தாம் வாழும்
நாளே"

என்று குழந்தைகளின் இணையில்லா இன்பம் புறநானூற்றில் சிறப்பிக்கப்படுகிறது.

மயக்குறு மக்களை அடைந்தும் வாழ்வெல்லாம் அதன் நன்மைக்காகவும், இன்பத்திற்காகவும் உழைத்து அல்லும் பகலும் ஏங்கும் மக்கள் கோடானு கோடி. இன்றைய புதிய சமுதாயக் கொள்கைகளால் மனித வாழ்வே மாறுதலடைந்து விட்டது. குழந்தைகள், பெற்ருேர்களின் சொத்து என்றும், அதன் வாழ்வின் இன்ப துன்பங்கள் எல்லாவற்றிற்கும் அவற்றின் பெற்ருேரே கடமைப் பட்டவர்கள் என்றும் வேரூன்றி யிருந்த பழைய கொள்கை தேய்ந்து, குழந்தைகள் தாய் தந்தையர்க்கு மட்டுமில்லாமல் சமுதாயத்தின் செல்வமாக வேண்டும் என்றும், அவர்களின் வாழ்வு நிலைக்கு அரசாங்கமே கடமைப் பட்டுப் பொறுப்பேற்க வேண்டும் என்றும் புதிய ஒரு உணர்ச்சி இன்று விழிப்படைந்த நாட்டிலே பொதுவாகச் சொன்னல் அமெரிக்கா உட்பட எல்லா உலக நாடுகளிலும் வளர்ந்து, வலிமை பெற்று விட்டது. தெளிவாகச் சொன்னல் "ஒரு தேசத்தில் உள்ள குழந்தைகளின் வளர்ச்சிக்கு அரசாங்கம் எந்த அளவில் பொறுப் பேற்கிறது" என்று சிந்தித்து அந்த நாட்டின் நாகரிக வளர்ச்சியை நிர்ணயிக்கும் அளவுக்கு இந்தக் கொள்கை வளர்ந்து விட்டதாகச் சொல்லலாம்.

ஒரு நாடு எந்த விதமான வேற்றுமை எண்ணங்களும் இல்லாமல் பலதரப்பட்ட இனங்களை சேர்ந்த குழந்தைகளையும், அவற்றின் மன வளர்ச்சி, உடல் வளர்ச்சி முதலியவற்றையும், குழந்தைகளின் இயல்பான உணர்ச்சிகளையும், திறமைகளையும் நன்கு புரிந்து கொண்டு அவற்றிற்குரிய ஆக்க வசதிகளையும், சூழ்நிலைகளையும் தந்து பராமரிக்குமானல்தான் அது உண்மையான நாகரிக கலை வளர்ச்சியடைந்த நாடாகக் கருதப்படும். அந்த நோக்கத்தோடு நாம் உலக நாடுகளில் குழந்தைகள் எவ்வாறு

வளர்க்கப்படுகின்றன என்று பார்க்கும் போது உலகில் ஆறில் ஒரு பங்கான ரஷ்ய நாடுதான் சிறப்பான முறையில் குழந்தைகளுக்கு, உலகத்தில் வேறெங்கும் தராத முக்கியத்துவம் தந்து, பொறுப்பேற்று வளர்க்கிறது என்பதை நாம் உணர்ந்து கொள்ள முடியும்.

ரஷ்ய நாட்டில் குழந்தை பிறந்தது முதல், அதற்குப் பத்து மாதங்கள் நிரம்பும் வரை வாரம் ஒரு முறை தாயையும், குழந்தையையும் டாக்டர் பரீட்சை செய்கிறார். அதன் தாய் தந்தையர்களுக்கு குழந்தையின் பிரத்தியேகமான மருந்து, உணவு இவைகளுக்கு வேண்டிய வருவாய்க்குக் குறைவு இருந்தால் அது அரசாங்கத்தினுல் கொடுக்கப்படுகிறது. இப்படியாகக் குழந்தை சர்க்காரின் நேரடியான கவனத்திற்கு பிறந்ததுமே உரியதாவதால் போஷணைக் குறைவு, வைத்தியக் குறைவு முதலிய காரணங்களால் ஏற்படும் 'சிசு மரணம்' என்பதே ரஷ்யாவில் இல்லாமல் போய் விட்டது. பொதுவாகவே மேற்கு நாடுகள் யாவற்றிலும் சிசுமரணம் பெரும்பாலும் குறைந்து விட்டது. காரணம் ஓரளவேனும்—முற்றுமில்லாவிட்டாலும்—அந்த நாடுகளில் அரசாங்கம் குழந்தைகளுக்குச் செய்து தந்திருக்கும் வைத்திய வசதிகளும் பராமரிப்பு முறைகளும்தான். ஆனல் இந்தியாவில்தான் உலகத்தில் எங்குமேயில்லாத பெரிய அளவிலே சிசு மரணம் நிகழ்கிறது.

நம் நாட்டிலே சாதாரணமாக அரசாங்கத்தின் நேரடியான பராமரிப்புக்கும், பொறுப்புக்கும் ஆளாகும் குழந்தைகள் அரசாங்கப் பொது வைத்தியசாலைகளில் பிறப்பவைகள்தான். அதாவது பொது வைத்தியசாலைகளில் இடம் கிடைத்து பிரசவமான குழந்தைகள்தான். இவைகள்தான் பிறந்து பத்து நாட்களோ, ஐந்து நாட்களோ—அதுவரை குழந்தையும் தாயும் பூரண சுகத்தோடிருந்தால் அரசாங்கத்தாரின் நேரான கவனத்தின் கீழும், வைத்திய உதவிகளுடனும் வளர்பவை. பிறகு அங்கிருந்து வெளியேறி விட்டால், அவைகளின் வாழ்க்கைக்கும், வளர்ச்சிக்கும், அரசியலாருடன் எவ்விதமான தொடர்பும் இல்லாமலே போய் விடுகிறது.

ரஷ்ய நாட்டில், இமயமலையின் வடசாரலிலுள்ள டர்க்கானியக் குழந்தையின் ஆரோக்கியத்திற்காக, சராசரி அந்த நாட்டின் சுகாதார இலாகாவால் ஐந்து பவுன் பத்து ஷில்லிங் ஆண்டு தோறும் செலவு செய்யப்படுகிறது. ஆனல் நம் நாட்டில் ஒரு இந்தியக் குழந்தையின் சுகாதார வசதிகளுக்காக அரசாங்கம் செலவிடும் தொகை வருடம் ஒன்றுக்கு ஒரு பென்ஸ்தான்.

கைக்குழந்தைகளுக்கும், பள்ளி செல்லும் வயதாகாத குழந்தைகளுக்கும் ரஷ்யாவிலே தனிப் பயிற்சி சாலைகள் இருக்கின்றன. குழந்தைகள் நல்ல பயிற்சி பெற மிகவும் பயன் படும் இடம் இவைகள். இங்கே சில மணி நேரங்கள் மற்ற குழந்தைகளுடன் பழகவும், விளையாடவும் வசதி கிடைக்கிறது. இவற்றிலே விட்டு விடுவதால் குழந்தைகள் தரும் தேவையில்லாத வீணைசோர்வு, தொல்லை இவற்றிலிருந்து அந்த நாட்டின் தாய்மார்களும் விடுபடுகிறார்கள்.

அன்றியும் அதிக குழந்தைகளுடையதாலே எந்தக் குடும்பமும்

கவலைப்படவேண்டிய அவசியம் அங்கேயில்லை. அதனால் தான் ஐரோப்பிய நாடுகள் எல்லாவற்றையும் விட ரஷ்ய நாட்டிலே தான் அதிகக் குழந்தைகள் பிறந்திருக்கின்றன. அதுவுமல்லாமல் ஆறு குழந்தைகளுக்கு அதிகமுள்ள ஒவ்வொரு ரஷ்யத் தாயும், ஆறுக்கு அதிகமான ஒவ்வொரு குழந்தைக்கும் வருஷம் ஒன்றுக்கு 2000 ரூபிள்கள் (அதாவது நம் ரூபாயில் சுமார் 2500) நன்கொடையாக சர்க்காரால் அளிக்கப்படுகிறாள். இந்த நன்கொடை ஐந்து வருஷங்களுக்கு அளிக்கப்படுகிறது. பத்துக் குழந்தைகளுடைய ஒரு ரஷ்யத்தாய் வருஷம் ஒன்றுக்கு 5000 ரூபிள் நன்கொடை அளிக்கப்படுகிறாள். மேலும் அவளுக்கு, அதற்கு மேல் பிறக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் வருடம் ஒன்றுக்கு 3000 ரூபிள்கள் நன்கொடையாக நான்கு வருஷங்கள் தரப்படுகின்றன. 1937-ம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் மட்டும் 13,75,000 குழந்தைகள் ரஷ்யாவில் பிறந்துள்ளன. இதன்றி ஆயிரக்கணக்கான குழந்தை வளர்ப்பு நிலையங்களும், 'கிண்டர் கார்டன்' களும் இன்று அங்கேயிருக்கின்றன.

கல்வி முறை:

சமுதாய வாழ்வை உணர்ந்து, வாழ்வதற்கேற்ற முறையிலே கற்பிக்கப்படும் கல்வியே நாகரிகக் கல்வியாகும். சமுதாயத்தில் தனக்குள்ள பொறுப்பை ஒவ்வொருவரும் உணரும் வகையில் தன் நாட்டிற்கும் கலாசாரத்திற்கும், ஏற்பதாக அமைக்கப்படும் கல்வி முறை தான்-அதோடு குழந்தைகளின் இயல்பான திறமையை நன்கு தெரிந்து கொண்டு அக்குழந்தையின் திறமை வளர்ச்சிக்குச் சாதகமான வசதிகளைச் செய்து தந்து கல்வி பயிற்றும் முறைதான், உன்னதமான, கலை வளர்ச்சியடைந்த பொறுப்பு மிகுந்த அரசாங்கத்தின் கல்வி முறையாகும். எத்தனையோ குழந்தைகள் தங்களுக்கு இயல்பாக வரும் பல்வேறு திறமைகளை வளர்த்து, மேன்மையடைய வகையின்றி மங்கி விடுவது தெளிவு. ஆகவே இந்த முறையை ரஷ்ய சர்க்கார் நன்கு கையாளுகிறார்கள். படிக்கும் போதே ரஷ்யக் குழந்தைகள் தொழிற் பயிற்சியும், அதற்கு ஏற்ற விஞ்ஞான அறிவும் சிறு வயதிலிருந்தே பள்ளி வாழ்க்கையில் பெறுகிறார்கள்.

குழந்தைகளின் திறமைகள் அனைத்தையும் வளர்ப்பதற்கு வேண்டிய வசதிகளைக் கல்வியிலாகா செய்கிறது. இதற்கென்றே மாலைக் காலங்களில் பள்ளிக் கூடங்கள் நடக்கின்றன. இவைகளுக்கு 'பாலர் மாளிகை' என்று பெயர். இதிலே நாடகங்கள், இலக்கியக் கழகங்கள், விஞ்ஞான ஆராய்ச்சி, சங்கீதம், விளையாட்டு எல்லாம் உடைய பல பகுதிகள் உள்ளன. இவைகள் குழந்தைகளுக்கு உள்ள திறமையையும் விருப்பத்தையும் அறிந்து அவற்றிற்கேற்ற பகுதிகளில் அவை விருத்தியடைய உதவுகின்றன. இயற்கைப் பொருளிலிருந்து, கப்பல் செய்யும் வகை உணர்த்துவது வரையிலுள்ள எந்தப் பகுதியில் ஆர்வமிருந்தாலும் குழந்தைகள் தங்களது ஆர்வத்தை வளர்த்துக் கொள்ள இங்கே வசதிகள் அளிக்கப்படுகிறார்கள்.

இத்தகைய சிறப்பு மிக்க முறையில் வளர்ந்து, கல்வியறிவுக்கு வந்த குழந்தைகள் ஏன் உன்னத

மான, கூரிய அறிவு பெற முடியாது? 1937ல் வார்தாவில் நடந்த அகில உலக இசைப் போட்டியில் முதல் இரண்டு பரிசுகளும் ரஷ்யக் குழந்தைகள் அடைந்தன. பிரசேல்ஸ் நகரிலே நடந்த 'பிடில்' இசைப் போட்டியிலே முதல் ஐந்து பரிசுகளை ரஷ்யக் குழந்தைகளே அடைந்தன.

மனதிற்குப் பிடித்தமான வேலைகளில் சேர எல்லாக் குழந்தைகளுக்கும் உரிமை பொதுவாக அளிக்கப்படுகிறது. அன்றியும் முற்கூறிய 'சிறுவர் மாளிகை'கள் ஒவ்வொரு குழந்தைகளின் மனதிற்குத் தக்க, திறன் வளரத் தக்க வேலை எது என்பதைக் குழந்தைகளுக்கும் அரசாங்கத்திற்கும் தெரியப்படுத்த உதவி புரிகிறது.

சாதாரணமாகப் பெரிய நகரங்களில் வாழும் சிறுவர்கள் அனேகரும் 18 வயது வரை கல்வி கற்கிறார்கள். ஆனால் நாட்டில் எந்தப்பகுதியிலுள்ள குழந்தையானாலும் 8 முதல் 12 வயது வரை பள்ளிப் படிப்பில்லாமல் தப்ப முடியாது. 1940 முதல் 8 முதல் 15 வயது வரையுள்ள, ரஷ்ய நாட்டின் எல்லாக் குழந்தைகளும் கட்டாயக் கல்வி அளிக்கப்படுகிறார்கள். ஆனால் நகரங்களில் வாழும் சிறுவர்கள் 8 முதல் 18 வயதுவரை கட்டாயக் கல்வி பெறுகிறார்கள்.

ஒவ்வொரு குழந்தைக்கும் படிப்புக்காக ரஷ்யாவிலே 1940ம் வருஷம் 7 பவுன் 2 ஷில்லிங் செலவிடப் பட்டிருக்கிறது. இங்கிலாந்தில் கூடப் படிப்புக்காகக் குழந்தைக்கு அரசாங்கம் 1 பவுன் தான் செலவிட்டிருக்கிறது. கல்வித்துறையில் பிற்போக்குள்ளடர்க் மானிய குழந்தைகளின் கல்விக்கு இன்னும் அதிக பணம் ரஷ்யாவில் ஒதுக்கப் பட்டுள்ளது. அந்தக் குழந்தைகள் கல்வி பெறுவதற்காக வருஷம் ஒன்றுக்கு ஒரு குழந்தைக்குச் சராசரி 39 பவுன் செலவிடப் பட்டிருக்கிறது. இந்தியாவில் குழந்தைகளின் கல்விக்காக அரசாங்கம் ஒதுக்கியுள்ள தொகை வருடம் ஒன்றுக்கு 1ஷில்லிங் 6 பென்ஸ் தான். கல்விக்காக ரஷ்யா அரசாங்கம் நம் நாட்டை விட ஒரு குழந்தைக்காக ஆண்டு தோறும் 600 மடங்கு அதிகமான செலவு செய்கிறது என்பதை எண்ணும் போது நமக்கு மலைப்பு ஏற்படாமலிருக்க முடியாது.

பள்ளிகளில் குழந்தையை அடிப்பது ரஷ்யாவில் சட்டவிரோதமான காரியம். மாணவர்களும், ஆசிரியர்களும் பள்ளிகளில் நண்பர்களாகப் பழகி அன்பு பாராட்டுகிறார்கள். வகுப்புக்களில் திறமையைக் குறிப்பிடும் போது முதலாவது, இரண்டாவது மூன்றாவது என மாணவர் குறிப்பிடப்படுவதில்லை. மிக நன்று, 'சுமார்' 'சற்று தாழ்ந்தது' எனப் பிரிக்கப்படுகிறார்கள்.

ஆசிரியர்களும் குழந்தைகளும்:

ஆசிரியர்கள் குழந்தைகளின் பெற்றோர்களுடன் நெருங்கிய தொடர்புகள் வைத்துக் கொள்ளுகிறார்கள். அதனால் பெற்றோர்களின் ஒத்துழைப்பு அவர்களுக்கு எல்லாத் துறைகளிலும் கிடைக்கிறது. ஒரு உதாரணம். ஒரு பையன் பள்ளிக்கு ஒழுங்காக வரவில்லை. தகப்பனுக்குப் பள்ளிக் கூடத் தலைமையாசிரியர் ஒரு கடிதம் எழுதி அடிக்கடி தன் மகனை அவர் வந்து கவனித்துக் கொள்ள வேண்டுமென்று குறிப்பிட்டிருந்தார். அதோடு "நீங்கள் உங்கள் பையன் விஷயத்தைக் கவனியாது போனால் இந்த முக்ய

வேலைக்கு உங்களுக்குக் கொஞ்சம் அவகாசம் தரும்படி உங்கள் தொழிற்சங்க நிர்வாகிகளுக்கு நான் எழுத வேண்டி வரும்'' என்று குறிப்பிட்டாராம். எப்படி ஆசிரியருக்குக் குழந்தைமேல் உள்ள சிரத்தை?

ஒரு ஆசிரியர் சொல்லுகிறார்: ''பாடங்கள் சொல்லித் தருவதோடு நில்லாமல் நல்ல பழக்கம் ஏற்படுத்தவும் நாங்கள் முயல்கிறோம். பாடங்களில் கவனம் குழந்தைகளுக்கு முக்யமானது தான் என்றாலும், அதைவிட முக்ய மானது குழந்தைகள் தங்கள் நண்பர்களுடனும், ஆசிரியர்களுடனும் எப்படி மரியாதையாகவும், அன்போடும் பழக வேண்டும் என்பதை அறிந்து கொள்வதும், ஒழுங்கான முறையிலே வாழப்பழகுவதும் தான். நாம் ஏன் படிக்கிறோம் என்பது குழந்தைகளுக்குத் தெரிந்தாலும் சிறுவர்களாகையால் அடிக்கடி அவர்கள் அந்த விஷயத்தை மறக்க நேரலாம். நாங்கள் அவர்களுக்கு அதை நினைவூட்ட வேண்டியது எங்கள் கடமை''

இந்த ஆசிரியர் கூற்றிலிருந்து ஆசிரியர்கள் எவ்வளவு பொறுப் புணர்ந்தவர்களாய், சமுதாய அன்பு கொண்டவர்களாயிருக்கிறார்கள் என்பதையும் புரிந்து கொள்ளலாம். இந்தக் கல்வி முறையைப் பற்றிச் சிந்திக்கும் போது நமக்கு நமது ஒப்பில் புலவனாகிய வள்ளுவரது ''கற்க கசடறக் கற்பவை, கற்றபின் நிற்க அதற்குத் தக'' என்னும் அமர வாக்கியங்கள் நினைவுக்கு வருகின்றன.

எனவே தங்களது உழைப்பிலும் ஊக்கத்திலும் மட்டுமே குழந்தைகள் உயர்வடைய வேண்டும் என்னும் பெரும் பொறுப்பிலிருந்தும், ஏக்கத்திலிருந்தும் ரஷ்யப் பெற்றோர்கள் பெரும்பாலும் விடுபட்டிருக்கிறார்கள். குழந்தைகள் பற்றிய எவ்வித சோர்வும் அவர்களுக்கில்லை. அவர்கள் தான் கவலையற்ற மனத்தினராய் கட்டுரையின் ஆரம்பத்தில் குறித்துள்ள பாட்டிலுள்ளது போல 'இட்டும் தொட்டும் கவ்வியும் துழன்றும் நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும் மயக்குறும்' மக்களோடு, அவர்களது 'அமிழ்தினும் ஆற்ற இனிய' மழலைச் சொற்கேட்டு வாழ்வு முழுதும் கட்டற்று வாழும் ஒரு சூழ் நிலையைப் படைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

ரஷ்யக் கல்வி முறை தான் உலகில் களங்கமற்றதென்றோ, குறைபாடுகளே இல்லாதது என்றோ அதுவே தான் நமக்கும், எல்லா நாட்டிற்கும் ஏற்றதென்றோ நாம் சாதிக்க விரும்பாவிட்டாலும், இன்று உலக நாடுகளில் உள்ள கல்வி முறைகளில் அதுதான் மிக்க சிறந்து நிற்கிறதென்றும், உண்மையான சமூகக் கல்வி புகட்டுகிறதென்றும், வெற்றிகரமான, உயர்ந்த லட்சியமுள்ள இளைஞர்களை சிருஷ்டித்திருக்கிறதென்றும் நாம் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.

★

பெற்றோருக்கு...

197253

[ப. தனுஷ் கோடி]

> புத்தம் புதிய கருத்துக்கள் என்று சொல்ல முடியாவிட்டாலும் வாழ்க்கையோடு ஒட்டிய, வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்து செல்லும் சாதாரண விஷயங்களை அனுபவக் கண்கொண்டு பார்த்து சிந்தனையைத் தூண்டும் வகையில் அவற்றைச் சுவையாகச் சொல்வதில் இக்கட்டுரையாசிரியர் கை தேர்ந்தவர். சமூகத்திலே விரவி நிற்தும் இநண்ட அந்த-காரத்துக்த இவரது எழுத்துக்கள் ஒளியூட்டுவதை தொடர்ந்து வந்துகொண்டிநக்தும் இவரது கட்டுரைகளில் காணலாம்.

பத்துப் பதினைந்து வருடங்களுக்குமுன், "தூக்குத் தூக்கி" ஸ்பெஷல் நாடக நோட்டீசுகளில், வெண்பா மாதிரி ஒரு விஷயம் வெளியிடப்பட்டிருந்தது. "கொண்டு வந்தால் தந்தை; கொண்டுவந்தாலும் வராவிட்டாலும் தாய்;............." என்றபடி. அப்போது அதன் பொருள் எனக்கு விளங்கவில்லை. அதே நாடகத்தைப் பார்த்த பின்பும் என்சிறு பிராயத்தினால் புரியவில்லை. ஆயினும் இன்றுவரை அவ்வாக்கியங்கள் மனதில் ஒரு மூலையில் உறுத்திக் கொண்டுதானிருக்கின்றன. நாலு பிள்ளைகளுக்குத் தகப்பனாராக இருப்பவர் ஒவ்வொருவனிடமும் ஒவ்வொருவிதமாகத்தான் நடந்து கொள்ளுகிறார். எல்லாம் அவர் பெற்ற பிள்ளைகள் தான் என்ற சமத்துவம் எந்தத் தகப்பனாரும் கொடுப்பதில்லை. இதற்குக் காரணம் என்ன? எப்படி இந்த அபிப்பிராயங்கள் உருவாகின்றன? தந்தைக்கும், தாய்க்கும் என்ன வித்தியாசம்? இவற்றை நாடக ரீதியிலன்றி, பகுத்தறிவுடன் நேர்மைக் கண் கொண்டு, பரிசீலிப்பதே என்நோக்கம்.

குணம், மனம், சுபாவம், நடத்தை இவைகளின் தனித்த சிறப்பிற்காக, குறிப்பிட்ட ஒரு பிள்ளையிடம் தந்தை விசேஷப் பிரியம் காட்டினால் அதைத் தவறென்று கூற மாட்டேன். இன்றைய தந்தையுலகம் பிள்ளையின் பொருளாதார பலத்தில்தான் திறமைசாலி என்று மதிப்பிடுகிறது. எந்தப் பித்தலாட்டமாவது செய்து, பணம் சேகரித்துப் பிழைக்கத் தெரிந்து கொள்ள வேண்டும். சோம்பேறியாகவோ, சூதாடியாகவோ, மோசக் கருத்துடையவனாகவோ இருப்பினும் சரியே! ஊதாரியாக இல்லாமல் பணத்தைத் தன்னிடம் பத்திரப் படுத்திக் கொள்ளத் தெரிந்திருக்க வேண்டும். சகோதரனின் பாகத் தகராருக்கு அகப்படாமல் சில

பொருட்களே மறைத்து வைத்துக் கொள்ளும் பிள்ளே பெரிய பிரகஸ்பதி! மற்றவருக்குத் தெரியாமல் பணம் கையாடல் செய்திருப்பவன் சாமர்த்தியசாலி. இருப்பதை இல்லே என்று சொல்லி சாதிக்கக் கற்றுக் கொண்ட மகன் கெட்டிக்காரன். மோசடி அயோக்யத்தனம், என்று முதலில் தூற்றிஞலும் சிலநாளில், "அவன் தான் பிழைக்கத் தெரிந்தவன்!" என்று சபாஷ் கூறி ஆசீர்வதிக்கிறது தந்தைமனம். அதோடு மட்டுமல்ல. கஷ்டத்தில் துயரத்தில் உழலும் இன்னெரு குமாரனேப்பார்த்து, "சீ! போடா துப்பில்லாதவனே! காலாகாலத்தில் புத்தியா நடந்து கொள்ளத் தெரியாத அசடே!" என ஏளனமும் செய்கின்றனர். யோக்கியமாக—கண்ணியமாக நடந்து கொண்ட பிள்ளே, கண்ணீர் விட்டுக் கலங்குவது போதாதென்று, கேவலம் கையாலாகாதவன் என்ற பட்டமும் பெற்றுக்கொள்ள வேண்டுமா? கெட்டவனுக்கு—தீயச் செயலுக்குக் கண்டனமும், நற்சிந்தனேக்கு தார்மீக ஆதரவையுமாவது கொடுக்க வேண்டியது அல்லவா நேர்மையான தந்தைக்கு லட்சணம்? துராத்மாவுக்கு மந்திரி வேலே பார்ப்பவர் சுய அறிவை உபயோகித்து யோசனே சொல்ல முடியுமா? அற்ப புத்தியை ஆதரிக்கும் அமைச்சரின் மதியைத்தான் மதிக்க முடியுமா? ஊரைக் கொளுத்தும் ராஜாவும், நெருப்புக் கொடுக்கும் மந்திரியுமாக தந்தையும் தனயனும் புறப்பட்டால், அவர்கள் ஆட்சி நிலேத்து நிற்குமா?

தளகர்த்தரின் ஆணேக்குப் பணியாத படைகள் தனிப்பட்ட முறையிலும், கூட்டாகவும் நன்மை பெற முடியாது; லட்சிய சித்தி பெற முடியாது. தந்தைக்குப்பின், குடும்ப பாரத்தை மேற்கொள்ளும் தாய்க்குப் பணிவதே நேர்மையுள்ள புத்திரர்களின் கடமை. தலேமையற்றவர்களின் போக்கு, உல்லாசத்திலும், ஊதாரித்தனத்திலும்தான் செல்லும்.

அப்படிச் செல்லாமல் பார்த்துக்கொள்ள முடியும் என்ருலும், மரியாதை — ஒழுங்கு — கட்டுப்பாடு — முன்னேற்றம் என்ற அவசியமான அம்சங்கள் சரியானபடி பிடிபடாமலேயே போய் விடும். ஆகவே ஒவ்வொருவருக்கும் அவர்களே அநுசரித்து நடந்து கொள்ளக்கூடிய, "மேலாள்" கண்டிப்பாகத் தேவை. தந்தையைப்போல தாயாருக்கு வெளியுலக அனுபவம் போதாது எனக் கூறலாம். ஆனல் அதற்காகவே அன்னேயை அடக்க முயல்வது பெரும் பிசகு. மாதாவாயினும், பிதாவாயினும் மதித்து, பணிந்து அடங்கிவாழ்தல் பிள்ளேகளுக்கு நன்மை; பெற்ருேருக்குப் பெருமை. அதிலும் தாய் தந்தையைப் போலல்ல. நாலு குழந்தைகள் இருந்தால் நால்வரிடமும் ஒரே தோரணேயில் தான் தாய் நடந்து கொள்கிருள். ஆண் — பெண் என்ற பேதம் கூட அவளிடம் தோன்ருது. ஒருமகனே, மகளோ தன் தாய் இயல்பான விசேஷ குணத்தால் அன்னேயின் அன்பைக் கவரலாம். ஆனல் தந்தையை ஏமாற்றிய சுயநல ஆதரவு பெற்று விடுவது போல், தாயிடமிருந்து அநீதிக்கு ஆதரவு பெறமுடியாது. தன் கடமையை ஏமாற்றி சுயநல ஆதரவு பெற்று விடுவதுபோல், தாயிடமிருந்து அநீதிக்கு ஆதரவு பெற முடியாது. தன் கடமையை—வேலேயைத்—தட்டிக் கழித்து சோம்பேறித் தனமாக இருந்து விட முடியாது. எவ்வளவோ

அன்பும், சலுகையும் ஒருவன் மீது அன்னை கொண்டிருப்பதாகத் தோற்ற மளிக்கலாம். ஆயினும் அந்தச் செல்வாக்கை வைத்துக் கொண்டு அவன் எதுவும் செய்து விடமுடியாது. "ஏண்டாப்பா! நீ மட்டும் என்ன ஒஸ்தியா?..." என்ற கேள்வி தங்கு தடையின்றி தாயார் வாயிலிருந்து வெளிப் பட்டுவிடும். அந்த சமத்துவத்தில் பிள்ளைக்கு வரும் கடுங் கோபத் தில், "தாயார் வஞ்சக அன் புடையவள்" என்று கூட சபித்துத் தாக்கிவிடுவான். ஆனால் உண்மை அதுவல்ல. அன்புவேறு; கடமை வேறு; இதை அன்னை நன்கு உணர்வாள். அன்பில் வசி யப்பட்டு பொறுப்பை பாரபக்ஷ மாக்கிவிட, படிக்காத மாதாகூட நினைப்பதில்லை.

பெண்மைக்கு இத்துணை விசால அறிவு இருப்பதைப் போலவே சில விஷயங்களில் மிகக் குறுகிய புத்தியும் இருக்கத்தான் செய் கிறது. குற்றமே யில்லாமல் யாருமே இருக்க முடியாது என் பது வாஸ்தவமாய் இருக்கலாம். ஆனால் நல்ல விஷயங்களில் காட் டும் கவனத்தில் நூற்றில் ஒருபங்கு கெட்டதை திருத்திக் கொள்வதில் செலுத்தினால் எவ்வளவோ நன் ருக இருக்கும். அதிலும் அன்னை மகனிடம் அன்புடன் கடிந்து கொள்வதுபோல, மகளிடம் நடந்து கொள்வதில்லை. வயதுக்கு வந்துவிட்ட பெண் என்ருல் ஒரு வித அலட்சியமும், பௌருஷமும் தானகவே பற்றிக்கொள்கின்றன. பெண்ணுகப் பிறந்தவள் எவனை யாவது மணந்து அவன் வீட்டுக் குப் போகப் போகிறவள்தானே? என்ற எண்ணமே அடிப்படை சலிப்பதற்குக் காரணம். இது பெரும் பிசகு. மகள் பின்வேறு எப்படி இருக்க முடியும்? நல்ல அநுபவ அறிவு பெற்ற தாயார் கூட இதைச் சிந்திப்பதில்லை. குமாரனுக்கும், குமாரிக்கும் உள்ள இயற்கை நிலையை எப்படி குற்றமாகப் பாவிக்க முடியும்? அதுவும் அவளைப்போல உள்ள ஒரு பெண்ணே உணர முடிய வில்லை என்ருல்? தொட்டதற் கெல்லாம் சிடுசிடு என்று விழு வதும், எந்தக் காரியத்திலும் குற் றம் கண்டுபிடிப்பதும் வாலிபப் பெண்ணின் தாய்க்குணம்! "இப் படி இருந்தால் கட்டிக் கொண்ட வனேடு எப்படித்தான் குடித் தனம் பண்ணப் போறியோ?" என்று மணவயதுள்ள மகள் மீது சீறி விழாதவர்கள் ரொம்ப சொற்பம்! 'பெண் புத்தி பின் புத்தி' என்பதை ஒரு நிமிஷம் மறந்து சிந்தித்தால், ஆண் பிள்ளை யைக் காட்டிலும், பெண் பிள்ளை யிடம் அதிகத் தொந்திரவு கொடுக் கிருேம் என்பதைத் தாய் கட்டா யம் உணர்வாள்.

உண்மையான அன்பு, மரி யாதை – ஒழுக்கம் மிகுந்து இருக் கும். ஒரு தாய் இருக்கிருள்; எனக்கு அன்ன மிடுவதென்ருல் பரம திருப்தி! ஒரு சகோதரி இருக்கிருள்; தன் பொருள் ஏதே னும் ஒன்றை என்னிடம் விட்டு வைப்பதில் சந்தோஷம்! மற் ருெரு சகோதரி இருக்கிருள்! முக்கியமான எந்த நல்ல பொரு ளையும் என் கையால்பெற்று உப யோகித்துக் கொள்வதில் தான் மகிழ்ச்சி! வீட்டிலே வரவழைக் கும் பத்திரிகையைப் படிக்காமல், அதே பத்திரிகையை என்னிடம் பெற்றுப் படிப்பதிலே அலாதி ஆனந்தம் அடைபவள் ஒருவள்! நாலு பிள்ளைகளுடன் வாய்க்கு வந்தபடி வசவு கூறிக் கொண் டிருக்கையில், என் தலையைக் கண்டுவிட்டால் அத்தனை கோப

மும் விளையாட்டாக மாறி விடுகிறது ஒரு அன்னைக்கு. என்னைக் கண்டு பயமல்ல; என் முன்னால் 'பொல்லாதவள்' என்று பெயர் பெற அவள் விரும்பாதது! சிறுவர்களின் துஷ்டத்தனம் எவ்வளவு பெரியதாயினும், என் அன்பில் மதிப்பில், களங்கம் தோன்றாமலிருப்பதற்காக, அந்தப்பெண் மறந்து மன்னித்து விடுகிறாள்: அல்லது சகித்துக் கொள்ளுகிறாள். நாள் பூராவும் அங்கேயே நான் தங்கியிருந்தால் கூட, அவளிடம் முன்தென்பட்ட கோபத்தை மறுபடி காண முடியாது. புருஷன் மீது அலாதியான பிரேமை வைத்திருக்கும் புதுமண தம்பதிகளிடம் கூட இந்நிகழ்ச்சியை வெகு ருசிகரமாகக் காணலாம். அப்படியானால் இவ்வளவு அருமையான குணத்தை உள்ளடக்கி யிருக்கும் ஸ்திரீ, மற்ற சந்தர்ப்பங்களிலும் இதேபோல் நடந்து கீர்த்தி யடையக்கூடாதா? முடியாதா? தன் உயர்ந்த பண்பை தேவையானவர்களிடம் நிரந்தரமாகப் பிரயோகித்து நன்மையடையலாமல்லவா?

வீட்டையும், குழந்தைகளையும் சுத்தமாக வைத்துக் கொள்ள முடியாத சோம்பேறித் தாயைப் பார்த்து, "நல்ல ஆரோக்கியத்திற்கு இதெல்லாம் இடையூறு" என்று கூறுங்கள். உடனே தாயின் பதில், "நாளைக்கு நீயும் பெண்டாட்டி கட்டி, பிள்ளை குட்டிகளுடன் வாழும் போது பார்க்கலாமே உன்லட்சணத்தை" என்றுதான் வருகிறது. சுகாதாரமுடன் இருக்கவேண்டிய அவசியத்தையோ, அப்படி இருக்கமுடியாத அசௌகரியத்தின் காரணத்தையோ உணருவதில்லை. இப்படிப்பட்ட எதிர்ப் புதிரால் கேள்வி கேட்ட மாணவ — மாணவியின் பள்ளி சுகாதார உள்ளம் உடைந்தே போகிறது. படித்த படிப்பை வாழ்க்கையில் வெற்றிகரமாகக் கையாள வேண்டும் எனத் திட்டமிடும் இளம் முற்போக்கு அறிவை, இந்தத் தோல்வி மனப்பான்மை உபதேசம் செயலற்றதாக்கி விடுகிறது. குழந்தைகளின் முன்னால் முறைத்து சண்டையிட்டுக் கொள்ளும் பெற்றோர்கள், பிறகு பிள்ளை அதைப் பற்றிக் கேட்கும் போதும், "நாளைக்கு கலியாணமானா நீயும் இப்படித்தான் இருப்பே!" என்றுதான் பதிலளிக்கிறார்கள். தந்தையிடம் சென்றால், "பள்ளிப் படிப்பு புள்ளிக் குதவாது; படித்தது போதும்; கடையைப் பாரடா!" என்பதும், வீட்டில் தாயின் அநுபவமும், பால்ய உள்ளங்களை முன்னேற ஒட்டாமல் தடை செய்கின்றன. நல்ல காரியம் ஒன்றை ஏன் செய்யவில்லை? என்றோ, இதை இப்படிச் செய்திருக்கக்கூடாதா? என்றோ, மகன் தாயைப் பார்த்துக் கேட்கும்போது, "நல்ல யோசனை! என்னால் முடியவில்லை. உன் காலத்திலாவது அப்படிச்செய்!" என்று தாயார் பதில் கூறினால் எவ்வளவு நல்லது? அதில் அன்பும், ஆதரவும், நம்பிக்கையும் காட்டினால் இளமை எப்படிப் பிரகாசிக்க ஆரம்பிக்கும்? தாய் தன் மைந்தர்களை நல்ல மனதோடு ஆசீர்வதித்தால், குறைகளை — தவிர்க்க முடியாத இடையூறுகளைக் கூட- சமாளிக்கும் விதங்களைப் பற்றி, அவனது பசுமை மனம் ஆராய்ந்து வழிகாணத்துடங்கு மல்லவா?

தாயாகட்டும்; தந்தையாகட்டும்; சிறுவர்களின் புத்திசாலித்தனத்தை அவ்வளவு சீக்கிரமாகப் பெரியவர்கள் ஒப்புக் கொள்வதில்லை. தன் வயதிற்குக் கீழ்ப்பட்டு, தன் குடும்பத்திலேயே

உள்ளவர்களின் சக்தியைத்தானே நம்பினல், தன் பலம் குறைந்து விடும் என்ற அச்சமாக இருக்கலாம். அல்லது தன்னிடம் நல்ல பெயர் வாங்குவதால் சிறுவர்கள் கர்வப்பட்டு அபிவிருத்தியில் தடைப்பட்டு விடுவார்கள் எனக் கருதலாம். இதெல்லாம் உண்மையில் சரியான தென்று பெரியவர்கள் நம்புவது ஆச்சரியமே. எப்படி இருப்பினும் இதற்காக பெரியவர்களின் போக்கில் – திறமையில் சிறுவர்களாயிருக்கும் போது தவறு கண்டு பிடிப்பது பெரும் தவறு. பெற்றோர்கள் மீது சிறுவர்களுக்குத் தோன்றும் குறைபாடுகளை நன்ருக மனதிலிருத்திக் கொண்டு, நாம் அந்த ஸ்தானத்தை அடையும்போது அதே குற்றங்களைச் செய்யாமலிருக்க முயற்சிக்க வேண்டும். அதுதான் அறிவின் லட்சணம்! அழகு!

சிறியவர்களைப் பெற்ேரர்கள் கண்டிக்கவே கூடாது என்று கூற நான் முன்வரவில்லை. அவர்கள் சொல்வதெல்லாம் தவருனது என்று பெற்றோர்களைப் பற்றி பிள்ளைகள் நினைக்கும்படி நடந்து கொள்ளக்கூடாது என்பது தான் என் கோரிக்கை. தாய் மகளைத் திட்டும் போதும், தந்தை மைந்தனைக் கண்டிக்கும்போதும் நிதானம் தவருமல் இருக்க வேண்டும். அதுதான் விரும்பும் சீர் திருத்தத்தையும், ஒழுங்கையும், உயர்வையும் கொடுக்கும். ஆனல் இன்று பக்கத்தில் இரண்டுபேர் இருக்கும்போது தான் பலமாகக் கண்டித்து தமது மேதாவித் தனத்தை வெளிக் காட்டுவார்கள். மற்றவர் முன்னிலையில் மகனையோ, மகளையோ கண்டித்து அவமான மடையும்படிச் செய்வதால் உண்மையில் நல்ல பலனை அளிக்காது. உதாரணமாக, தன் பள்ளிக்கூட நண்பர் இருவருடன் விளையாடப் புறப்படுகிருன் மகனுக உள்ள மாணவன். அச்சமயத்தில் எதிர்ப்படும் தகப்பனர், “போடா கழுதை! புத்தியே இல்லாத முட்டாள்” என்று இரைகிருர். இதனல் தவறிழைப்பவன் ஆத்திர மடைந்து, தந்தை மீது எதிர் தாக்குதல் புரியும் நிலை ஏற்படுமே யல்லாது, திருந்துவது ஒரு நாளும் இல்லை. சம்மந்தியம்மாள் வந்திருக்கும் சமயம் பார்த்து நாட்டுப் பெண்ணின் வண்டவாளங்களைக் கடை பரப்பும் மாமியாரைப்போல, பெற்ேரர் இருந்தால் பிள்ளைகள் – பெண்கள் ஒரு நாளும் உருப்பட முடியாது. நாலுபேருக்கு முன்னல் பிரஸ்தாபித்தால்தான் ஒழுங்காக முடியும் என்பதைப் பெற்ேரர் அவசியம் என்று கருதினல் அதற்கும் முறை வேறு. கொஞ்சம் நயமாக, மனதில் மரியாதை உணர்ச்சியுடன் பதியும்படி பேசவேண்டும்.

தம்பிள்ளைகளைத் தாமே, “துப்பில்லை; வக்கில்லை; மானங்கெட்டவனே; ரோஷம் கெட்டவளே; அசடே! மக்கே! மண்டுகமே!...” என்று இழிவாக உள்ள வார்த்தைகளிலெல்லாம் கோர்வை செய்து வைவதில் அலாதியான பெருமையடையும் பெற்றோர்கள் நிறைய இருக்கிருர்கள். அனுவசியமான சிறு தவறுகளுக்குக்கூட, பிரமாதமான கோபம் வந்தவர்கள் போல நடித்துப் பேசுகிருர்கள். எடுத்ததற்கெல்லாம், “இப்படியிருந்தால் எப்படிப் பிழைப்பாய்?” என்று கேட்பது பிள்ளை குட்டி பெற்ற பெரிய மனிதர்களின் விவேக செய்கையாகாது. கையிலே கொண்டுவந்த பென்சிலைக் கீழே விட்டுவிட்டாலும், தான் சொன்ன வேலையைப் புரிந்து கொள்ளாமல் செய்தாலும்,

தந்தை மகன் மீது 'கோள்' சொல்லும் வழியைக் கண்டு பிடிக்கிறார். இந்தக் கோலி குண்டு விளையாட்டுப் புத்தி முறையே பெருந்தவறு! பெரியவர்களான பின்னும் எப்படி அவர்களை இது பற்றி இருக்கிறது என்பது விந்தையே! "இப்படி ஒவ்வொன்றிலும் 'அட்வைஸ்' பண்ணினால்தான் பிள்ளை வருங்காலத்தில் உருப்படும்!" என்று படித்த பிரகஸ்பதிகள்கூட சமாதானம் கூறுகின்றனர். ஆனால் உண்மையில் சிறுவர்களின் மனோபாவம் இதனால் வேறு விதத்தில் தான் மாற்றமடைகிறது. பயமுறுத்தல் – கண்டித்தல் – எச்சரித்தல், என்ற பதங்களுக்கு "அலட்சியப் படுத்தல்" என்ற அர்த்தம்தான் கொள்கிறார்கள்.

பெரியவர்கள் எதைக் கூறினும் "உம்! கிழட்டுக்கு என்ன தெரியும்? அது அப்படித்தான் எதையாவது உளறும்!" என்று அதனால்தான் கூறுவர்கள் – இளைஞர்கள் ஆராயாமலே சுலபமாகத் தீர்ப்பளித்து விடுகிறார்கள். இது அவர்கள் குற்றமல்ல; முன்னேற்றமுமல்ல! ஆனால் இந்த அசம்பாவிதம் – உபயோகமற்ற நிகழ்ச்சிகள் – பேச்சுகள், ஏற்படுவதற்கு மூல காரணம் பெற்றோர் என்பதை உணர வேண்டும். சின்னச் சின்ன விஷயங்களையெல்லாம் பிரமாதப் படுத்தி, மிகையான தண்டனைகளை விதிப்பதால், அதிகாரம் நீதி மங்கி விடுவதோடு, குற்றமும் மலிய முடிகிறது. செல்வாக்கை துஷ்பிரயோகம் செய்யாமல் கச்சிதமாக – செட்டாக உபயோகிக்க பெற்றோர் கற்றுக் கொண்டால், இப்போதுள்ளவைகளை விட, பல ஆச்சரியகரமான நன்மைகள் விளையும். சிறு சிறு விஷயங்களில் அடிக்கடி தலையிடுவதால் பெரிய குற்றங்கள் நிஜமாகவே ஏற்பட்டு, அதைத் தடுக்க முயலும் போதும், சிறுவர்களை எதிர்க்கும் சுபாவம் பற்றி தீமையை இருசாராருக்கும் உண்டு பண்ணுகிறது. "புலி வருகிறது! புலி வருகிறது!!" என்பதைப்போல் பொய்யாக விளையாடும் குணத்தை வைத்துக் கொண்டிருக்கும் பெற்றோர், அதைக் கைவிட்டுவிட்டால், தம் பிள்ளையால் நிச்சயம் பேறு அடைவார்கள்!

பழைய தலை முறையைச் சேர்ந்த பெரியோர்கள் அப்படி ஒன்றும் பிற்போக்காக இருந்ததாகத் தெரியவில்லை. ரொம்ப உயர்ந்த குணங்களும், பண்பாடும் அவர்களிடத்திலே இருந்திருக்கின்றன. அதனால் அக்கால சிறுவர் சிறுமியர்களும் சரி, வருங்காலத்தில் அவர்கள் பெரியவர்களான பிறகும் சரி, மிகவும் போற்றத் தக்க விதத்தில் விளங்கி யிருக்கிறார்கள். தந்தை மகனிடம், "அந்த அண்ணன் கடைக்குப்போய் அதை வாங்கிவா!" என்றும், தாய் மகளிடம், "இந்த அக்கா வீட்டுக்குப்போய் இதைக் கேட்டு வா!" என்றும், மரியாதைச் சொல்லைக் கலந்து கூறுவார்கள். சிறுவர்களின் மனதில் பெரியவர்களைப் பற்றி என்ன தன்மை ஏற்படச் செய்ய வேண்டுமோ, அந்தப் பலன் இந்த முறையால் உற்பத்தியாகிறது. ஆனால் இக் காலத்துப் பெற்றோர்கள், "அவன் கடைக்குப்போய்வா! அவள் என்ன சொல்றாள்னு கேட்டுவா!" என்றுதான் உபயோகிக்கிறார்கள். அவர்களால் குறிப்பிடப்படும் நபர், அவர்களின் வயதிற்கும் அந்தஸ்த்திற்கும் உட்பட்டவர்களாயிருக்கலாம். அவர்களைப் பற்றிப் பேசும்போது வார்த்தைகள் இயல்பாவே அப்படித்தான் வெளிவருகிறது என்

றும் கூற முற்படலாம். ஆனல் ஏவல் புரியும் சிறுவர்களுக்கு சிறியவரா – பெரியவரா என்பதைக் கவனிக்க வேண்டும். தனக்குக் கீழ்பட்டவர்கள் என்பதற்காக, அந்தத் தாழ்மை உணர்ச்சியைக் குழந்தைகளின் மனதில் விதைக்கலாமா? விதைப்பது சரியா? யோசிக்க வேண்டும். மூத்த குமாரனைப்பற்றி, இளைய குமாரனிடம் பேசும் போதுகூட, "உன் அண்ணு அப்படிச் சொன்ஞன்" என்பதைவிட, "உன் அண்ணர் அப்படிச் சொல்கிருர்." என்பது சிறுவனுக்கு நல்ல உணர்ச்சியை உண்டாக்கும். பெற்றோருக்கு இது ஒருவிதமான அசூயையாகக் கூடத் தோன்றும். ஆனல் அதே பெரிய மகனிடம் நேரிடையாகப் பேசும்போதும் இப்படி மரியாதை கலந்து பேசவேண்டும் என்று சொல்ல நான் முன்வரவில்லையே! சின்ன புத்தியிலும், சில்லரை வார்த்தைகளிலும் தயாரான பல பிள்ளைகள் திரும்பிவந்து பதில் சொல்லும் போது, "அவன் இப்படிச் சொன்ஞன்! அவள் இப்படிக் கேட்டாள்!" என்று தான் இயற்கையாக வருகிறது. பெரியவர்களும், பெரியவர்களும் பேசிக்கொள்ளும் தோரணையிலேயே, சிறியவர்கள் பெரியவர்களைப் பற்றிப் பேசப் பழக்கும், கிளிப்பிள்ளை விளையாட்டு வேண்டவே வேண்டாம்! அதை உடனே, விட்டொழியுங்கள்! சிறுவர்களின் உதட்டிலிருந்து, தனக்கு வேண்டாதவர் இளக்காரமாக அவமதிக்கப் படுவது கேட்பவரைப் பூரிப்படையச் செய்யலாம். ஆயினும், "சர்க்கரை சாப்பிட்டுப் பழக்க முள்ளவனுக்கு இனிக்கிற புத்தி; வேப்பங்காய் தின்று பழக்க முள்ளவனுக்கு கசந்த புத்தி!" என்ற வசனம் போல் தான் இதுவும். அதே போன்ற அசம்பாவித – அலட்சிய வார்த்தைகள்தான், தன் பெற்றோரைப் பற்றி வெளியாரிடம் பேசுகையிலும் சிறுவர்களிடம் ஒட்டி நிற்கும் என்பதையும் அறிந்து கொள்ளவேண்டும்.

முடிவாக, பெற்றோர் தம்மிடமுள்ள நன்மை தீமைகளை நிதானமாகப் பகுத்தறிந்து திருத்திக் கொள்வதோடு, தமது மக்களிடம் அடக்குமுறைப் பாடுகள் தலையெடுக்காதபடி காத்து வரவும் வேண்டும். அப்போது தான் உண்மை மக்களால் தாம் பெற வேண்டிய கடமைகளையும் சரியானபடி திரும்பப் பெறமுடியும் பெற்றோருக்கும், அவர்கள் குழந்தைகளுக்கும் மட்டு மன்றி திருவள்ளுவர் சொல்வதுபோல உலக உயிர்களுக் கெல்லாம் அதுதான் நல்ல தாகவும் இருக்கும்.

"தம்மின் தம்மக்கள் அறிவுட்மை
மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது!'

– இதைப் பெற்றோர் உலகம் சிந்திக்க வேண்டும்.

★

அன்புப் பரிசு

(கே. ஸ்ரீனிவாசன் எம். எஸ்ஸி.)

★

என்னை பிச்சைக்காரன் என்று நினைக்காதே.
நான் உன்னிடம் அன்புப் பிச்சை கேட்க வரவில்லை.
கடவுளிடத்தும் நான் யாசிக்க மாட்டேன்.
குளிரில் நடுங்கும் குழந்தைக்கு
ஒரு கந்தல் துணியைக் கொடுப்பது போல்
உன் உடம்பை எனக்குக் கொடுக்காதே.

என்ன கொடுக்க ஆசையோ அதைக் கொடு.
முழு மனதுடன் கொடு.
பின்பு, நான் உன்னை
என் உலகத்துக்கு அழைத்துச் சென்று
உன் இதயக் கனவைப் பூர்த்தி செய்கிறேன்.

என்னை ஒரு வியாபாரி என்று நினைக்காதே.
உன் அன்புக்காக பேரம்பேச வரவில்லை.
எந்த வியாபார விதிகளும்
நம் உடன்படிக்கைகு ஈடாகுமா?
அன்புப் பரிசுக்கு
பண்ட மாற்றுதல் ஈடாகுமா?

காதல் கோவிலில் தியாகம் கேட்கும்
சர்வாதிகாரி என்று நினைக்காதே.
தியாகம் வேண்டாம்.
இதய ஆசைகளை மாற்றிக்கொள்வதே
நம் அன்புக்கு அஸ்திவாரமாய் இருக்கட்டும்.

என்ன கொடுக்கமுடியுமோ அதைக்கொடு.
முழு மனதுடன் கொடு.
பின்பு, நான் உன்னை
என் உலகத்துக்கு அழைத்துச் சென்று
என் இதய பொக்கிஷத்தைத் தருகிறேன்.

நல்ல சேதி

[கு. ப. சேதுஅம்மாள்]

வெகு நாளைக்குப் பிறகு, யசோதரையின் வாயிலாக சித்தார்த்தன் இருப்பிடம் தெரிந்து கொண்ட சக்ரவர்த்தி அப்பொழுதே தனது கட்டளையுடன் மகனுக்குத் தூதுவர்களை அனுப்பி பதின் மூன்று பொழுதுகள் ஓடி விட்டன.

மூப்பினாலும், சோகத்தினாலும் நலியுறுத்தப் பட்டு, வெகுவாக ஒடுங்கிப் போனார். அதிலும், இந்த ஐந்தாறு தினங்களில் தாம் எதிர்பார்க்கும் நற்செய்தி கிடைக்காததால் இன்னும் ஓய்ந்து அவருக்கு அவதியைக் கொடுத்தது.

முற்பகல் நேரம், சுத்தோதனரை அடுத்து வந்து நின்று வணங்கினான் உதாயி.

அரசர் நிமிஷத்தில் ஜீவனுள்ளவரானார், பிரசன்ன முகத்துடன் தனதிருகைகளையும் நீட்டி உதாயியைத் தம் அருகிலிழுத்து உட்கார வைத்துக் கொண்டார். சற்று நேரம் யோசித்து விட்டு கண் கலங்க, குரல் கம்ம "உதாயி, என்மகனுடைய சகா நீ; மகன் தந்தையையும், தந்தையின் உத்தரவையும் அவமதித்து விட்டு இல்லம் துறந்து சென்று விட்டான்! அப்ப, உதாயி, நீ இன்னமும் மரியாதையும் கீழ்ப்படிதலும் உள்ள மகனாகவே காணப் படுகிறாய்! பார், நல்ல பிள்ளைக்கு அடையாளம் — ராஜாக்ஞை என்றதும் சரியாக வந்து விட்டாய்!"

"தெய்வமும், அதிபதியும், பிதாவைப் போன்றவருமான தங்கள் உத்தரவு எனது பெரும் பாக்கியமாகும். அடியேனை அழைத்த காரணம் என்னவோ?"

"அவசரப்படாதே உதாயி! உனது நண்பனும், எனது மகனுமான சித்தார்த்தன் இருக்குமிடம் தெரியாமல் இத்தனை நாளும் தவித்தேன். இப்போது இருக்குமிடம் தெரிந்தும் அவனைப் பார்க்க இயலாமல் உருகுகிறேன்!

"உதாயி, உத்தரவுடன் ஆட்களை அனுப்பி ஒரு பக்ஷமாகப் போகிறது — என்னைத் தவிர தனது வேண்டுகோளுடன் யசோதரையின் தூதுவர்களும் சென்றார்கள்......"

"அவர்கள் வரவில்லையா இன்னும்?"

"இல்லை! ராஜாக்ஞை தனது சக்தியை இழந்து விட்டது! சுத்தோதனன் இனி அசேதனம்..."

"அதிபதி, தங்கள் மனம் உடையலாகாது. உதாயி அனுபவமற்றவன். ஆயினும் இயன்ற பணி செய்யக் காத்திருக்கிறேன். உத்தரவு அளிக்க வேண்டும்"

"ஆம் உதாயி, அதற்கே உன்னை வரவழைத்தேன். நீ சென்றுவா. கல் நெஞ்சனான சித்தார்த்தனைக் கண்டு 'மரண யாத்திரை செய்து கொண்டிருக்கும் உன் தந்தை — உன் முகத்தை — தம்முயிர் நீங்கு முன்பு காணத்துடிக்கிறார்" என்று சொல். அத்துடன் 'ராகுலனது அன்னையும் – சுத்தோதனனுடைய நாட்டுப்பெண்ணும் — உன் மனை

வியுமான யசோதரை உன்னை எதிர்பார்க்கிறாள்’ என்றும் தெரிவித்து அழைத்து வா” என்றார்.

உதாயி அப்பொழுதே விடை பெற்றுக் கொண்டு குதிரையேறினான்.

உத்தம ஜாதியான அசுவராஜூ, ஊக்குதலையே அறியாத அந்த மகாவேகசாலியான அந்தக் குதிரை, ஒரு நாளுமில்லாத எஜமானனுடைய விரட்டலைக் கண்டதும் காற்றாகப் பறக்க ஆரம்பித்தது. இரவு பகலாக நாலு கால் பாய்ச்சலில் பாய்ந்து நாலாம் நாள் உதயத்தில் ராஜகிருஹத்தின் எல்லையைக் கண்டு விட்டது! எல்லையை அடுத்தாப்போல இருந்த வனத்திற்குள் கூட்டம் கூட்டமாக ஜனங்கள் பிரவேசிப்பதைக் கண்டான் உதாயி.

குதிரையைப் பிடித்து ஒரு மரத்தில் கட்டிவிட்டு, வனத்திற்குள் நுழையப்போன ஒருவனை நெருங்கி "அங்கே என்ன விசேஷம்" என்று கேட்டான்.

"ஏனய்யா, உமக்கு எந்த தேசம்?"

"சொல்லுகிறேன். வனத்தில் என்ன விசேஷம்?"

"விசேஷத்தை இந்தப்பிரதேசம் முழுதும் அறியுமே; அறியாத உமது தேசம் எது என்றுதான் கேட்டேன். நீர் சொல்ல மறுக்கிறீர். நான் சொல்லுகிறேன், கௌதம புத்தரென்ற மகாத்மா இந்த வனத்தில் வசிக்கிறார். அவருடைய தர்ம போதனையைக் கேட்கத்தான் கூட்டம் சாய்கிறது! அடடா! நாழியாகி விட்டதே! வாருங்கள் ஒரு தரம் கேட்பீரானால் பிறகு இந்த நகரத்தை விட்டு — பகவான் புத்தருடைய தரிசனத்தை விட்டுப் போகவே மாட்டீர்! என்ன வருகிறீரா?"

"நல்லது நண்பரே சென்று கொண்டே இரும், இதோ வருகிறேன் — குதிரைக்கு உணவு வைத்து விட்டு"

"போம், போம், குதிரைக்கு சிச்ருஷை செய்து கொண்டே..." அவருடைய குரல் தேய்ந்தது. க்ஷனத்தில் மறைந்து விட்டார் அந்த மனிதர்.

நின்று கொண்டு உதாயி யோசித்தான்: "ஆம்! புத்தனுடைய வாக்கு காந்த சக்தியைப் போன்றது என்பது தெரிகிறது! அந்த சக்தியில் சிந்தையைப் பறிகொடுத்து விட்டிருக்கிறார்கள் தூதுவர்கள்! வந்த காரியம் மறந்து விட்டது!

உதாயியும் அவ்வாறு ஆகமாட்டான்! இதோ காதுகளில் பஞ்சை வைத்துக் கொண்டு போவேன். சித்தார்த்தனுடைய – ஆம் அவன் எனக்குத் தோழன்தானே?

ஆம் சித்தார்த்தனுடைய போதனைமுடியும் வரையில் காத்திருந்து பிறகு அவனை நெருங்கி, வந்த செய்தியைத் தெரிவித்து விட்டுத் தான்பிறகு காதுகளைத் திறப்பேன் எனத் தீர்மானித்தான் உதாயி.

தீர்மானத்தின்படியே செய்து கொண்டு வேலுகவனத்தில் பிரவேசித்தான்.

பிரம்மாண்டமான ஒரு அரச மரமிருந்தது வனமத்தியில். அதன் நிழலில் உயர்வான ஒருமேடை. அதன்மீதுதான் ஒரு தவவடிவமிருப்பதைக் கண்டான் உதாயி.

பொன்னிற ஆடையால் மறைந்த ஒளி பிம்பம்! பிம்பத்தின் மீது இளவெய்யில் நிழற் கோலமிட்டுக் கொண்டிருந்தது!

கிழக்கு நோக்கி அமர்ந்திருந்தார் தேவன். மேற்கை நோக்குவது போலிருந்தது சூரிய தேஜஸ். அகண்டமான வெறு வெளியில் திருஷ்டிக்கு முன்பு காணும் இந்த இரண்டு ஒளி ரூபங்களையும் உதாயின் கண்கள் மாறி மாறிப் பார்த்தன! கேட்க என்னவோ புலன் வேலை செய்ய வில்லையல்லவா?

கொஞ்சம் கொஞ்சமாக சூரியன் உச்சியை நெருங்கிக் கொண்டிருந்தான். பகவானுடைய தத்துவ போதம் முடிவடைந்தது. கூட்டம் கலைந்து விட்டது. அது காறும் எட்ட நின்று கொண்டிருந்த உதாயி கௌதமரை நெருங்கி வந்து அஞ்சலி செய்து நின்றான்.

நின்றது உதாயி என்பதைப் புத்தன் கண்டுகொண்டார். மேடையிலிருந்து கீழிரங்கி "நண்ப, உதாயி, தோழனை வணங்குவார் யாருமுண்டோ" என்று அன்பொழுகக் கேட்டவாறு உதாயி கைகளைப்பற்றி மேடை மீது அமர்த்தித் தானும் அமர்ந்தார்.

உதாயின் சித்தம் தடுமாறி இருந்தது, கண்ட காட்சியிலிருந்து! தாமாக வார்த்தை கொடுத்தார் கௌதமர். "உதாயி எங்கிருந்து; கபிலவஸ்துவிலிருந்துதானே வருகிருய்? சக்ரவர்த்தி க்ஷேமமாக இருக்கிருரா?"

"இருக்கிருர் படுக்கையில்! மகனுடைய பிரிவால் மன்னன் இடிந்து விட்டார்! உன் தேவியும் அரை உயிருடன் க்ஷேமமாக இருக்கிருர். உன் குலதனமான ராகுலன் ஓடி விளையாடும் பாலகனுக இருக்கிருன் —"

"உதாயி, நிம்மதியுற்றேன். ஆம், உன் காதுகளில் பஞ்சு ஏன்? என் வாக்கை செவியுருதிருக்கவா? ஆம் உண்மைதான்! நீ எப்பொழுதுமே மகா சூக்ஷ்மசாலி. பாபம் அரசராலும், இளவரசியாலும் அனுப்பப்பட்ட தூதர்கள் திரும்பிச் செல்ல மறுத்து இங்கேயே இருக்கிருர்கள்.

உதாயி, நீ வருமுன்பே நான் ஜனித்த கபில வஸ்துவைச் சேர்ந்து அங்குள்ள எனது குடிமக்களைப் பாபகிருத்தியங்களிலிருந்து மீட்டு, அஹிம்சையைப் பற்றி போதிக்க உத்தேசித்திருந்தேன்.

இதோ புறப்படுவேன். விருப்பத்தாலும், கடமையாலும் நான் அங்கு வர இருப்பவன். இந்த சரீரம் பெற்றதால் அன்றே அறிவு படைத்து, மனித உயிர்களை மோட்ச வழியில் செல்லத் தூண்டும் அன்புகளைச்செய்கிறேன் இந்தச் சரீரத்தின் காரணகர்த்தருடைய அபிலாஷைகளை நிச்சயமாக கௌரவப் படுத்துவேன்.

உதாயி, இவ்வளவுதானே உன் விருப்பமும், அரசருடைய உத்தரவும்?"

"ஆம் தேவ, தாங்கள்......"

"மறுபடியும் என்ன? இன்றே கபிலவஸ்துவை நோக்கி புறப்பட்டு விட்டேன் என்பதை அரசருக்கும், இளவரசிக்கும் முன் சென்று தெரிவி" என்ருர்.

சற்று நேரத்திற்குப் பிறகு இந்த நல்ல சேதியைத் தாங்கிக் கொண்டு ஒரு குதிரை கபிலவஸ்துவை நோக்கி வாயு வேகமாகப் போய்க் கொண்டிருந்தது!

★

சுதந்திர நாடு

நாட்டின் முன்னேற்றத்திற்காக எதை வேண்டுமானுலும் பேசி, ஜெயிலுக்கு அனுப்பப்படாமல் இருந்தால் அந் நாடு சுதந்திர முள்ள நாடு —

புத்தக ஆராய்ச்சி

★

வேலும் வில்லும். (2ம் பதிப்பு) ஆசிரியர்: ரா. பி. சேதுப் பிள்ளை; பிரசுரம்: அல்லயன்ஸ் கம்பெனி; விலை: ரூ 1—4—0.

'முருகன் பெருமை' 'கம்பரும் கச்சியப்பரும்' என்ற இரண்டு இலக்கிய நயம் 'செறிந்த கட்டுரைகளைப் பிரதானமாகக் கொண்ட இச்சிறு நூல், வேலின் செம்மையையும், வில்லின் பெருமையையும் சுவை பட விளக்குகிறது. கம்பரும் கச்சியப்பரும்' என்ற கட்டுரை ஒரு நல்ல இலக்கிய ஆராய்ச்சி.

★

வழி காட்டி. ஆசிரியர்: கி. வா. ஜகந்நாதன்; பிரசுரம்: அல்லயன்ஸ் கம்பெனி; விலை: ரூ 2-8-0

இலக்கிய வகையில் பத்துப் பாட்டிலும், தோத்திர வகையில் பனிரெண்டு திருமுறைகளில் ஒன்ருகிய பதினேராம் திருமுறையிலும் சேர்ந்துள்ள ஒரு சிறந்த நூல் திருமுருகாற்றுப்படை. முருகனின் புகழைச் சொல்லி அவனிடம் செல்ல வழியும் காட்டுகிருர் இந்நூலின் மூல ஆசிரியரான நக்கீரர். ஆனல் அவர் காட்டிய வழிக்கு நேரடியான சிரமமும், தடைகளும் இருந்தமையால் போக முடியாமல் இருந்தது. அத்தடைகளையும், சிரமத்தையும் குறைத்து பக்தர்களை நேர் வழிக்குச் சுலபமாகத் திருப்ப பல உரையாசிரியர்கள் முற்பட்டார்கள். அவர்களால் கூட நக்கீரர் தெரிவித்த சுலபமான, நேர் வழியை எளிய முருகன் அடியார்களுக்குக் காட்ட இயலவில்லை. அவர்களில் கூட தெளிவாகக் காட்டவோ, விளக்கவோ முடியாத வழியை இன்று தமிழன்பர் கி. வா. ஜகந்நாதன் தமது 'வழிகாட்டி' என்ற நூலில் வெகு சுலபமாகக் காட்டுகிருர். திருமுருகாற்றுப் படைக்கு ஒரு நல்ல தெளிவான, எளிய இனிய உரை வேண்டும் என்ற குறையை 'வழிகாட்டி' பரிபூரணமாய் நிவர்த்தித்து விடுகிறது. 'இத்தகைய வழிகாட்டும் தொண்டை ஜகந்நாதன் மேலும் மேலும் தொடர்ந்து ஆற்ற வேண்டு' மென்று இப்புத்தகத்திற்கு அளித்திருக்கும் சிறப்புரையில் திரு. வி. க., சொல்லுகிருர். அவர் சொல்வதை நாமும் பலமாக ஆதரிக்கிரேம்.

மேலே குறிப்பிட்டிருக்கும் புத்தகங்கள் இரண்டும் அல்லயன்ஸ் கம்பெனி, மைலாப்பூர், சென்னை என்ற விலாசத்தில் கிடைக்கும்.

புது நிலா

[இ. நரசிம்மன்]

இரவு மணி எட்டு இருக்கும். படகில் ஒரு வாலிபன் படுத்திருந்தான். அவன் பக்கத்தில் விளக்கு காற்றில் அசைந்தாடிக் கொண்டு எரிந்தது. கோவிந்தன் தன் மகளைப் பார்த்து "கன்னி! அவர் எப்படி இருக்கிறார்?" என்றான்.

"தூங்கிக் கொண்டிருக்கிறார் அப்பா" என்றாள் மங்கை.

"சரி தூங்கட்டும். நீ ஆட்டுப் பாலைக் காய்ச்சிக் கொடு. நான் படகைத் தள்ளுகிறேன்" என்று படகின் மேல்தட்டிற்குச் சென்று பாய் மரத்தை விரித்து விட்டான் கோவிந்தன்.

இவர்கள் சம்பாஷணையைக் கேட்டுக்கொண்டிருந்த வாலிபன் "கன்னி......., என்னை மன்னிக்க வேண்டும். உன் பெயரைச் சொல்லி விட்டேனே!" என்றான்.

"இதற்காகவா நான் உங்களை மன்னிக்க வேண்டும். பின் எப்படித்தான் என்னைக் கூப்பிடுவீர்கள்?" என்று கூறிப் பின் சிரித்தாள் கன்னி.

வாலிபன் இதைக் கேட்டதும் தைரியம் கொண்டவனாய் "எதற்கு இக்கஷ்டமெல்லாம் உனக்கு. எனக்கு இப்பொழுது ஒன்றும் வேண்டாம். நான் நாளை என் ஊருக்குப் போகப் போகிறேன்."

"நீங்கள் எங்கள் ஊருக்கல்லவா வருகிறீர்கள். உங்கள் ஊருக்கு எப்படிப் போக முடியும். நீங்கள் போகப் புறப்பட்டால்கூட உங்களை விடுபவர்கள் இல்லை" என்றாள் கன்னி கொஞ்சலாக.

"என்ன நான் போகப் புறப்பட்டால்கூட என்னை விட மாட்டீர்களா? அது என்ன! என்னை என்ன செய்யப் போகிறீர்கள்" என்றான்.

"உங்களை நான் விழுங்கிவிடப் போகிறேன்" என்று கூறிச் சிரித்தாள் கன்னி. அப்பொழுது அவள் முகம் அம்மங்கலான ஒளியில் சிவந்து தோன்றிற்று.

இதைக் கேட்ட வர்லிபனும் தன் நோயை மறந்து உவகை ததும்பச் சிரித்துக் கொண்டே "கன்னி இப்படி என்னருகில் வந்து என்னை உயிரோடே விழுங்கி விடு. நான் கண்களாலே, இறப்பதற்கு முன் பார்த்துவிட்டு இறந்து விடுகிறேன்" என்றான்.

கன்னியும் தன்னை மறந்து அவனருகில் வந்து அவன் முகத்தைக் கூர்ந்து பார்வையிட்டாள்.

"என்ன கன்னி, விழுங்க வில்லையே என்னை. ஏன் விழுங்காமல் விழித்து நிற்கிறாய். நான் தூங்கும்போது விழுங்கலாம் என்ற யோசனையோ!" என்றான்.

"இல்லை இல்லை, நான் விழுங்க வந்தால் நீரே என்னை விழுங்கி விடுவதுபோலப் பார்க்கிறீரே. அதனால்தான் யோசிக்கிறேன்" என்றாள் மங்கை.

அச்சமயம் கோவிந்தன் "கன்னி பால் காய்ந்து விட்

டதா" என்று பெரிய குரலில் கேட்டான்.

கன்னியும் "காய்ந்து போச்சு அப்பா. ஆனா இவர் குடிக்க மாட்டேன்னு சொல்லுகிறார் அப்பா" என்று சொல்லிக் கொண்டே வாலிபனுக்குக் கண் சிமிட்டி விட்டு அடுப்பண்டைக்குச் சென்றாள். அப்பொழுதுதான் பால் பொங்கி வழிந்து கொண்டிருந்தது.

"நல்லகாலம்" என்றாள் கன்னி.

"என் கெட்ட காலம்" என்றான் வாலிபன்.

பாலைக் கீழே இறக்கி வைத்து விட்டு "இன்னுமா உங்கள் கெட்ட காலத்தை நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்" என்றாள் கன்னி.

"இல்லை கன்னி நீ எதற்காக நல்ல காலம் என்றாய்?" என்றான்.

"சிறிது நேரம் தாமதித்திருந்தால் பால் பொங்கி அடுப்பு அவிந்திருக்கும். அது தப்பித்தது. அதற்காக நல்ல காலம் என்றேன்" என்றாள்.

"அப் பால் பொங்கி வழிய இருந்தது என் கெட்டகால மென்றேன் நான்" என்று கூறிச் சிரித்தான் வாலிபன்.

அச்சமயம் கன்னி பாலை ஓர் பாத்திரத்தில் கொண்டு வந்து வாலிபன் முன் வைத்து விட்டு "பாலுக்குப் போட சர்க்கரை கூட இல்லை" என வருத்தத்துடன் கூறினாள்.

வாலிபனும் "ஆட்டின் பாலுக்குச் சர்க்கரை வேண்டியதில்லை" என்று கூறி அவளை உற்றுப் பார்த்தான். அச்சமயம் சந்திரனின் கிரணங்கள் படகினுள் வீழ்ந்து இருவர் முகத்தையும் பிரகாசிக்கச் செய்தது. வாலிபனும் பாலையுண்டு துயிலுற்றான். கன்னி அவன் அருகில் உட்கார்ந்து அவன் முகத்தை உற்று நோக்கியபடி இருந்தாள்.

★

கண்ணனுக்கு வயது பதினெட்டு இருக்கும். அவன் தகப்பனார் பெரிய பணக்காரர். அவருக்குத தன் மகன் நன்றாகப் பயின்று பட்டம் பதவி பெறவேண்டுமென்று விருப்பம் உண்டு. ஆனால் கண்ணனோ சோம்பேறி. இயற்கையிலேயே அவனுக்கு நுண்ணறிவு இருந்தும் அதை உபயோகிக்கவில்லை. உபயோகிக்கவில்லை என்றால் பட்டம், பதவி, பெரும்படிப்புக்காக அவன் உபயோகிக்க வில்லை. பட்டம் பதவியை அவன் துரும்பென மதித்தான். அவனுக்குப் பணம் கூடப் பெரிதாகத் தோன்றவில்லை. உண்மையிலேயே அவன் சுயேச்சையையே விரும்பினான். 'ஒளி முடியோடே பிறந்து உலகாண்டவருமில்லை' என்பதை அவன் அடிப்படையாக உணர்ந்திருந்தான். 'ஒருவன் பிறக்கும்போதே கையில் ஓடு ஏந்திப் பிச்சை எடுக்கவே உதித்தவனுமில்லை' என்று வேதாந்தம் பேசுவான். 'உலகிலே குறைந்தவர் மேலோர் என்பது வெளி மயக்கே யன்றி சற்றும் உண்மையில்லை என்று நீ அறிந்து கொள் நெஞ்சே' என்று சில சமயங்களில் தனக்குத்தானே சொல்லிக் கொள்வான்.

இத்தகைய மகனின் வாழ்க்கை எப்படிப் பிடிக்கும் வெளி மயக்கில் ஆசைப்படும் தகப்பனுக்கு? கண்டித்துப் பார்த்தார் பல தடவை. திருந்துபவனாய் இல்லை

கண்ணன். அவ்வளவுதான் வந்தது ஓர் நாள் மிகுந்த கோபம் அவருக்கு. கண்ணனைப் பிடித்து வெளியே தள்ளி "இனி வீட்டிற்கு வராதே. பிச்சை எடுத்து உண்" என்று கூறித் துறத்தி விட்டார். கண்ணனும் அன்று புறப்பட்டு தன் நிலை அறியாது பசிப் பிணியையும் மதியாது தள்ளாடித் தள்ளாடித் தன் கால்கள் சென்ற பக்கம் போகலானான். அவன் ஜன நடமாட்டமில்லாத இடங்களையே தேடிச் சென்றான். அப்படி ஓர் சாலையில் வரும்போது தான் மாட்டு வண்டி இடித்துத் தள்ளியது அவனை. எதிர்பாராத சம்பவத்தால் சரிவில் உருண்டான் கண்ணன். பலமான அடி, அத்துடன் கீழே கிடந்த கல் ஒன்று அவன் தலையில் மோதி பலத்த காயம் உண்டாகி விட்டது. வெகு நேரம் நினைவற்றுக் கிடந்த கண்ணனை அங்கு சிப்பி பொறுக்க வந்த கன்னி கண்டு, இயற்கையான இரக்க குணத்தால் அவன் மூர்ச்சை தெளிவித்து கைத்தாங்கலாக கால்வாயருகில் நின்றிருந்த தன் தந்தையின் படகுக்கு அழைத்துச் சென்று விபரம் சொல்லி அவனைப் படகிலேயே படுக்க வைத்தாள்.

நாட்கள் கழிந்தன. கண்ணனுடைய காயம் சிறிது சிறிதாகக் குணமாகி வந்தது. இப்பொழுது எழுந்திருந்து நடக்கவும் ஆரம்பித்தான். கன்னியும் அவனிடம் மிகவும் அன்பு பாராட்டி அவனுக்கு வேண்டியவை செய்து வந்தாள். "என்னால் உனக்கும் உன் தகப்பனுக்கும் மிகவும் கஷ்டம் கன்னி. நான் என் வீட்டிற்குப் போக நாள் பார்த்துக் கொண்டிருக்கிறேன்" என்று கண்ணன் எப்போதாவது சொல்லிவிட்டால் போதும். கன்னிக்குத் துக்கம் தொண்டையை அடைத்துக்கொண்டு வந்துவிடும். கண்ணனும் அதை அறியாதவன் போல் வேறு பேச்சு எடுத்துப் பேச ஆரம்பிப்பான். கன்னியும் கண்ணனைப் பற்றிய முழு விவரங்களையும் சொல்ல வேண்டிக் கொள்வாள். ஆனால் அவன் பிறகு சொல்கிறேன் என்று ஏமாற்றி வந்தான். ஆனாலும் ஓர் நாள் தன் கதையைக் கன்னிக்குச் சொல்ல வேண்டி வந்து விட்டது கண்ணனுக்கு. அந்நாளிலிருந்து கன்னி முன்னைவிட அதிகமாகப் பணிவிடை செய்யவும் அவனுக்கு இன்பம் அளிக்கும் வார்த்தைகளைப் பேசவும் ஆரம்பித்தாள். அவளுடைய அன்பைக் கண்ட கண்ணன் அவள் வசமாகி விட்டான். அவளைப் பிரியவும் அவனுக்கு மனம் வரவில்லை. அவனுடைய களங்கமற்ற மனதில் கன்னிக்கு அரியணை ஒன்று ஏற்படுத்தி அவளை அரசியாக்கி விட்டான் என்றே சொல்லி விடலாம். அவளும் தன் அன்பாகிய செங்கோலின் கீழ் கண்ணனைத் தன் வயப்படுத்தி விட்டாள்.

கோவிந்தனும் கண்ணன் சரிதத்தைக் கேட்டதிலிருந்து அவனை அன்புடன் நடத்த ஆரம்பித்தான். அது அவன் இயற்கைக் குணமல்லவா! கன்னியும் அவனை நேசிப்பதை அறிந்தும் அறியாதவன் போலிருப்பான் கோவிந்தன். தன் செல்வக் குழந்தையின் மனப் போக்கின்படியே விட்டுவிட வேண்டுமென்று அவன் எண்ணியிருந்ததில் தவறு ஒன்றுமில்லை. அவளுடைய சுகமே தன் சுகம், அவளுடைய ஆனந்தமே தன் ஆனந்தம் என்று எண்ணியவன் அவன்.

கண்ணன் பூர்ண சுகம் பெற்றவுடன் ஓர் நாள் கோவிந்தனிடம்

சென்று "மாமா நான் உங்கள் வேலையை இன்று முதல் செய்வதாய் உத்தேசித்து இருக்கிறேன். ஆகையால் கூடிய சீக்கிரம் எனக்கு அத்தொழிலைச் சொல்லிக் கொடுக்க வேண்டு" மென்ருன். கோவிந்தனும் "நல்லது ஏழைக்கேற்ற தொழில். ஒருவனுக்குப் பயந்து நடக்க வேண்டியதில்லை, அப்படியே ஆகட்டும்" என்ருன்.

உள்ளம் மகிழ்ந்த கண்ணன் நடந்ததைக் கன்னியிடம் சொன்ஞன். அவள் உள்ளம் பூரித்து முகம் சிவக்க நாணத்தால் தலை கவிழ்ந்தாள். ஆயினும் அவள் கண்கள் அவனைப் பார்க்க மேல் நோக்கி நின்றன.

"இதோ பார் கன்னி, ஏன் வெட்கப்படுகிருய்? நீ எப்பொழுதும் கன்னியாகவே இருக்கப் போகிருயா?" என்று அவள் கையைப் பற்றினன். அவளும் தன் கையை இழுத்த வண்ணம் "ஆம் நான் எப்பொழுதும் கன்னியாகவேதான் இருக்கப் போகிறேன்" என்ருள் சிரித்துக் கொண்டு.

"அப்படியானல் நான் என் ஊருக்குப் போகப் போகிறேன் கன்னி. எனக்கு விடை கொடு" என்ருன் கண்ணன்.

"ஐயோ கோபத்தைப் பாரு. நான் என்ன சொல்லி விட்டேன், நீங்கள் என்னை விட்டு ஊருக்குப் போகப் போகிறீர்கள்" ஒன்ருள் கன்னி.

"நீ இப்பொழுதுதான் கல்யாணமே செய்து கொள்ளப் போவதில்லை என்று சொன்னயே அதை மறந்து விட்டாயா கன்னி?" என்ருன் கண்ணன்.

"அதற்காகவா கோபித்துக் கொண்டு விட்டீர்கள். நன்ருய் இருக்கிறது. நீங்கள் கன்னி என்ற பெயரை மாற்றி வேறு பெயர் வைக்கப் போகிறீர்கள் என்று பயந்துதான் நான் எப்பொழுதும் கன்னியாகவே இருக்கப் போகிறேன் என்றேன்" என்ருள் கன்னி.

"அடேயப்பா! என்னை ஏமாற்றி விட்டாயே கன்னி! நீ மகா புத்திசாலி. உன் உதவி இல்லாவிட்டால் நான் பிழைத்தே இருக்க மாட்டேன்" என்ருன் கண்ணன் அவளை நோக்கியபடியே.

"நன்ருய்ச் சொன்னீர்கள். ஒன்றுமறியாப் பேதையைப் புத்திசாலி என்று புகழ்ந்து விட்டீர்களே. ஆபத்தில் உதவி செய்ததைப் பொருட்படுத்தித் தூக்கிப் பேசி விட்டீர்கள். ஆகட்டும் இன்னும் என்ன சொல்லப் போகிறீர்களோ. நடந்ததை எல்லாம் நினைத்துக் கொள்ளுங்கள்" என்ருள் கன்னி ஏளனமாக.

"ஆமாம் கன்னி ஞாபகப் படுத்திவிட்டாய். ஓர் விஷயம் அதை எப்படி என்னல் மறக்க முடியும்"

"எதை! எனக்குச் சொல்லக் கூடாதா?"

"அன்று நான் அடிபட்டு வீழ்ந்த போது என்னைத் தூக்கி நிறுத்தி உன் மிருதுவான உடலின் மீது சாய்த்த வண்ணம் பதட்டமில்லாமல் நடத்திச் சென்ருயே அதை நினைத்துக் கொண்டாலே எனக்கு என்னவோ போல் இருக்கிறது கன்னி. இப்பொழுது உன் கையைத் தொட்டால்கூட எடுத்துக் கொள்கிருயே. என்னிடம் வெறுப்பா? நிஜத்தைச் சொல்ல மாட்டாயா!"

இந்தக் கேள்விக்கு அவளால் பதில் சொல்லவே முடியவில்லை. தன் முகத்தை மாற்றுருபுறம் திருப்பிக் கொண்டாள். அப்பொழுது அவளுக்குப் பின்புறம் ஓர் எருமை மதம் பிடித்தது போன்று கத்திக் கொண்டு அவர்கள் இருந்த பக்கம் ஓடி வந்தது. உடனே கண்ணன் கன்னியின் கரத்தைப்பற்றி இழுத்துக்கொண்டான் தன்புறமாக. எருமை ஓடிற்று அப்புறம். அச்சம்பவத்தால் பயந்து விட்டாள் கன்னி. எருமை நகர்ந்த பிறகுகூட அவள் கண்ணனுடைய மார்பை விட்டுப் பிரியவில்லை. அவளை அறியாதே அவள் கண்கள் மூடி, அவன் தோள்மீது தலை சாய்த்தவண்ணமிருந்தாள். அவன் அகண்ட மார்பை அடைக்கலம் புகுந்ததின் காரணத்தால் கவலையற்று இருந்தாளோ என்னவோ.

கண்ணனும் அவளுடைய வாரிவிடப்பட்ட தேன் சொறியும் மலருடைய கொண்டையைத் தடவியபடியே "என்ன கன்னி இப்படிப் பயந்துவிட்டாயே. மார்புகூட படபட வென்று அடித்துக் கொள்கிறதே! பார்த்தாயா? நான் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லாதிருந்தாயே. கையைத் தொட்டால்கூடப் பிடுங்கிக் கொள்வாயே! இப்பொழுது மட்டும் என் மீதே சாய்ந்து விட்டாயே. பதிலுக்குப் பதில் செய்கிறாயா?"

கன்னி இதைக் கேட்டதும் வெட்கமுற்று "எளனமாகத்தான் இருக்கும் உங்களுக்கு. நான் போகிறேன்" என்று அவனிடமிருந்து விலகப்பார்த்தாள். அதற்குள் கண்ணன் கன்னியின் கையைப் பிடித்து இழுத்து புல்தரையில் உட்கார வைத்துத் தானும் உட்கார்ந்தான்.

அச்சமயம் இன்பமான இளந்தென்றல் மெல்லென வீசிக் கொண்டிருந்தது. அவர்கள் உட்கார்ந்திருந்த இடத்திற்கு அருகில் மாம்பழங்களை எல்லாம் வெளவால்கள் கடித்துப் போட்டிருந்தன.

"இதோ வருகிறேன்" என்று கூறி கன்னி மாமரத்தடிக்குச் சென்று இரண்டு பழங்களைக் கொண்டு வந்து ஒன்றைக் கண்ணனுக்குக் கொடுத்து மற்றொன்றைச் சாப்பிடலானாள்.

அதே சமயம் "கன்னி கன்னி" என்ற குரல் கேட்டது.

"அப்பா தேடிக் கொண்டு வந்து விட்டார் எழுந்திருங்கள்" என்றாள் கன்னி.

"இரு கன்னி, பழத்தைச் சாப்பிட்டுவிட்டுப் போகலாமே" என்றான் கண்ணன்.

"அது முடியாது அவரை ஏமாற்றிவிட்டு வேறு வழியாய் வீட்டிற்குப் போய் விடலாம்" என்று அவன் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு போய் விட்டாள்.

சிறிது நேரத்திற்கெல்லாம் கோவிந்தன் வீட்டிற்கு வந்தான். "என்னம்மா கன்னி உங்கள் இருவரையும் எங்கெங்கு தேடிப் பார்ப்பது. நேரமாகவில்லையா. இன்று இரவு படகைத் தள்ள வேண்டாமா" என்றான் கோவிந்தன். கண்ணனுக்கு விபத்து நடந்து பதினைந்து நாட்கள் ஆகப் போகிறது. கன்னியும் கண்ணனும் வெளிச்சன் ஓடையிலே இருந்து வந்தனர். ஆனால் கோவிந்தன் மட்டும் இடையில் நான்கு தரம் வெளியூர்களுக்குப் படகு ஓட்டிச் சென்று திரும்பி வந்தான் ஐந்தாம் தரமாகத் தன் மகளையும்

கண்ணனையும்கூட அழைத்துச் செல்வது என்று ஏற்படுத்தி இருந்தான். ஆகையால்தான் அன்று அவர்களைத் தேடிக் கொண்டு தோப்புவரை வந்தது.

அன்று நல்ல குதூகலத்துடன் தான் மூவரும் படகைத் தள்ளினர். துறையிலேயே படகுக்கு வேண்டிய ஆட்கள் கூடி விட்டதால் கோவிந்தனுக்கு மிகவும் சந்தோஷம். கண்ணனும் கோவிந்தனுக்குத் துணையாகப் படகைத் தள்ள ஆரம்பித்தான். அன்று தான் அவன் முதன் முதலாக அத் தொழிலில் ஈடுபட்டான்.

படகின் மேல்தட்டில் இருந்த படியே "படகு என்ன இவ்வளவு மெதுவாகப் போகிறதே. நீங்கள் பிரயோஜனமில்லை" என வேடிக்கையாகச் சொல்லிச் சிரிப்பாள் கன்னி.

கண்ணனும் "ஆமாம் கன்னி நீ படகை விட்டு இறங்கி விட்டால் படகு தானுகவே போகும். நீ படகில் இருப்பதால் படகு நகரமாட்டேன் என்கிறது" என்று பரிகசிப்பான். இவ்விதமாக எவ்வளவோ பரிகாசப் பேச்சுக்கள்!

★

ஓர் நாள் கண்ணன் படகைத்தள்ளிக் கொண்டு சென்று கொண்டிருந்தான். அப்பொழுது கோவிந்தனுக்குக் காய்ச்சல். கன்னியோ மிகவும் வாட்டமுற்றிருந்தாள். கண்ணனுக்கு என்ன செய்வதென்று தோன்றவில்லை. அப்பொழுது அவன் ஓர் நாள் படகு இழுப்பதை நிறுத்தி விட்டால் மறுநாள் சாப்பாட்டிற்கு வழி கிடையாது என்பது தெரியும். ஆனல் அவன் தன் உயிரையும் கன்னிக் களிக்கத் தயாராய் இருந்தான்.

கோவிந்தனுக்கு உடம்பு சரியில்லாததால் படகை அதிவேகமாகத் தள்ளிக் கொண்டு வந்து ஊர் அடைந்தான். அன்று என்னமோ என்றுமில்லாமல் காற்று கூட அடிக்கவில்லை. காற்று அடித்திருந்தால் பாய் மரத்திலே படகு வேகமாக ஓடியிருக்கும். வேளையின் கொடுமையன்றோ இது.

ஊரை அடைந்து கோவிந்தனை வீட்டிற்கு அழைத்துச் சென்றுன் கண்ணன். கன்னி எப்பொழுது பார்த்தாலும் அழுது கொண்டே இருந்ததால் அவள் கண்கள் சிவந்து விட்டன. என்ன தேறுதல் சொல்லியும் கண்ணனல் அவளைச் சரிப்படுத்த முடியவில்லை மறுநாளிரவு கோவிந்தன் மரணத் தருவாயிலிருந்தான். கண்ணனையும் கன்னியையும் தவிர அவனுக்குச் சுற்றமில்லை. கன்னியைப் பார்த்த கோவிந்தன் கண்களில் நீர்த் ததும்பியது. "மாமா பயப்படாதீர்கள். நான் இருக்கிறேன், நான் உயிருடன் இருக்கும் வரையும் கன்னியைக் கைவிட மாட்டேன் இது நிச்சயம்" என்று தன்னையும் மீறிக் கத்தினன் கண்ணன்.

"அப்பா அப்பா" என்று அழுதாள் கன்னி.

கன்னியின் கையைப் பற்றி கண்ணனுடைய கைகளின்மேல் வைத்து "இருவரும் சுக.........'; என்று அரைப் பேச்சுப் பேசிய படியே கோவிந்தனின் தூய உயிர் பிரிந்தது.

இரண்டு வாரங்கள் கழிந்தன. "கன்னி ஏன் இப்படித் துக்கப் பட்டுக் கொண்டே இருக்கிருய்

நீ முன்னைவிட இப்பொழுது இளைத்திருக்கிறாய். நீ இப்படி கவலைப்பட்டு அழுது கொண்டே இருக்கத்தான் போகிறாய் என்றால் நான் இன்று முதல் சாப்பிடப் போவதில்லை'' என்று சொன்னான் கண்ணன்.

“அப்படியானால் நான் உங்கள் முன் அழவில்லை. நீங்கள் இல்லாத சமயத்தில் அழுகிறேன். அப்பொழுது எப்படித் தெரியப் போகிறது?'' என்றாள் கன்னி.

“என்னை ஏமாற்றினாலும் ஏமாற்றி விடலாம். ஆனால் உன் கண்களை ஏமாற்றிவிட முடியாது. அவைகள் நீ அழுதாய் என்று சொல்லி விடாதா'' என்றான் கண்ணன் கொஞ்சலாக. இதைக் கேட்ட அவளது குழந்தை மனம் சிறிது சாந்தியடைந்தது.

ஓர் நாள் படகோட்டிக் கொண்டே சென்று கொண்டிருந்தான் கண்ணன். படகு காற்றில் வேகமாக ஓடிக் கொண்டிருந்தது. படகின் மேல் தட்டில் கண்ணன் கன்னியின் அண்டையில் உட்கார்ந்து கொஞ்சும் மொழிகளைப் பேசிக்கொண்டிருந்தான். அன்று படகில் பிரயாணிகள் ஒருவர்கூட இல்லை. என்ன அதிர்ஷ்டம் என்று விதியை நொந்து கொண்டான் கண்ணன். வழியிலாவது எவராவது வந்தால் ஏற்றிக் கொள்ளலாம். இல்லையெனில் மறுபடியும் ஊர் போய்த் திரும்ப வேண்டியதுதான் என்று எண்ணிக் கொண்டிருந்தான். அப்பொழுது கன்னி கண்ணனின் தொடை மீது தலை சாய்த்துப் படுத்துக் கொண்டிருந்தாள். படகின் வெண்ணிறப் பாய் வெயிலைத் தடுத்து தூய காதலர்கள் மீது மங்கின மஞ்சள் ஒளியைத் தூவியது. கண்ணன் கண்களும் கன்னியின் கண்களும் ஒன்றையொன்று சந்தித்துக் கொண்டிருந்தன. அவைகள் என்னதான் இரகசியம் பேசுமோ அவைகளுக்குத்தான் தெரியும்.

கால்வாயின் கரையினின்றும், “அப்பா படகுக்காரரே கொஞ்சம் நிறுத்தப்பா படகை. நான் ஏறிக் கொள்கிறேன்'' என்ற குரல் வந்ததும்தான் கண்ணன் விழித்தெழுந்தான். கண்டதும் வியப்புற்றான் கண்ணன். ஏன்? அவன் தகப்பனார் கரையில் நின்றிருந்தார். படகை உடனே நிறுத்தி விட்டு “அப்பா'' என்று தன்னையும் அறியாமல் கூவி விட்டான். கன்னியும் அவளை அறியாமலே வியப்புற்று எழுந்து நின்றாள்.

எதிர்பாராத விதமாக மகனைச் சந்தித்த மகிழ்ச்சியை ஒருவாறு சமாளித்துக் கொண்டு “கண்ணா எத்தனை நாட்களாக உன்னைத் தேடுவது. வந்துவிடடா என்னுடன். நான் செய்தது தவறு தான். உன் இஷ்டப்படியே நடந்து கொள்'' என்றார் தகப்பனார் அவனைப் பிடித்துக் கொண்டு.

கரையில் நிகழ்ந்த காட்சி கன்னிக்குப் பெரு வியப்பை அளித்தது. தன்னை விட்டுவிட்டு அவன் எங்கே சென்று விடுவானோ என்று அவள் பேதை மனம் ஐயுற்றது.

“அப்பா நான் இங்கேயே நல்ல வாழ்க்கையைத்தான் நடத்தி வருகிறேன். எங்களுக்கு வேண்டிய பணம் கிடைக்கிறது. இவ்வாழ்க்கைதான் எனக்குப் பிடித்து விட்டது. இதை விட்டு என்னால் வர முடியாது'' என்று பிடிவாதமாகப் பதிலளித்தான்.

தகப்பன் எவ்வளவோ தன்னுலியன்றவரை கண்ணனின் மனதை மாற்றப் பார்த்தார். ஆனல் அவன் மனே வல்லமையுடையவனுய்க் காணப்பட்டான். பாலைவனம்போன்றிருந்த அவன் மனதிற்குக் கன்னியன்ருே ஊற்றைப் போன்றிருக்கிருள். அவளை இழந்தால் அவன் மனதிற்கு எங்கிருந்து குளிர்ந்த எண்ணங்கள் வரப்போகின்றன?

"அப்பா அதோ நிற்கின்ருளே படகின் மேல், அவள்தான் என் உயிரைக் காப்பாற்றினுள். அவள் இல்லை என்ருல் நீங்கள் என்னை வீட்டை விட்டுத் துறத்தினதின் பலனைக் காணமாட்டீர்கள். அவள் என்னைக் காப்பாற்றினுள். நான் இப்பொழுது அநாதையாகிய அவளைக் காப்பாற்ற வேண்டியவன். ஆகையால் நான் உங்களுடன் வர இயலாது. இந்த வாழ்க்கையே எங்கள் இருவருக்கும் போதுமானது. இன்பத்தை அளிப்பது. கபடமற்றது" என்று ஆவேசத்துடன் பேசி முடித்தான் கண்ணன்.

பாய் மரத்தின் கம்பத்தின் மீது கன்னி சாய்ந்த வண்ணம் கண்ணீர் விட்டுக் கொண்டிருந்தாள். கண்ணனின் தகப்பனர் கண்களில் கண்ணீர் ததும்பிக் கன்னங்களிரண்டின் வழியாகப் பாய்ந்து கீழே விழுந்து சொட்ட அவ்விடத்தை விட்டுத் திரும்பிச் சென்ருர்.

கண்ணன் தன் தகப்பனை மறுபடியும் கூப்பிடலாமா என்று கூட வாயெடுத்தான். அது தொண்டையிலேயே நின்று விட்டது. உடனே திரும்பிப் படகிற்கு வந்து படகை நகர்த்தி விட்டுக் கன்னியின் அருகில் வந்தான். அவள் அழுவதைப் பார்த்தான். மனம் பதை பதைத்தது. "கன்னி என்ன இதற்காக வெல்லாமா அழுவது?" என மனம் கனிந்துரைத்து அவளது கண்களைத் தன் வஸ்திரத்தால் துடைத்துஅவளை அணைத்துக் கொண்டான். அப்பொழுதுதான் உதயமான புது நிலவைப் பார்த்து.

"கன்னி அந்நிலாவைப் பார். எவ்வளவு அழகாய் இருக்கிறது" என்ருன் கண்ணன்.

"ஆமாம் நிலாதான் அழகாய் இருக்கிறது. நான் அழகாய் இல்லை போலிருக்கிறது என்ருள் கன்னி.

"நீதான் எப்பொழுது பார்த்தாலும் அழுது கொண்டிருக்கிருயே. அழுமூஞ்சி" என்ருன் கண்ணன்.

"அழுமூஞ்சியா நான். அப்படியானல் என்னை விடுங்கள். நான் போகிறேன்" என்று தன்னை விடுவித்துக் கொள்ளப் பார்த்தாள் கன்னி. ஆனல் முடியவில்லை. தான் அடக்கிக் கொண்டிருக்கும் சிரிப்பை அடக்க முடியாமல் சிரித்தாள் கன்னி. கண்ணனும் சிரித்தான். நீரில் தோன்றிய நிலவும் அச்சிரிப்பின் சத்தம் நீர் மீது மோதியதால் ஏற்பட்ட அதிர்ச்சியால் இங்கும் அங்கும் அசைந்தாடுவது போன்றிருந்தது. அக்காட்சி சந்திரனே தன்னைப் பார்த்துத்தான் காதலர்கள் அப்படிக் கொக்கரித்துச் சிரிக்கிருர்களோ என்று எண்ணி ஒளிய இடம் பார்ப்பது போன்றிருந்தது.

அதோ படகு போகிறது. அவர்கள் சிரித்த சிரிப்பு இன்னும் காதில் ஒலித்துக்கொண்டுதான் இருக்கிறது.

பாப்பா கதை:

மந்திரக் கல்

['தேவிகா']

முன்னொரு காலத்தில் அழகாபுரி என்று ஒரு பட்டணம் இருந்தது. அந்தப் பட்டணத்து வீதிகளில் ஒரு மந்திரவாதி, "கல்லு வாங்கலையோ கல்லு" என்று கூறிக் கொண்டு போனான். மந்திரவாதியைச் சந்தித்தவர்கள்.

அரண்மனைக்கு எதிரில் மந்திரவாதி முன்போலவே "கல் வாங்கலையோ கல்" என்று கூவினான். உப்பரிகையில் நின்று கொண்டிருந்த ராஜாவும் ராணியும் மந்திரவாதியைக் கூப்பிட்டு கல்லின் விலையைக் கேட்டனர்.

★ ★

அந்தக் கல்லின் விலையைக் கேட்ட பொழுது, 'ஒரு கோடி ரூபாய்' என்று சொன்னான். 'இந்தக் கல்லுக்கு ஒரு கோடி ரூபாயா?' என்று சிலர் ஆச்சரியப்பட்டனர். சாதாரணக் கல்லுக்கு ஒரு கோடி ரூபாயா? இவன் ஒரு பைத்தியம்! என வேறு சிலர் நினைத்தனர். ஆனால், ஒருவரும் அக் கல்லை வாங்கவில்லை!

முன்போலவே "ஒருகோடி ரூபாய்" என்றான் மந்திரவாதி.

"அற்பக் கல்லுக்கு ஒரு கோடி ரூபாயா? இவன் ஒரு பயித்தியமாயிருக்க வேண்டும்" என்று ராஜாவும் நினைத்தார். ஆனால், ராணி அந்த மாதிரி நினைக்கவே யில்லை. இதில் ஏதாவது அற்புதம் இருக்க

வேண்டும் என்று ராஜாவிடம் தன் கருத்தைச் சொல்லி, அந்தக் கல்லை எப்படியும் வாங்க வேண்டும் என்று பிடிவாதம் செய்தாள். ராணியின் கட்டளையை ராஜாவால் மீற முடியவில்லை!

ஒரு கோடி ரூபாய்க்கு அந்தக் கல்லை வாங்கிக் கொண்டு, "எதற்காக இவ்வளவு விலை?" என்று ராஜா கேட்டார். அப்பொழுது சூரியன் அஸ்தமித்து விட்டது. கொஞ்சம் கொஞ்சமாக இருட்டிக் கொண்டிருந்தது.

"இப்பொழுது இந்தக் கல்லை நிலத்தில் ஓங்கி அடியுங்கள். அதன் அற்புதம் என்னவென்று தெரியும்" என்று மந்திரவாதி பதில் சொன்னான்.

ஒருகோடி ரூபாய் மதிப்புள்ள கல்லைக் கீழே போட்டு உடைப்பதா? மந்திரவாதி தன்னை மோசம் செய்யப் பார்க்கிறான். இவனைச் சிறைப் படுத்த வேண்டும் என்று ராஜாவுக்கு ஒரு யோசனை தோன்றிற்று. மறுகணம், "கல்லைக் கீழே போட்டுப் பார்ப்போம். அற்புதம் நிகழா விட்டால், மந்திரவாதியைச் சிறைப் படுத்தலாம்" என்று மறு யோசனை செய்து கொண்டு, கல்லை ஓங்கி நிலத்திலடித்தார்.

கல் நிலத்தில் அடி பட்டதும் எதிரிலிருந்த மந்திரவாதி, ராஜா, ராணி, அரண்மனை, பட்டணம் எல்லாம் மறைந்து விட்டன.

உடைந்த கல் மட்டும் பல சிறு சிறு கற்களாக நாற்புறமும் சிதறி பளிச் பளிச் சென்று ஒளி வீசிக் கொண்டே மேலே மேலே போய்க் கொண்டிருந்தது. க்ஷண நேரத்தில், இருண்ட வானத்தில் திடீரென்று நட்சத்திரங்கள் மின்னிக் கொண்டிருந்தன. இதுதான் ஆகாயத்தில் நட்சத்திரங்கள் பிறந்த கதை!

★

எலிப் பிரச்னை

"அபரிமிதமாகத் திரியும் எலிகளை ஒழிப்பது எப்படி?"

"ரொம்ப சுலபம். எலிகளின் விலை கண்ட்ரோல் செய்யப்பட்டிருக்கிறது என்றால் போதும். உடனே எங்கும் எலிகள் பஞ்சம்."

காலப் பறவை

(ஆர். காந்திதாசன்)

விழிப்பு வந்தவுடன் என் காதில் விழுந்தது பறவை யொன்றின் குரல்தான். ஒலியற்ற அமைதியைப் பிளந்து கொண்டு பாய்ந்து வந்த அப்பறவையின் ஒலி கேட்டுத்தான் நான் விழித்துக் கொண்டேன் போலும்!

தூக்கத்திலிருந்து நாம் எப்படி விழித்துக் கொள்கிறேமென்பதும், விழித்துக்கொண்டு படுக்கையில் புரளும்போதே நாம் எப்படித் தூங்கிப் போகிறேமென்பதும் நம் உள்ளுணர்வைக் கொண்டு அறிய முடியாமலிருக்கிற விசித்திர அனுபவங்களல்லவா?

ஒருஉவமை கூறிப் பார்க்கலாம்; இரவும் பகலும் மாறி மாறித் தழுவி மறைவதைப் போன்றது தானே உறக்கமும், விழிப்பும்? இரவும் பகலும் இணைந்தால் ஒரு நாள்; நாட்கள் கூடினுல் மாதம்; மாதங்கள் திரண்டால் ஆண்டுகள். பின் ஆண்டுகள் பல்லாண்டுகளாகித் தொடக்கமும், முடிவுமில்லாத காலத் தேக்கத்தின் நீர்த்துளிகளாகி நிற்கின்றன. அப்படியானல் விழிப்பும், உறக்கமும் சேர்ந்து எதை உணர்த்துகின்றன? இவைகளும் படிப்படியாகச் சேர்ந்து எல்லையில்லாத நினைவுப் பெருஞ் சக்தியின் பகுதிகளாகி நிற்கக்கூடுமோ? யார் கண்டது? அவ்வளவு தூரம் தத்துவவிளக்கம் காணும் அறிவை நான் இன்னும் அடையவில்லையே!

தலையணைக்கப்பாலிருந்த 'டார்ச்'சை அடித்துப் பார்த்தேன்; மணி நாலரை. அதற்குள்ளாகவா எழுந்து விடுவது? நகரத்தில் குறைந்தது ஏழு மணி வரையிலாவது நான் தூங்குவது வழக்கம். அதை நினைத்துக் கொண்டு மறுபடியும் படுக்கையில் புரண்டு படுத்தேன்; ஆனல் தூக்கம் வரவில்லை. எனவே படுக்கையை விட்டு எழ வேண்டியதாயிற்று.

நகரத்தில் இயற்கைக்கும், மனிதனுக்கும் உள்ள தொடர்பு குறைவே. அங்கு அவனை எழுப்பக் கடிகாரம் போன்ற செயற்கைக் கருவிகள் தேவை. ஆனல் இங்கு – இக்கிராமத்தில் – மனிதன் இயற்கை யன்னையின் மடியில் தவழும் குழந்தை. இங்கு அவனை எழுப்ப இயற்கை யன்னையே இன்னெலி இசைப்பாளல்லவா? விடியற்காலப் பறவைகளிரண்டின் கூச்சலின் நடுவே, நாட்டுப்புறத்து மணி காட்டியான சேவலின் குரல் காதுக் கெட்டும் தூரத்தில் ஒலித்தது.

தாத்தா நகரத்திலிருந்து அந்தச் சிற்றூருக்கு அண்மையில்தான் குடியேறினர். அதுமுதல் அவர் என்னை அங்கொரு தடவை வந்திருந்து விட்டுப்போகும்படி கடிதங்கள் பல எழுதிவிட்டார். ஆனல் நான்கு நாளைக்கு முன்பு தான் அப்பாவின் அனுமதி எனக்குக் கிடைத்தது.

நாட்டுப் புறத்துச் சூழ்நிலைக்கு வந்து முழுக்க நாலு நாள் கூட ஆகவில்லை; அதற்குள் கருக்கலில் விழித்தெழும் இந்த நல்ல பழக்கம்

எனக்குண்டாகியதைக் கண்டு நான் வியப்புற்றேன்.

பிறவுயிர்களைப்போலவே மனிதனும் இயற்கையோடிருந்து வாழத்தான் பிறந்திருக்கிருன்; ஆனாலும் செயற்கை வாழ்வு அவனை இறுகப்பிடித்துக் கொண்டால், அவன் வழியிலிருந்து தவறி மாறிப்போகிருன். பிடிதளர்ந்தால்? – இழுத்து விட்ட எஃகுச் சுருளைப்போல் அவன் மறுபடியும் இயற்கை வழியில் இணைந்து செல்வான் – 'இதில் வியப்பேது'– என்று பின்னர்தான் நான் உணர முடிந்தது.

காலையமைதியைக் கலைக்கும் புள்ளொலியோடு காகமும் சேர்ந்து கரைந்தது. நான் வீட்டை விட்டுக் கிளம்பி கிழக்கு நோக்கி நடந்தேன். வயல்களின் குறுக்கே நடப்பது எனக்கு மிகவும் உற்சாகமாயிருந்தது. வெளுத்துக் கொண்டிருந்த கீழ்வானத்தின் முகட்டில் விடி வெள்ளி நிலையில்லாத குறிக்கோள் போல் கண்ணுக்குத் தெரியாத வேகத்தில் மேலே நகர்ந்து கொண்டிருந்தது.

அது இளவேனிற்காலம்; வயல்களெல்லாம் பச்சைப் பசேலென்று காட்சி யளிக்கவில்லை; அறுத்த பின்பு கட்டை கட்டையாக நிற்கும் காய்ந்த தாள்களுக்கிடையே சிறு சிறு செடிகளும் புல் பூண்டுகளும் மண்டிக் கிடந்தன. அந்தச் செடிகள் உளுந்து, பயிறு செடிகளாக இருக்கலாம் என்று நான் ஊகித்தேன். விவசாயப் பத்திரிகை யொன்றில் கோடை காலத்தில் நஞ்சை வயல்களில் உளுந்து, பயிறு போடலாமென்று படித்திருக்கிறேனல்லவா?

'கடக்' 'கடக்' கென்று வயல் மேட்டில் ஒரு கட்டை வண்டி நகர்ந்துகொண்டிருந்தது. வண்டியோட்டி நல்ல உடற்கட்டு வாய்ந்த வாலிபன். இடையில் கோவணம் – தலையில் முண்டாசு. தாழ்ந்த குலம் என்று நாம் தள்ளி வைத்திருக்கிறேம்; ஆனல் இயற்கை அவர்களுக்கு நல்ல உடல் வளப்பத்தை அளித்திருக்கிறது. வண்டியில் குப்பை ஏற்றப் பட்டிருந்தது. வயலுக்கு எருவடிக்கும் வேலையை அவ்வளவு காலையில் துவக்கி விட்டான் அவன். இன்னும் சாகுபடி காலமாயிருந்தால் இருட்டிலேயே எழுந்து வேலையைத் துவக்கி விடுவானே என்னவோ? வேலை செய்வது அவனுடைய இஷ்டமாயிருந்தாலல்லவா அவன் இருட்டாயிற்றே என்று யோசிக்க?

அவன் மாட்டை யவிழ்த்து விட்டு, வண்டியின் முகக்கணையை மேலே தூக்கிவிட்டான். வண்டி குத்திட்டு நின்றது; குப்பையை மண்வெட்டியால் கீழே தள்ளி விட்டுக்கொண்டிருந்தான் அவன். நான் மேலே நடந்தேன்.

கிழக்கே வெண்ணிற வானம், மெல்ல மெல்லச் சிவப்பேறிக் கொண்டிருந்தது. நகரத்தில் எங்கள்வீடு கடற்கரை யோரமாகவே இருந்ததால், நான் எத்தனையோ தடவை நீலக் கடலுக்கப்பால் எழும் இளங் கதிரோனைக் கண்டு எழுச்சி யடைந்ததுண்டு. ஆனல் அலைகடலின் ஒலிக்கும், நகரத்துப் பேரிரைச்சலுக்கும் நடுவில் உதய சூரியனைக் காணுவதைவிட, இந்தச் சந்தடியற்ற சிற்றூரின் வயல்களில் நின்று கொண்டு தூரத்தே காணப்படும் தென்னந் தோப்புகளுக் கப்பால் உயர்ந்து எழும் பரிதியைக் காண்பது எனக்கு எத்தனையோ மடங்கு இன்பமாயிருந்தது.

தெற்கே ஒரு கும்பலாகத் தோன்றும் சேரியின் சின்னஞ் சிறு குடிசைகள், வயற் பரப்பின் நடு நடுவே வரப்புகளில் வளர்ந் தோங்கி நிற்கும் பனைமரக் கூட் டம், திட்டுத் திட்டாகக் காணப் படும் களத்து மேட்டு வைக்கோற் போர்கள், கிராமத்துச் சிறிய தெருவின் வீடுகளுக்கு நடுவே உடைந்துபோன கலசங்களைத் தாங்கி நிற்கும் கோபுரம் இவை யாவும் கதிரவனின் காலைக் கதிர் கள் பட்டுப் பொன்னைப்போல் மின்னத் தொடங்கின. உள்ளத் தைக் கொள்ளை கொள்வதாயிருந் தது உண்மையிலேயே அம்மருத நிலக்காட்சி. என் சிந்தனை உந்தப் பட்டது.

உலகம் தொடங்கிய நாள் முதல் எத்தனை எத்தனை கவிஞர்கள் இந்த இணையில்லா எழிற் காட்சியைப் பற்றிப் பாடிப் பாடிக் களித்திருக் கிறார்கள்! தொல்காப்பிய நாள் தொட்டு இன்றுவரை தமிழில் எத் தனை புலவர்கள் இவ்வியற்கையின் ஈடில்லா ஓவியத்திறனைப் பற்றி வாயாரப் புகழ்ந்து பாடியிருக்கி றார்கள்! ஆனால் அந்தப் புலவர் களும், அவர்கள் புலமையை ரசித்த ரசிகர்களும், அவர்களைப் போற்றிப் புகழ்ந்த வள்ளல்களும் கால வேகத்தில் மண்ணோடு மண் ணாக்கப் பட்டு விட்டனர்!

காலத்தின் போக்கில் அவர் களுக்கும் எனக்கும் இடையில் தூரம் அதிகம். ஆனால் அவர்களுக் காக என் உள்ளம் ஒரு கணம் ஏக் கத்தால் நிறைந்து வடிந்தது. பரிதி யின் ஒளி வட்டத்தைச் சுற்றி அவர்கள் யாரும் புன் முறுவல் ததும்பும் முகங்களுடன் கை கோர்த்துக் கொண்டு நிற்பது போலத் தோன்றியது எனக்கு. வெறுந் தோற்றம் எத்தனை கணங் கள் நிலைத்து நிற்கும்?

"அவர்கள் அழிந்து பட்டார் கள். ஆனால் அவர்கள் அமரர்கள்! அவர்கள் புகழ் என்றென்றும் மறையாது!" என்று நீங்கள் கூற லாம். நான் அதை ஒப்புக் கொள்ள மாட்டேன். அவர்க ளது புகழுக்கும் முடிவு உண்டெ ன்றுதான் நான் கருதுகிறேன்.

காலப்பறவை ஒரு பிணம் பிடுங்கிக் கழுகு. அந்த மகா மேதைகளை அது விழுங்கி விட் டது. அவர்களுடைய புகழை அது விழுங்கக் கொஞ்சம் அதிக காலமாகும். அவ்வளவுதான்! புகழென்பது மனித உள்ளங் களின் நன்றி ததும்பிய வணக்கந் தானே? அவ்வுள்ளங்களைப் படைத்த உடலங்கள் – அதாவது அந்த மனிதக் கூட்டமே மறைந்து விட்டால் புகழுக்கு எங்கே இடம்? உயிர்நூல் வல்லுநர்கள் ஏதோ ஒரு காலத்தில் மனித பரம்பரை என் புவியின் உயிர்க் கூட்டம் முழுவதுமே அழியப் போகிற தெனக் கணக்கிட்டுக் கூற வில்லை யா? வான நூல் வல்லுநர்களும் இவ்வாறே பூமிக்கு ஆயுளை நிர்ண யிக்க ஆராய்ச்சிக் கூடங்களில் அல்லும் பகலும் உழைக்க வில்லையா?

இவற்றிற்கெல்லாம் முடிவு கட் டும் அந்தக் கொடும் பறவை – அந்தக் கழுகு மாத்திரம் சிரஞ்சீவி வரம் பெற்றது போலும்! கடவு ளின் முதலிலக்கணம் – ஆதியும் அந்தமும் இல்லாதவன் என்பது – காலத்தின் சிரஞ்சீவித் தன்மை யைக் கொண்டுதானே வரையறுக் கப்பட்டது?

சிற்றூரின் அமைதியிடை என் மனத்தி லெழும்பிய எண்ணச் சுழல்களிலடிபட்டு வீடு திரும்பி னேன். நல்ல காலையுணவும், காலையில் சுற்றிய களைப்பும்

என்னை அயரச் செய்தன. கொஞ்சம் துயின்று பின்னர் விழித்த போது மணி பத்து இருபத்தைந்து.

எங்கேயோ நாதசுரக்காரன் எழுப்பிய 'தன்யாசி' யின் சுருள்களைக் காற்றலைகள் தாங்கி வந்தன. நேரத்திற்கேற்ற இராகம். தூரத்திலிருந்து மிதந்து வந்த அப்பண் என் நெஞ்சில் என்னென்னவோ நினைவுகளைக் கிளறிவிட்டது. இசை என் உள்ளத்தோடு இழைந்தது; நினைவுக் கதிர் இலை விட்டு இலை தாவும் தத்துக்கிளி போல் தாவிக் கொண்டே சென்றது.

நான் பழைய தமிழகத்தின் இசைக் கலையைப் பற்றி நினைத்துப்பார்த்தேன். பாணனும், விறலியும் யாழெடுத்துப் பாடிய விதம் விதமான பண்கள் என் காதில் வீழ்ந்தன. நுணுக்கமான நரம்பொலிகளை எழுப்பி இதயத்தோடு துடித்தெழும்பிய அவ்விசையைத் தமிழரசர்கள் காது கொடுத்துக் கேட்பது என் மனக் கண்முன் தோன்றியது. அந்தக் காலம் இனி மீண்டும் வருமா? பாணனும், விறலியும் – அந்தத் தமிழ் மன்னர்களும் – அவர்கள் வாழ்ந்த பழைய தமிழகமும் இன்று எங்கே? உலகத்துப் பெரிய பெரிய சாம்ராஜ்யங்கள் தம் அழிவோடு தலை வாழ்வு வாழ்ந்த தொன்மைத் தமிழகத்தையும் தழுவிக் கொண்டு மறைந்து விட்டன போலும்!

ஐயாயிரம் ஆண்டு கட்கு முன்னமேயே மொழி, கலை, நாகரீகம் இவைகளில் ஈடும் இணையுமின்றி வளர்ச்சி பெற்றுப் புகழ் வீசிய தமிழகம், காலப் பறவையின் கூரிய நகங்களால் கிழிக்கப்பட்டு விழுங்கப் பட்டுவிட்டது. பழமைத் தமிழகத்தின் எச்சங்கள் சில இன்று காணப்படலாம். ஆனால் நாளை இவைகளுக்கும் அழிவுவரலாம். காலப்பறவை இந்த அழிவு வேலையைச் செய்து விட்டு அலகைத் தூக்கிக் கொண்டு நர்த்தன மாடுகிறது, கழுகுக்குக் களிப்பு பிணத்தின் நிணத்தைக் கண்ணுறும் போதுதானே?

அன்றுமாலை நேரத்தில் உலாவி வரச் சூரிய காந்தி மலர் போல மேற்கு நோக்கி நடந்தேன். கிராமத்து மேற்குக் கோடியிலிருந்த பாழடைந்த கோவிலுக்கருகே உடைந்துபோன படிக்கட்டுகள் காணப்பட்ட குளம். காலத்தின் பிடியைப்போன்ற தனது வேர்களை நாலாபக்கத்திலும் பரப்பிக் கொண்டிருந்த அரச மரத்தின் நிறம் மாலையின் மஞ்சள் வெயில் பட்டு மாறி யிருந்தது. 'சர சர' வென்ற சத்தத்துடன், எழும்பிய வேகத்தில் அரச மரத்துக்கிளை ஒரு அடி கீழே அமுங்கும்படி சிறகை விரித்துப் பறந்தது ஒரு கழுகு. களத்து மேட்டு நெற் சேர்களின் மேல் விழுந்த அதனுடைய நிழல் எனக்குப் பார்ப்பதற்குப் பயங்கர மானதாகத் தோன்றியது!

காலப் பறவையையும், அழிவையும் ஒன்றாகச் சேர்த்துத்தான் நான் அந்தச் சமயத்தில் எண்ணினேன். அப்படியானல் காலம் ஆக்க வேலை செய்ய வில்லையா? கடைசியில் வெற்றி பெறுவது எது? ஆக்கமா, அழிவா? இதற்கு விடை மிகமிகச் சிக்கலானது. இதை விடுவிக்க மனிதன் இயலாதவன். துவக்கமும், முடிவுமில்லாத காலத்தை வரையறுத்துக்கூற சின்னாட்கள் உயிர் வாழ்ந்து மரித்துப் போகும் மனிதனா லாயக் கானவன்?

'இல்லை' யென்றே எனக்குப் பட்டது. மேற்றிசையில் கதிர்க் கோளம் மறைந்து விட்டது; நான் வீடு திரும்பினேன்.

சோகக்கறை படிந்த நினைவுகள் எழுவது எனக்குப் பிடிக்கவில்லை. அதைமாற்ற வீட்டிற்குச் சென்றதும் தாத்தாவுடன் உற்சாகத்துடன் பேச்சைத் தொடங்கினேன். அவரும் வேடிக்கையாகத்தான் தனது அனுபவங்களைப் பற்றிச் சொல்லிக் கொண்டே வந்தார். ஆனல் இடை யிடையே "காலம் யாரையப்பா விடும்? எவ்வளவு புத்திசாலி யாயும், செல்வம் படைத்தும் இருந்தென்ன? போதாத காலம் வந்துவிட்டால்..........." என்று இழுத்தார்.

நான் உரையாடலைச் சீக்கிரமாகவே முடித்துக் கொண்டு, சாப்பிட்டுவிட்டுப் படுத்தேன். உறக்கம் வரவில்லை யாதலால் உற்சாக மூட்டக் கூடிய பொருள்களாக நினைத்துப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

அந்தச் சமயத்தில் வீட்டின் கூரை மேட்டிலேயோ அல்லது பக்கத்து மரத்தின் கிளையிலேயோ உட்கார்ந்து கொண்டு ஆந்தை யொன்று அலறியதைக் கேட்டுத் திடுக்கிட்டேன். இரு காதுகளையும் அடைத்துக் கொண்டு, கண்களை இறுக மூடினேன். ஆனல் என் இதயத்தின் போக்கை மாத்திரம் நான் கட்டுப் படுத்த முடியவில்லை. அது 'காலப்பறவை' 'காலப்பறவை' என்று மெதுவாக ஆனல் உறுதியாக ஒலித்துக் கொண்டே யிருந்தது.

★

ஒருமை, பன்மை

ஒரு மனிதன் தப்பிதம் செய்தால் "அந்த மனிதன் ஒரு முட்டாள்" என்கிறன் ஆண். அதே தப்பிதத்தை ஒரு பெண் செய்தால் "பெண்களே முட்டாள்கள்!" என்கிறன் ஆண்.

கலை வாழ்க்கை

(அரு. பாபனாசம்)

கோரைப் புல் வேய்ந்த குடிசை யொன்று.

அதன் அருகே...

நதிக் கன்னி சுழித்துக் கொண்டே சென்றாள்.

கன்னியிருட்டு.

நதியின் சுழலை நோக்கிக் கொண்டிருந்தான் மந்திரி குமாரன் மாணிக்கம்.

அவன்?...

ஆச்ரம குருவிடம் வித்தை கற்றுக்கொள்ள வந்தவன்.

அவன் மனதில்...

எண்ணற்ற சுழல் குயவன் சுற்றி விட்ட சக்கரச் சுழல் போல!

அவன் சிந்தனை...

அவன் தோளில் பட்ட பெண்ணின் குளிர்க்கரத்தால் சிதறியது, கொல்லன் பட்டரையில் சிதறிடும் பொன் துளிகள் போல!

"யார் வல்லியா?"

"ஆம், நான்தான்" அவன் கேள்விக்கு அந்தப் பெண்ணின் பதில்.

"வல்லி! பார் நதியின் துள்ளலை. நம்முடைய காதல்த் துள்ளல் போலல்லவா துள்ளுகிறது?"

"ஆம் சுவாமி."

சிறிது நேரம் மௌனம். அந்தக் கன்னியிருட்டில் உதிர்ந்த பூக்கள்போல் உறங்கிக் கிடக்கும் மக்களிடை நிலவும் மௌனம்.

"வல்லீ! உன்னிடத்தில் வெகு நாட்களாக ஒன்று கேட்க வேண்டுமென்றிருந்தேன். அதை இன்று கேட்கலாம் என்று எண்ணுகிறேன்."

"என்னிடத்தில் அப்படியென்ன கேட்க வேண்டுமென்று எண்ணினீர்கள்?"

"வல்லீ!..."

அதற்குமேல் அவன் வார்த்தை தடைபட்டது.

"என்ன சுவாமி சொல்லுங்களேன்"......

"வல்லீ! நீயோ என்னைக் காதலிப்பதாகக் கூறுகிறாய். நாமிருவரும் கலை வாழ்க்கை அநுபவித்தால் என்ன. நீயோ நாட்டியத்தில் சிறந்தவள். நானோ உள்ளத்தி லெழுகின்ற எண்ணத்தை வடிக்கும் புலவன். நான் பின்னால் மந்திரியான பின் கலை வாழ்க்கை அநுபவிக்கலாமா?"

"அநுபவிக்கலாம். ஆனால்?..."

அவள் வார்த்தை?

எதையோ எண்ணித் தடை பட்டது.

"ஆனால் என்ன வல்லி?"

"தாங்களோ மந்திரியின் குமாரன். நானோ ஏழை குருவின் மகள் — தங்களுக்கும் எனக்கும் எவ்வளவோ வித்தியாசம்.

"வல்லி! முல்லை மலருகிறது தென்றலில். அதனை நோக்கி வருகிறது வண்டு. வண்டு கருப்பென்று எண்ணி அதற்கு இன்பத் தேன் வழங்காமல் முல்லை மொட்டாகி விடுகிறதா? அதுபோல் காதலுக்கும் பணக்காரன் ஏழையென்ற வித்தியாசம் கிடையாது. நான் எவ்விதத்திலும் உன்னையே மணப்பேன்."

அந்த நேரத்தில்?...

வானப் பணக்காரன் இருள் மூடி விலக்கித் தன் பெரிய தங்கக் கட்டியை எல்லோருக்கும் காட்டுவது போல் கதிரவன் மெள்ள மெள்ளக் கீழ்த்திசையில் தோன்ற ஆரம்பித்தான்.

அவர்களிடையே?...

அந்தப் பேச்சிற்குப் பின் மௌனம்...

அவர்கள் அதரசிப்பிகள்...

நெருங்கின.

ஆனால் அந்த இன்பம் நீடிக்கும் முன்?......

அரசகுமாரன் பாலன் வந்து விட்டான்.

அவர்கள் இன்ப மரம் அவன் வருகை யென்ற கோடலியால் வெட்டப்பட்டது.

"வா. பாலா."

இது மாணிக்கம் குரல்.

அவள்...

மெல்ல அவனை விட்டுக் கொஞ்சம் விலகியிருந்தாள்.

பாலன் மனதில்......

பொறாமைத் தீ தன் நாக்கை நீட்டியது.

ஆம். அவன் யாரை நேசிக்கிறானோ அவளுடன் மாணிக்கம் பேசிக் கொண்டிருக்கிறான்.

"இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள். குரு உங்களைத் தேடிக்கொண்டிருக்கிறார்."

இந்த வார்த்தை......

அவன் உள்ளவில்லிலிருந்து தெரித்த கோபமும் பொறாமையும் கலந்த சரங்கள்.

மூவரும்?......

நதியில் மூழ்கிவிட்டு ஆசிரமம் நோக்கி நடந்தார்கள்.

2

மாலை நேரம்.

கதிரவன் உதிரப் போர்வைக்குள் மறைந்து கொண்டான்.

தென்றலின் மெல்லிய வீச்சில் தேன் சிதறி முல்லை மொட்டவிழ்த்து மணம் பரப்பியது சோலையெங்கும்.

அந்நேரத்தில்...

வல்லி சோலையில் முல்லை மலர் முல்லைக் கொடி போல் நின்று பறித்துக் கொண்டிருந்தாள்.

அந்தக் காட்சியினை...

பார்த்து விட்டான் பாலன்.

"பார்த்ததும் தன் மன மலரைப்......

பறிகொடுத்து நின்றுனவள் பால்."

அவன் கால்கள்......

அவள் அருகே இழுத்துச் செல்லப்பட்டன. அழகான மலரை நாடிச் செல்லும் வண்டு போல!

"வல்லீ"

இந்த வார்த்தை...

அவன் ஆசையிலெழுந்த சொல்......

அவள்...

திரும்பினுள்.

"தாங்களா! என்ன வேண்டும்?"

அவள் இனிமைத் தேன் தோய்ந்த சொல்.

"வல்லீ! அழகான மலரை நாடி வந்திருக்கிறது வண்டு."

அந்த மலர்?...

அதன் பொருளை உணர்ந்து விட்டது.

அவள் முகத்தில்...

எண்ணற்ற நெளிவுக் கோணங்கள்.

மலர் முகம்...

கருகிப் போய் விட்டது.

"தாங்கள் இப்படிப் பேசுவது. இந்த மாதிரி வார்த்தைகள் என்னிடம் இனிப்பேச வேண்டாம்."

அவள் நெஞ்சம் விம்மிய சொற்கள்.

அவள் கண்களில் சிறிது கண்ணீர் தெறித்தது.

அவன் முகம்...

கருத்தது கருமேகம் போல!

"வல்லீ! நான் உன்னிடம் இப்பொழுது பேசியதை மட்டும் குருவிடம் சொல்ல வேண்டாம்."

இந்த வார்த்தையை அவன் கூறிக் கொண்டே போய் விட்டான், படமெடுத்த பாம்பு படங்குறைந்து சென்று விடுதல் போல!

அவள்...

மலர் நெஞ்சில்...

பல எண்ணக் குமிழ்கள் வெடித்தன.

3

அவன் - பாலன்...

இரவெல்லாம் உறங்கவில்லை.

அவன் உள்ளத்தில்...

பந்தரில் படரும் கொடியெனப் படர்ந்தது அவனுள்ளப் பந்தரில் சிந்தனைக்கொடிகள்......

அவன் கோபமெல்லாம்...

மாணிக்கம் மேல் பாய்ந்தது...

அவனுள்ளத்தில்...

அவனைக் கொன்றுவிட எண்ணம்...

அப்படிக் கொன்றுலாவது......

வல்லி கிடைக்க மாட்டாளா என்ற மூட எண்ணம்.

நாட்டைப் பிளந்தால் தனக்கு நலமாகுமென்று எண்ணும் சுய நலவாதிகள் எண்ணம் போல!

அவனை வெகு நேரம்...

துயில் போர்வை மூடவில்லை...

விடியக் கொஞ்ச நேரத்துக்கு முன்...

அவன் துயின்று விட்டான்.

அவன் நித்திரையில்...

பல கனவுகள்...

சிறிது நேரத்தில்...

காலைக் கதிரவன் உதயம். அவன்...

ஒளிக்கதிர் தழுவலில்

விழித்தெழுந்தாள் நிலமகள்.

"பாலா! என்ன இன்னும் எழுந்திருக்கவில்லையா?"

மாணிக்கம் அவனை எழுப்பினன்.

பாலன் விழித்தான்...

அவன் கண்டதென்ன?...

எவனை அவன் வல்லிக்காக விரோதித்தானே அவன் அவனை எழுப்பிக் கொண்டிருந்தான்.

அவன் அருகே...

வல்லியும் குருவும் நின்று கொண்டிருந்தார்கள்.

குரு உத்திரவுப்படி நீராடி விட்டு வரச் சென்றான்.

ஆனல் அவன் குளிர்ந்த நதியில் மூழ்கியும் அவன் பொருமைக் கனல் அவிந்தபாடில்லை.

வல்லியும் மாணிக்கமும் சந்திக்கும் தோறும் அவனுள்ளத்தில் பொருமைக் கனல் அதிகமாக எரிய ஆரம்பித்தது.

4

காலமென்ற கடிகாரத்தில் வருடமுள் நான்கில் வந்து நின்றது.

மாணிக்கம் பாலன்...

குருகுல வித்தை முடிந்தது.

அவர்கள் குருவைப் பிரியும் நாளும் வந்தது.

வல்லியின் உள்ளத்தில்...

கலக்கம்...

மாணிக்கத்தின் உள்ளத்திலும்

சோகம்...

பிரியப்போகும் கொஞ்ச நேரத்துக்கு முன்...

வல்லியும் மாணிக்கமும் சந்தித்தார்கள். நதிக்கரைப் பக்கத்தில்.

அவர்களுக்குத் தெரியாமல்...

பாலன் நின்று கொண்டிருந்தான்.

"வல்லீ! காலம் நம்மைப் பிரிக்கிறது. ஆனல் இந்தப் பிரிவு தற்காலிகமானதே. இந்தப் பிரிவு நமது பிற்கால ஒற்றுமைப் பாதைக்குத் தளங்களாகும். நான் எப்படியும் உன்னையே மணப்பேன்.

"இது நிச்சயந் தானு?..."

"ஆம். நிச்சயந்தான். வல்லீ நீதான் என்னுடைய கலை உலகம் செய்ய உளி. நான் சிற்பன். நாமிரண்டு பேரும் சேர்ந்துதான் நம் கலை உலகத்தை நிறுவ முடியும். வல்லீ! நேரமாகி விட்டது. நான் வரட்டுமா?"

அவள் கண்கள்...

கண்ணீரை உருட்டி விட்டன முகத்தில்...

அதுதான் அவள் பதில்...

பாலனும் மாணிக்கமும் புறப்பட்டார்கள்.

5

காலச் சிற்பன் வருடக்கல்லில் 'டக், டக்' கென்று ஆறுதட்டு கள் தட்டினான்.

பாலன்...

மலை நாட்டரசனானான்...

மாணிக்கம்...

மந்திரியானான்.

பாலன் உள்ளம் மட்டும்...

பழைய நினைவுகளை மறக்க வில்லை.

மாணிக்கத்தை எப்படி ஒழிப்ப தென்ற திட்டம் அவன் மனதை விட்டகலவே யில்லை.

அதற்குத் தருணம்...

கிடைத்தது.

பாலனை எதிர்த்து வந்தான் சாலை நாட்டரசன்

அவன் தோற்கடிக்கப் பட் டான் மாணிக்கத்தால்.

ஆனால் மாணிக்கத்தின் வீரத்தை மெச்சுவதற்குப் பதிலாக அவனை குற்றவாளிக் கூண்டிலேற்றி விசாரித்தான் பாலன்.

ஏன்?

மாணிக்கம் சாலை நாட்டரச னுக்கு உடந்தையாக யிருந்தா னென்று பாலன் குற்றம் சாட்டி விசாரித்தான்.

உளவுக்கு உயிர் பலி

இது பாலன் சட்டம்.

மாணிக்கம் மரணமடைந்தான்.

அவன் மரணச் செய்தி கேட்டு வல்லியின் மனம் உடைந்தது.

ஆனால் பாலன் உள்ளத்தில்...

அவன் நெடுநாளாக நினைத்த ஆசை முடிந்தது.

கலை உலகம் செய்ய உளியிருந்து பயனென்ன. சிற்பன் வேண் டாமா?

வல்லி ஒரு நாள்...

நதியில் நீராடச் சென்ற போது...

காணாமல் போய் விட்டதாகக் குரு வருத்தப் பட்டுக் கொண் டார்.

வல்லி எங்கே சென்றிருப் பாள்...?

சிற்பனைத்தான் நாடிச் சென் றிருப்பாள்.

பாலன் ஆசையில் நிராசைப் புற்று மூடியது.

6

பல வருடங்களுக்குப் பிறகு...

பாலன் இறந்தான் பிரமசாரி யாக.

அவன் நாடு?...

சாலை நாட்டரசன் கைப்பற்றிக் கொண்டான்.

புல் வேய்ந்த குடிசை...

காலப் புயலால் அழிந்தது.

ஆனால்...

அருகே சென்ற நதி மட்டும்...

சலசலத்து அமர கீதம் பொழிந்து சென்றது.

அதன் அருகே சென்றவர் களுக்கு...

அடிக்கடி ஒரு வார்த்தை கேட் கிறது.

என்ன?......

"கலை உலகம் செய்ய உளி நீ! சிற்பன் நான்."

கதையும் காரணமும்

'துளசி'

டப், டப், டப் "யார் உள்ளே? பத்மநாபா. பத்மநாபா. கத வைத்திற" என்று தாளிட்டிருந்த என் அறையின் கதவைத் தட்டினேன்.

பத்ம நாபன் என்னுடைய அன்பன், அத்துடன் அறைத் தோழனும்கூட. திருச்சியில் நாங்கள் வெவ்வேறு கலாசாலையில் படித்தாலும், ஒரு அறையில் தான் வசித்து வந்தோம். நான் சரித்திரப் பாடத்தில் நல்ல மார்க்கு வாங்குவது போல் கணிதத்தில் அவர் தான் வகுப்பில் முதல். இதைத் தவிற சிறு கதைகளும், பாட்டுக்களும் எழுதி பத்திரிக்கைகளுக்கு அனுப்புவது உண்டு. ஆதலின் அவர் அதைப்பற்றி மிகவும் பிரமாதமாக பேசிக் கொள்வார். என் மிகவும் அளப்பார். ஆனால் அது எனக்குச் சிறிதும் பிடிப்பதில்லை. இருந்தாலும் இதனால் அவர்பாலுள்ள அன்பு அதிகமாயிற்றே தவிற குறைவு படவில்லை.

"பத்மநாபா என்ன செய்து கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டுக் கொண்டே உள்ளே சென்றேன்.

"ஒன்றுமில்லை" என்று எப்பொழுதும் போல் கூறிவிட்டு, நெற்றியில் படிந்திருந்த மயிரை ஒதுக்கிக் கொண்டே மீண்டும் அவரது மேசையருகில் சென்று உட்கார்ந்தார்.

"அடே என்னப்பா" இந்த நேரத்திலேயுங் கூட எழுதிக் கொண்டு இருக்கிறாய்"

"என்ன அப்படி நேரமாய் விட்டது? மத்தியானத்தில் பின்னே என்ன செய்வதாம்?"

"அட ராமா! என்ன மத்தியானமா? ரொம்ப சரி. மணி 5½ ஆகப் போகிறது மத்தியானமாம், என் புத்தி" .... என்று இழுத்தாற் போல் கேட்டேன்.

"என்ன மணி 5½யா?" என்று கேட்டார். அவருடைய கண்களில் ஆச்சர்யம் தாண்டவமாடியது.

பின்பு கடிகாரத்தைப் பார்த்து நான் கூறியது சரிதான் என்று அறிந்து கொண்டு "நேரம் போனதே தெரியவில்லையே" என்றார்.

"ஆம் உமக்கெங்கு நேரம் போனது தெரியப் போகிறது? கவிஞர்கள், காதலர்கள், பைத்தியக்காரர்கள் முதலியோருக்கு காலம் கழிந்து செல்வதே தெரியாதாம்......... உம் என்ன அவ்வளவு பிரமாதமாக எழுதிக் கொண்டிருந்தீர். காதல் கடிதமோ?

அல்லது வேறு ஏதாவது" என்று கூறிக்கொண்டே அவர் மேசையருகிலுள்ள கட்டிலில் அமர்ந்தேன்.

"ஊஹூம்,...... அதெல்லாம் ஒன்றும் கிடையாது"

"ஊசிக்கூசி பாய்வதை எங்காவது கண்டிருக்கிறீரா? உங்கள் சரக்கை என்னிடத்திலேயே காட்ட ஆரம்பிக்கிறீர்களே" என்று கேட்டேன்.

"ஒன்றும் இல்லை ஒரு சிறு கதை" என்று பதில் தந்தார்.

"எங்கே அப்படியானல் நானும் பார்க்கின்றேன்" என்று அவரிடத்தில் நெருங்கினேன்.

"அதற்கில்லை துளசி, கதை எழுதுவதற்கு முன் படித்தால் அதனுடைய சிறப்புத் தெரியாது, அதற்காகத்தான். உன்னிடம் காட்டாமல் யாரிடத்தில் காட்டப் போகிறேன். பத்திரிகைக்கு அனுப்பு முன் தவருமல் உன்னிடத்தில் காட்டுகிறேன்."

"ஆமாம் எந்தப் பத்திரிகைக்கு அனுப்பப் போகின்றீர்?"

"வாணி"க்குத் தான். பின் வேறு எதற்கு? "வாணி" ஆசிரி



ஊஹூம்...... நீர் இப்பொழுது பார்க்கக் கூடாது. எங்காவது பரிமாறுவதற்கு முன் சாப்பிடுவதுண்டா? ஒரே அவசரக் குடுக்கையாக இருக்கின்றீரே! முழுவதும் எழுதினபின் காட்டுகின்றேன்."

"சரி, சரி, ஒரே பிகு பண்ணுதேயும். சும்மா எழுதினதை இப்படிக் கொடும், பார்த்து விட்டுத் தருகின்றேன்- என்னமோ மனிதன் பிரியமாய்க் கேட்டால்....."

யர் முத்துசாமி கண்டிப்பாய் ஒரு கதை எழுதித் தர வேண்டும் என்று வற்புறுத்தினர். அதனல் தான் இதை எழுதத் தொடங்கினேன்"

"அப்படிச் சொல்லு அதுதான் பார்த்தேன். சோழியன் குடுமி சும்மா ஆடுமா? உம் — நம்ம பத்மநாபனும் இனி பெரிய எழுத்தாளர் ஆகிவிடுவார். முன்பே கூற வேண்டியதில்லை. சாம்பிராணியின்றி ஆடும் தெய்

வம், சாம்பிராணி தூபம் போட்டால் சொல்லவா வேண்டும். ''

'' அதிருக்கட்டும் நீர் என் கதையை விரும்புகிறீரா? ''

'' உண்மையைச் சொல்லட்டுமா? பொய்யைச் சொல்லட்டுமா? உண்மையாகக் கூறுகிறேன், நான் உங்களுடன் தர்க்கம் பேசினாலும் உங்களுடைய கதையை மிகவும் விரும்புகின்றேன். ''

'' சரி தான், கேட்டால் ''...... என்று இழுத்தார்.

'' ச்சு பார்த்தாயா, உண்மையைச் சொன்னால் அப்படித்தான். நல்லவனுக்குக் காலமெங்கே? ''

நான் இவ்வாறு கூறும் பொழுது அவர் எதிரிலுள்ள சுபாஷ் பாபு படத்தையே பார்த்துக் கொண்டு சிறிது நேரம் மௌனமாக உட்கார்ந்திருந்தார். அந்த மௌனம் அவருடைய வருங்காலத்தைப் பற்றி யோசிப்பது போல் இருந்தது. பின் யாது நினைத்தாரோ என் பக்கம் பார்த்துச் சிரித்தார்.

சிரித்துக் கொண்டே '' சொல்வதெல்லாம் சொல்லியாயிற்று இன்னும் இருக்கா '' என்ற கேள்வியைப் போட்டார்.

'' நான் என்ன இல்லாததைக் கூறி விட்டேன். உண்மையாகச் சொல்லும் எனக்கு இப்படி நல்ல கதைகளும் பாட்டுக்களும் எழுத வருமா? ''

'' அப்படியானால் நீர் சிவகாமிக்கு எழுதும் காதற் கடிதங்கள்'' என்று புன்னகை தவழ மீண்டும் ஒரு கேள்வியைப் பொட்டார்.

'' ஹூம் '' என்று பெரு மூச்சு விட்டுக் கொண்டே அது தான் ஒரு பிரமாதமாக்கும். நான் எழுதும் கடிதம் எங்கே? நீர் எழுதும் சுவை மிகுந்த, கற்பனை மிகுந்த கடிதங்களெங்கே? இரண்டுக்கும் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம் இருக்கும் பொழுது அதைக் கொணர்ந்து உம்முடைய கடிதத்திற்கு உவமையாகக் கூறுகின்றீரே!

'' சரி சரி நீர் வர வர மோசமாய்க் கொண்டு வருகிறீர். உம்மைச் சொல்லிக் குற்றமில்லை...... உம்முடைய மூளையைச் சொல்ல வேண்டும். ஏதாவது உமக்கு கற்பனையைப் பற்றியோ காதலைப் பற்றியோ தெரியுமா? சொல்லும். புஸ்தகமுண்டு, நீருண்டு அப்படி இருக்க...... ''

'' அது தான் எனக்கு. ஒன்றும் தெரியாதென்று முன்பே கூறி விட்டேனே. கற்பனையைப் பற்றியாவது, காதலைப் பற்றியாவது ஒரு எழுத்துக் கூடத் தெரியாது. சரி அதெல்லாம் இருக்கட்டும் கதையை நீர் கொடுக்கப் போகிறீரா? இல்லையா? ''

'' வந்து விட்டீரே வழிக்கு. எப்பப் பாரு இந்த எட்டைத் திருப்புகின்ற பழக்கம் போகின்றதில்லை. இன்னும் இரண்டு தினங்களுக்குள் கதையைக் கொடுத்தாக வேண்டும்- என்னைத் தொந்திரவு செய்யாதீர் '' என்று சிறிது முகத்தை சுளித்துக் கொண்டு கூறினார்.

ஆனால் நானா விடுபவன். '' சும்மா என் கோபப் படுகின்றீர். உங்களுடைய குட்டு யாருக்குத் தெரியாது என்று நினைக்கிறீர் அதெல்லாம் தெரியும் சார். தெரியும். அப்படியாவது இந்த எழுத்தாளர் வேஷம் போட்டு உங்கள் ஊருக்கு அருகிலுள்ள ரெட்டியா

197253

ரூரில் உள்ள மனோன்மணியை அடையலாம் என்று ... நீர். ஏன் அப்படித் தானே?

"ஆமாம் அப்படித்தான் வைத்துக் கொள்ளும். அதனால் என்ன?" என்று வந்த ஆனந்தத்தையும் அடக்கிக் கொண்டு வினவினார். "அவளையடைய முடியாது என்று எண்ணிக் கொண்டீரோ? இன்னும் கொஞ்ச காலத்தில் பாரும் அவள் என்னுடையவளாக இருப்பதைக் காண்பீர். கிணற்று ஜலத்தை வெள்ளமா கொண்டு போய் விடும்?" என்று பெருமிதத்துடன் கூறினார்.

"போதும் வீணாக ஆகாயக் கோட்டை கட்டாதீர். வீண் பேச்சு எதற்கு. நடக்கின்ற பொழுது பார்த்துக் கொள்ளலாம்."

"இதிலென்ன ஆகாயக் கோட்டை? நீரே பார்த்துக் கொண்டு இரும் இன்றைக்கு இல்லாவிட்டாலும் ஒரு நாளைக்கு அவள் என்னுடையவள்."

"அப்படியே ஆகட்டும். அதற்காக பிரார்த்தனை செய்கிறேன். அதையே தான் நானும் எதிர் பார்க்கிறேன்."

மௌனமாக ஆனால் ஆனந்தம் தவழும் முகத்துடன் என்னையே பார்த்துக் கொண்டு இருந்தார்.

"சரி கதையைத் தான் கொடுக்க மறுத்து விட்டீர், வெளியிலாவது வருகின்றீரா? இல்லையா?" என்று கேட்டுக்கொண்டே கட்டிலில் இருந்து எழுந்து தலையை வாரி விட்டுக் கொண்டு வெளியில் செல்லத் தயாராக நின்றேன்.

மறுத்துக் கூற மனமில்லாமல் அவரும் சென்று கலைந்திருந்த தலையை ஒழுங்காக வாரிவிட்டுக் கொண்டார். இருவரும் வெளியில் புறப்பட்டோம்.

மத்தியானம் கடும் வெய்யிலினால் தகப்பன் போல் தோன்றிய பகல் இப்பொழுது தண்மையான தாத்தாவைப் போலத் தோன்றியது. அத்தகைய வேளையில் சிறிது உலாவி வந்தோம்.

காலச் சக்கரம் கடமையைச் செய்தது. வருடங்கள் பல சென்றன. நான் எங்கள் ஊருக்குச் சென்று விவசாயத்தைக் கைக்கொண்டேன். வழக்கம் போல் சிறிது காலம் கடிதப் போக்கு வரவு நடந்தது. ஆனால் கொஞ்ச காலத்திற்கு பின் நின்று விட்டது.

சென்ற செப்டம்பரில் எனது மைத்துனன் ஊராகிய கரூருக்குச் சென்றிருந்தேன். அங்கு எதிர் பாராத விஷயமாக என் தோழரைக் கண்டேன். மகிழ்ச்சியுற்றோம். சிறிது நேரம் க்ஷேம சமாசாரங்களைப் பற்றிப் பேசிக் கொண்டே தெரு வழியாகச் சென்றோம்.

அப்பொழுது ஒரு 'சவர்லெட் கார்' எதிர்புரத்தில் உள்ள "சாரு விலாசின்" முன்பு வந்து நின்றது. அதனின்றும் ஒரு யுவதி இறங்கி அந்தக் கடைக்குள் சென்றாள்.

நான் என்னை அறியாமல் "இது யார் எங்கோ பார்த்திருக்கின்ற ஞாபகம் இருக்கின்றதே" என்று கேட்டேன்.

"ஞாபகம் இல்லையா உனக்கு... இவள் தான் மனோன்மணி. தற்பொழுது மிஸஸ் டாக்டர் கோபால். M. B. B. S. என்று கூறி முடித்தார். அவருடைய கையில் அழுக்கேறிய, அன்று எழுதிய 'பகற் கனவு' என்ற எழுத்துப் பிரதியும் இருந்தது.

ஜுபிடர் பிக்சர்ஸ்

Lessees of :

செண்ட்ரல் ஸ்டுடியோஸ் லிமிடெட்

கோயமுத்தூர்



இப்பொழுது தயாராகிவரும் படங்கள் :

அபிமன்யு கஞ்சன் கிருஷ்ண விஜயம் விப்ரநாராயணு மோஹினி வேலைக்காரி மனோஹரா இழந்த காதல்	— ஜுபிடர் பிக்சர்ஸ்
சுதர்சன்	— ராயல் டாக்கி டிஸ்டிரிபுயூட்டர்ஸ்
பில்ஹணன்	– சேலம் ஷண்முகா பிலிம்ஸ்
?	— ஸ்ரீ பானு பிக்சர்ஸ், மைசூர்.

Printed at the Vasanta Mills Press, and Published by K. P. Sundaram at 4/12 A. Trichy Road, Coimbatore. Editor: R. Thirug[illegible]nasambandam

பெண்கள் விரும்பும்
உயர்ந்த ஆபரணங்கள்
ஸ்வர்ண மாளிகை
பி. ஏ. ராஜு செட்டியார் & பிரதர்
வைரம், தங்க நகை வியாபாரிகள்
கடைத்தெரு - கோயமுத்தூர்